# உதயன்

சுடர்: 29 கதிர்: 308 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 14, செவ்வாய் 30.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

மேகமூட்டம்/மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுக்கம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04




நான் இல்லாமல் எதுவும் இல்லை

பக்கம் 18

# இராணுவத்தினரின் மத்தியில் நடந்தது ஆணைக்குழு அமர்வு

## புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் திடீரெனக் குவிந்தன நேற்று



படங்களின் தொகுப்பு 2 ஆம் பக்கத்தில்

யாழ்ப்பாணம், செப். 30
காணாமற்போனோர் குறித்து விசாரணைகளை மேற் கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு நேற்று பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. பிரதேச செயலகத்தினுள் சிவில் உடையில் தம்மை புலனாய்வுப் பிரிவினர்கள் என்று கூறிக்கொண்டவர்கள் நடமாடியதுடன், பிரதேச செயலகத்தின் வெளிச் சுற்றாடலில் அதிகளவு இராணுவத்தினர் சீருடையிலும் நின்றிருந்தனர். அதனால் அமர்வு காலையில் பதற்றமான சூழ்நிலையிலேயே ஆரம்பமானது. இவ்வாறான சூழ்நிலையில் கடந்த இரு நாள் அமர்வுகளை விடவும் நேற்றைய அமர்வில் திடீரென தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான குற்றச் சாட்டுகள் அதிகளவில் முன்வைக்கப்பட்டன.
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்

22 ஆம் பக்கம் பார்க்க

## "யாருக்குத் தெரியும் எங்கட கஷ்டம்?"



இராணுவ வாகனத்தில் கொண்டுவந்து இறக்கப்படும் மக்கள்.

யாழ்ப்பாணம், செப்.30
"நேற்றுத்தான் விசாரணை முடிச்சுப் போய் அப்பதான் சாறி கழட்டுறன். வாறாங்கள் ஒரு ஏழு, எட்டுப் பேர். வந்தவங்கள்- நாளைக்கும் விசாரணை இருக்காம், உடனடியா போங்கோ எண்டுறாங்கள். இண்டைக்கு விடிய 6 மணிக்கெல்லாம் படலேக்க நிக்கிறாங்கள். என்னெண்டு கேட்டா விசாரணை இருக்கு போங்கோ, போங்கோ எண்டுறாங்கள். மனிசர இருக்க, நிக்க விடுறாங்கள் இல்ல"- இப்படி ஆதங்கப்பட்டார் நேற்று பூநகரியில் நடைபெற்ற ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க வந்திருந்த வயதான தாயொருவர்.

22 ஆம் பக்கம் பார்க்க


## 'கிறீஸ்' பூசிய நிலையில் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.30
'கிறீஸ்' பூசி பாதுகாப்பாகப் பெட்டிகளுக்குள் வைக்கப்பட்ட நிலையில் ஆர்.பி.ஜி. குண்டுகள் மற்றும் கைக் குண்டுகள் என்பன கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று பளை பொலிஸார் தெரிவித்தனர். பளை, புன்னையடியில் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்தே இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.
ஆர்.பி.ஜி. குண்டுகள் 10 மற்றும் கைக்குண்டுகள் 25 ஆகியனவே மீட்கப்பட்டுள்ளன. கிணற்றினுள் ஆயுதங்கள் இருப்பது தொடர்பில் காணி உரிமையாளர் பொலிஸாருக்குஅறிவித்ததைஅடுத்து, பொலிஸார் இராணுவத்தினருக்கு அறிவித்தனர். அதன் பின்னர் இராணுவத்தினரால் அவை மீட்கப்பட்டுள்ளன.(ந-4)




பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயக்குமாரி உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று கோரி நேற்று மாலை கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

## காவி உடையால் எதுவும் முடியும்



பக்கம் 9

## இரண்டு தினங்கள் பெய்த மழையால் 809 பேர் பாதிப்பு

### வவுனியா மாவட்டத்தில்

வவுனியா, செப்.30
வவுனியா மாவட்டத்தில் இரு தினங்களில் பெய்த மழையால் 216 குடும்பங்களைச் சேர்ந்த 809 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்றும், 8 வீடுகள் முழுமையாகவும், 219 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் இடர் முகாமைத்துவ வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.
கடந்த பல மாதங்களாக வடக்கு மாகாணத்தில் கடும் வறட்சி நிலவி வருகின்றது. இந்தநிலையில் கடந்த வாரம் முதல் மழை வீழ்ச்சி கிடைக்க ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் வவுனியா மாவட்டத்தில் கடந்த 23 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் கன மழை பெய்துள்ளது. அதில் 3 பிரதேச செயலர் பிரிவுகளில் 216 குடும் பங்கள் பாதிப்படைந்துள்ளன.
கடந்த 23 ஆம் திகதி பெய்த மழையால் வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 142 குடும்பங்களைச் சேர்ந்த 590 பேர் பாதிப் படைந்துள்ளனர். அத்துடன் 2 வீடுகள் முழுமையாகவும் 139 வீடுகள் பகுதியளவிலும் சேதடைந்தன. வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 65 குடும்பங்களைச்சேர்ந்த 192

22 ஆம் பக்கம் பார்க்க

## பிணை கோரி மனு



பக்கம் 8

## வெற்றிலைக்கேணியில் காணி அளப்பு மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.30
வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணியில் இராணுவத்தினரின் தேவைகளுக்காக சுவீகரிக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ள 700 ஏக்கர் காணிகளை அளவிடும் முயற்சிகள் நேற்று பொது மக்



22 ஆம் பக்கம் பார்க்க

## ருசி கண்ட திருடன் சிக்கினான் வசமாக

யாழ்ப்பாணம், செப்.30
வள்ளியின் வெள்ளி முடியைத் திருடி ருசி கண்டவர், தெய்வானையின் முடியையும் திருட முற்பட்டபோது பொதுமக்களிடம் வசமாகச்


22 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் 4 பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம், செப்.30
படகு பாறையில் சிக்குண்டதால், கடலில் தத்தளித்த நிலையில் மீட்கப்பட்ட இந்திய மீனவர்கள் 4 பேரையும் எதிர்வரும் ஒக்ரோபர்

22 ஆம் பக்கம் பார்க்க

### பாசிக்குடா கடலில் நீராவி கப்பல் சிதைவுகள்



கொழும்பு, செப்.30
பாசிக்குடா கடற்பரப்பில் மூழ்கியிருந்த நீராவி கப்பல் ஒன்றின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று காலி சமுத்திர தொல்பொருள் பிரிவு தெரிவித்துள்ளது.
கிழக்கு கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஆராய்ச்சிகளின் போது இந்த சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று தொல்பொருள் நிபுணர்கள் கூறியுள்ளனர்.
இரண்டு வருடங்களுக்கு முன்னரும் பாசிக்குடா கடற்பரப்பிலிருந்து மூன்று கப்பல்களின் சிதைவுகள் மீட்கப்பட்டிருந்தன.
இந்த அனைத்து கப்பல்களும் 19 ஆம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்று அனுமானிக்கப்பட்டுள்ளது என்று தொல்பொருள் நிபுணர் ரசிக்க முத்துகுமாரன தெரிவித்துள்ளார்.
கப்பல்களின் அனேகமான பாகங்கள் உடைந்துள்ள நிலையில் அவை எந்தக் காலப் பகுதியைச் சேர்ந்தவை என்பதைச் சரியாக உறுதிப்படுத்த முடியாமற்போயுள்ளது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# அச்சுறுத்துகிறது பொதுபல சேனா

## ஜனாதிபதியிடம் முறையிட்டது முஸ்லிம் பேரவை

கொழும்பு, செப்.30
பொதுபல சேனா அமைப்பு முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது என்று ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளது முஸ்லிம் பேரவை. பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலர் ஞானசாரர் விடுத்துள்ள கருத்துத் தொடர்பிலேயே இவ்வாறு முறையிடப்பட்டுள்ளது.
பொது பல சேனா அமைப்பின் மாநாட்டில் உரையாற்றிய ஞானசார தேரர், மியான்மார் பௌத்த மதகுருவுக்கு இலங்கைக்கான நுழைவிசைவு வழங்கக் கூடாது என்று முஸ்லிம் பேரவை கோரியிருந்தது. அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.
இந்தநிலையிலேயே முஸ்லிம் பேரவை இதுகுறித்து ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளது. "அண்மையில் அளுத்கம பேருவளை போன்ற இடங்களில் இடம்பெற்ற துர்ப்பாக்கியமான சம்பவங்கள் ஏற்பட பொதுபல சேனா போன்ற கடும்போக்குடைய இயக்கங்களே காரணம். முஸ்லிம் மக்களுக்கு எதிராக பௌத்த கடும்போக்குவாதிகள் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்."- என்று முஸ்லிம் பேரவை தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது. (ற)



நீதிவான் சலீம் மர்ஸூப் பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுத் திங்கட்கிழமை அலரிமாளிகையில் பதவியேற்றார். (ற)

# தேவையான ஓய்வின் பின்னரே படிப்பு அதுவே என் வெற்றியின் இரகசியம்

## தரம் 5 புலமைப் பரிசிலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் பெற்ற ஆதித்தியா கூறுகின்றார்

யாழ்ப்பாணம், செப்.30
"தேவையான ஓய்வை எடுத்த பின்னரே நான் வகுப்புகளுக்குச் செல்வேன். அதனால் படிக்கும் விடயங்களை விளங்கிக் கொள்ளமுடிந்தது. அப்பாவைப் போல பொறியியலாளனாக வரவேண்டும் என்பதே எனது இலக்கு என்று கூறுகின்றார் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 193 புள்ளிகளைப் பெற்று வடக்கு மாகாணத்தில் இரண்டாம் இடத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ள கெங்கேஸ்வரன் ஆதித்தியா.
விஸ்வமடு விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலையில் பயிலும் ஆதித்தியாவை வாழ்த்திய 'உதயன்' இந்த வெற்றி குறித்த அவரின் அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டான்.
"நான் பாடசாலைக்கும் சென்றேன் ரியூசனுக்கும் சென்றேன். 192 புள்ளிகள் பெற்றுச் சித்தி பெறுவேன் என்று எதிர்பார்த்தேன். ஒரு புள்ளி அதிகமாக 193 புள்ளிகள் கிடைத்துள்ளது. பாடசாலையிலிருந்து வந்து அரைமணி நேரம் தூக்கம். பின்னர் ரியூசனுக்குப் போவேன். வீட்டிலும் படிப்பேன். தொலைக்காட்சி பார்ப்பேன். அதிகாலையில் ஒரு மணி நேரம் படிப்பேன். தேவையான ஓய்வை எடுத்த பின்னரே வகுப்புகளுக்குச் செல்வதால் குழப்பம். களைப்பு இன்றி படிக்கும் விடயங்களை உடனுக்குடன் விளங்கிக்கொள்ள முடிந்தது. அதனால் வெற்றி பெற்றேன். வகுப்புகளுக்குத் தவறாது செல்ல வேண்டும். படிக்கும் விடயங்களை அன்றன்றே படிப்பதன் ஊடாக வெற்றி பெறமுடியும்"- என்று நம்பிக்கையுடன் கூறுகின்றான் ஆதித்தியா.



"உனக்குத் தேவையான ஓய்வை எடுத்த பின்னரே வகுப்புகளுக்குப் போகவேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவை தான் மகனுக்கு அறிவுறுத்துவேன். பலரிடம் ரியூசனுக்கு அனுப்புவதனைவிட சிறந்த ஒருவரிடம் மாத்திரம் ரியூசனுக்கு அனுப்புவதே சிறந்தது"- என்று தெரிவித்தார் ஆதித்தியாவின் தந்தை கெங்கேஸ்வரன். (ற-4)

### வாக்காளர் பதிவுகள் இன்றுடன் நிறைவு

கொழும்பு, செப்.30
2014ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் சீர்திருத்தம் இன்றுடன் நிறைவடைய உள்ளது என்று தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. தேர்தல்கள் செயலகத்தின் பிரதி ஆணையாளர் எம் எம் மொஹமட் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
இந்த நிலையில் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் தமது பெயர்களை பதிவு செய்ய விரும்புகின்றவர்கள் இன்று பதிவு செய்து கொள்ளுமாறும் அவர் கோரியுள்ளார். எதிர்வரும் தேர்தல்கள், புதிய வாக்காளர் பெயர் பட்டியலின் படியே இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ற)

காணாமற்போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு நேற்று கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. உறவுகளைத் தொலைத்த பலர் அமர்வில் சாட்சியம் அளித்தனர். (ற-21)




















Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 14 செவ்வாய் (30.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 308

# உள்நாட்டு, வெளிநாட்டுக் கொடையாளர் கைகளிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம்

## வவுனியாவில் கூறினார் வடக்கு முதலமைச்சர்



வவுனியா, செப். 30

**வசதி படைத்த எமது உள் நாட்டு, வெளிநாட்டு மக்கள் வசதி குறைந்த எமது மக்களுக்கு எந்தளவுக்கு நேசக் கரத்தை நீட்டி நேர்மையான நன்மைகளையும் நலன்களையும் பெற்றுக்கொடுக்க முன் வருவார்களோ அதில் தான் எமது வருங்காலம் அடங்கியுள்ளது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் நேசன் பொப்பூலர் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ்ஸின் வவுனியாக் கிளை திறப்பு விழா நேற்று இடம்பெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இன்று ஜனநாயக நாடுகளில் மூன்று விதமான சக்தி பீடங்கள் அதிகாரம் செலுத்தி வருகின்றன. முதலாவது அரசு. அடுத்தது தனியார் துறை. மூன்றாவது அரசசார்பற்ற நிறுவனங்கள். மூன்றையும் தொழிற்திறன் மிக்கதாக ஆக்குவது எமது கடமை. இன்றைய மத்திய அரசு பல விதங்களில் மற்றைய இரண்டையும் வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தாலும் மாகாண அரசைப் பொறுத்த வரை மூன்று நிறுவனங்களையும் சமமாகத்தான் பார்க்கின்றோம். வடக்கு மாகாண சபையைப் பல விதங்களில் செயலிழக்கச் செய்து எம்மால் எதுவும் செய்ய முடியாது என்று உலகறியச் சொல்லி வரும் அரசிடம் இருந்து நாம் அதிகமாக எதிர்பார்க்க முடி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு - மு.கா.சந்திப்பு இவ்வாரம் கொழும்பில்

கொழும்பு, செப்.30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையிலான சந்திப்பு இந்தவார இறுதியில் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

அரசியல் தீர்வு விடயத்தில் முஸ்லிம்களையும் இணைத்து செயற்படுவது தொடர்பாக மேற்படி இரு கட்சிகளும் கடந்த சனிக்கிழமை 27 ஆம் திகதி கல்முனையில் சந்தித்துப் பேசத்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க அரசுடன் பேசுவதே சிறந்த வழி

### கூட்டமைப்பிடம் கூறினாராம் மோடி; மஹிந்தவிடம் அவரே தெரிவிப்பு

புதுடில்லி, செப். 30

இலங்கை அரசுடனான கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சே சிறந்த வழி எனத் தன்னைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தாம் தெரிவித்தார் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபை கூட்டம் நடைபெறும் நியூயோர்க்கில் இந்திய - இலங்கை தலைவர்கள் சந்தித்து பேச்சுக்களை மேற்கொண்டனர்.

இந்தச் சந்திப்பு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்ட தகவலிலேயே மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரு தலைவர்களிடையே இவ்வருடம் இடம்பெறும் இரண்டாவது சந்திப்பு இதுவாகும். இந்தச் சந்திப்பின்போது இந்தியாவின் உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் உதவித்திட்டங்கள் குறித்து இரு தலைவர்களும் கலந்துரையா

(22 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம், செப் 30

ஜனாதிபதியின் வடக்குக்கான பயணத்தை முன்னிட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பல இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்காகப் பொலிஸார் சிவில் உடையில் வீடுகள், கடைகள், நிறுவனங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களின் விவரங்களைப் பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு நாள் பயணமாக எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்குக்கு வரவுள்ளார். அதற்காக வலி.வடக்குப் பகுதிகளில் வீட்டு வேலிகள் இராணுவத்தினரால் அகற்றப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில் தற்போது பரவலாகப் பொலிஸார் ஆட்பதிவு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஜனாதிபதி வந்து செல்லும் இடங்கள் எங்கும் அவ்வாறு பொலிஸார் பதிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். வலிகாமம், காங்கேசன்துறை உள்ளிட்ட பல

(22 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் உத்தரவிலேயே மின் கட்டணம் குறைப்பு

கொழும்பு, செப். 30


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவுக்கமைய மின் கட்டணம் 25 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது என்று மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

கடந்த 16ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும், இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரங்களில் வெளியிடப்படும் எனவும் அவர் கூறினார்.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிதி அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை இணைந்து மேற்கொண்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (கு)

## கட்டுப்பாடிழந்த ஓட்டோ மின் கம்பத்துடன் மோதியது

### 9 வயது மாணவனுக்குக் கால் முறிந்தது



யாழ்ப்பாணம், செப். 30

பாடசாலையில் போட்டிகள் முடிவடைந்த பின்னர் அதில் பங்கு பற்றிய மாணவர்களை ஏற்றிச்சென்ற ஓட்டோ ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியது. இதனால் ஓட்டோவில் பயணித்த மாணவனான எஸ்.கிருசாந் (வயது - 9) கால் முறிந்து படுகாயமடைந்தார். மேலும் இரு மாணவர்கள் காயங்களுக்கு உள்ளானார்கள்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் 12.10 மணியளவில் பொன்னாலையில் இடம்பெற்றது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் உற்பத்திக் கிராமங்கள் வடமாகாணத்தில் உருவாக்கம்

யாழ்ப்பாணம், செப்.30

கிராம ரீதியான உள்ளூர் உற்பத்தியாளர்களை ஒன்றிணைக்கும் வேலைத் திட்டத்தில் கிராமிய உள்ளூர் உற்பத்திக் கிராமங்கள் வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உருவாக்கப்பட்டு வருவதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஞானசோதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கைத்தொழில் சார்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்களை இனங்கண்டு அவர்களது தொழில் திறமைகளை ஊக்குவித்து உற்பத்திகளை அதிகரிக்கச் செய்யவும், அவர்களுக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடனும் வடக்கில் கிராமிய உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வேலைத்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்யவுள்ளனர் ஐ.நா. நிபுணர்கள்

கொழும்பு, செப். 30

இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் மதிப்பீடு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவில் மற்றும் அரசியல் சட்டங்களுக்கான சர்வதேச பிரகடனம் நடைமுறைபடுத்தப்படுவதைக் கண்காணிக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மனித உரிமைக் குழு, இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையில் ஜெனிவாவில் இந்தக் குழுவின் கூட்டம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி இலங்கை குறித்து மீளாய்வு செய்யவுள்ளது.

புருண்டீ, ஹெய்ட்டி, மோல்டா, மொன்டன்கரோ, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் தொடர்பி

(22 ஆம் பக்கம் பரர்க்க)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

தரம் 5 புலமைப் 'பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்த சனிக்கிழமை வெளியாகின. இதன் அடிப்படையில் பாட சாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட மாணவர்களின் பெறுபேறுகள் வருமாறு:-

**நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை**
மு.அனுதர்சன்-180, த.தரங்கினி-178, யோ.அகல்யன்-177, ப.கிசாளினி-177, சி.அட்சையா-177, பா.லகீசன்-177, உ.அர்சனா-173, பா.பானுஜன்-173, அஸ்வினி-172, உ.கபிஸ்கா-171, ர.பிரணவர்த்தன்-170, வி.தக்சிதா-169, பா.பிரபாஜிதன்-168, தி.அபிஷேக்-166, வி.ஜொனேசன்-164, செ.சதுர்ஜன்-163, க.கிசான்-163, செ.கிருசிகன்-165, வ.மிதூன்-160, பா.செம்பூவினி-166, நே.சந்துரு-160, சு. பிரணவன்-161, செ.சபர்ணா -166, யோ.கவிசாயினி-169, ச.ஹரிசிருஷ்ணி-159. (வ-9-109)

**கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்**
ம.விஸ்ணுஹன்-186, ம.கிருஷன்-184, ஜெ.ஆசிஷ்-174, கி.ஆதித்தன்-173, ம.ஜிந்துஷன்-171, இ.சிந்துஜா-170, ஜெ.ராகவிகா-169, சி.யதுஷனா-168, அ.சாரங்கன்-167, ர.நிலாவிழி-167, மோ.தனுஜா-167, ம.ஹம்சா-166, த.ரமியா-166, ஞா.கிருஷிகன்-165, க.சுவஸ்திகா-160, கு.தருண்-160, தெ.கிஷாந்தன்-159, கே.லதுர்சிகா -158. (வ-109)

**கொடிகாமம் திருநாவுக் கரசு ஆரம்பப் பாடசாலை**
ந.ஆரதி-184, லி.கஜானி -177, வி.கம்சி-172, சு.சஞ்சுதன்-168, சி.திலக்ஸன் - 167, சி.திஸானா -165, சி.தியாஞ்-164, ப.ஆகாஸ் - 164, ம.தர்சிகா -163, ஜே.நேருஜா- 158. மேலும் 27 மாணவர்கள் 100இக்கு மேல் புள்ளிகள் பெற்றுள்ளனர். (9)

**கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை**
க.சுரபினி - 186, தி.திருமகள் - 186,மு.பிரவீணா-183, இ.தசிகா - 180, ச.ரோபிகன்- 179, கே.கிஷாங்கி - 178, ச.தனுஷியன் - 177, அ.அருளகன் - 176, த.சகானா - 176, ப.திலக்ஷன் - 175, த.சுஜீவன் - 175, சு.டிலக்ஷன் - 174, ச.ஜனார்த்தனன் - 173, அ.ஹம்சிகா - 173, ஜோ.கிஷேன் கவிஷ்கா - 173, உ.கஜிதா - 173, இ.பாமிலா - 173, சி.ஹரிவிஷ்ணு - 172, க.பமித்ரா - 172, பா.மஹிஷா - 172, அ.மதுரா - 172, சு.ஹரிப்பிரசாத் - 171, க.விஸ்னுவரன் - 171, ப.விஸ்ணுகா - 171, இ.பிரவீன்குமார் - 170, ர.சஞ்சயன் - 169, கோ.வேணுதர்சன் - 169, க.அஜீலன் - 169, ஜெ.டினுஷன் - 169, க.அர்ச்சனா - 169, ம.டிலோசன் - 168, ச.அனுசிகா - 168, வெ.அபிநயா - 168, ந.வைஷ்ணவி - 167, ஆ.அபிஷாலினி - 167, த.அபிஷேக் - 166, உ.கிருபரன் - 166, கி.பிரணவன் - 165, க.நவிந்தன் - 165, ச.தஸ்மினா - 164, ற.சதுர்ஷன் - 163, ட.சானுஜா - 163, த.பிரதீஷன் - 162, சி.வரகுணன் - 162, ந.பிரணவி - 160, ஜெ.கலையரசன் - 160, வி.தனுப்பிரியன் - 160, ச.யதுர்சன் - 160, ஆ.நிருஸ்ஷா - 160, அ.ரக்ஷிகா - 160, க.வைஸ்ணவி - 160, வி.கௌரி - 159, லி.திபிஜா - 159, ச.தனுஸ்ராஜ் - 158.

**ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை**
சி.ஜெதுஷாயினி -182, சா.கலியுகன்-178, ம.கயன்-173, கே.டிலாணி-174, இ.கேசவன்-172, ஜெ.சர்வின்-166, கே.நிதுஷா-162, இ.யதுர்சன்-158, ர.அபிஷாயினி -158

**துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்**
ஸ்ரீ.நிகேதன்-180, தி.அனுசா-178, சி.லதாங்கி-175, பொ.ஆதிகா-173, ஜெ.தனுசாந்-173, பா.நிலக்சன்-171. (109)

**கரணவாய் தாமோதரா வித்தியாலயம்**
ஜெ.காயந்திகா-168, ஜெ.லக்சிகா-167, சி.பிரபாசினி-162, த.அபினா-161, பு.புதினன்-161, பா.ஜதுசா-161, க.தனு ராஜ்-159.

**கட்டைக்காடு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**
ராஜ்குமார் பிரணவி-168.

**கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை**
ம.யுவராஜ்-163, க.கிசானி-175.

**திரு இருதயக் கல்லூரி**
அருட்சயா-168, யோன்ராஜ்-166, சஞ்சிகா-160. (109)

**கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி**
வி.மதுமிதா-183, கௌ.அஹிம்ஷா -180, க.சங்கவி-178, ஸ்ரீ. சங்கீர்த்தன் - 175, ஜெ.கிருஷாந்-174, கே.பிரஷாயினி-174, ச.சஜிதன்-173, ர.நிலோசன்-171, த.தமிழினி-169, ஜெ.அபிநயன்-168, சு.சேந்தினி - 168, தி.ஷியானா-167, நா.கேசவன் - 165, சி.டஜீவன்- 164, ஸ்ரீ.துர்க்கா-163, அ.பிரகாசினி- 163, ந.கெனற்சாரோன் - 161, அ.யசோதா-158.

**வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்**
சொ.கோவர்த்தனி - 182, உ.பிரவீன்- 178, ஜெ.தனோஜா- 174, தெ.வித்தகி- 167, சி.ஒளி நிலா- 162, சி. ஈகைநிலா - 158.

**வட இந்து ஆரம்பப் பாடசாலை**
கோ.ஷியானி-186, அ.சிவானி-180, வ.அபிசா-176, ரா.அஸ்விகா-176, ச.கம்ஷா-174, வ.கர்சினி-174, ந.லக் ஷனா-173, நே.கிரிஜா-171, க.அனுராஜி-170, ஜெ.வைஸ் ணவி-169, ந.தமன்ஜா-169, மு.றம்மியா-164, ந.மகிழினி-164, கி.நிமேதா-158.

**பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்**
ஸ்ரீ.விதுரன்-182, வ.யதுசன்-180, அ.திபாகர்-176, சா.வி.டனுசியா-175, ர.அர்ச்சனா-171, சி.சிவானுஜன்-159, கு.கலைக் குமார்-158.

**நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை கரவெட்டி**
மு.அனுதர்சன்-180, த.தரங்கினி-178, யோ.அகல்யன்-177, ப.கிசாளினி-177, பா.லகிசன்-177, சி.அட்சயா-177, உ.அர்ச்சனா-173, பா.பானுஜன்-173, தே.அஸ்வினி-172, உ.கபிஸ்கா-171, ர.பிரணவர்த்தன்-170, வி.தக்சிதா-169, யோ.கவிசாயினி-169, பா.பிரபாஜிதன்-168, தி.அபிசேக்-166, செ.சபர்ணா-166, பா.செம்பூவினி-166, செ.ஹிருசிகன்-165, வி.ஜெரோசன்-164, க.கிசான்-163, செ.சதுர்ஜன்-1 63, வ.மிதூன்-162, சு.பிரணவன்-161, நே.சந்துரு-160, ச.ஹரிகிருஷ்ணி- 159.

**கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்**
ச. பிரசாந்-187.

**கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்**
பூ.சாருஜா-182, பா.தர்மினி-174, செ.றெக்ஷி-162.

**யாழ்.சன்மார்க்க ம.வி.**
மூ.டிலக்சன்-182, தி.கிருஷாந்த்-167.

## வெட்டுப்புள்ளி - 157 கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு

யாழ்ப்பாணம், செப்.30
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் படி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான வெட்டுப் புள்ளி 157 ஆகும்.
உதயனின் நேற்றைய பதிப்பில் கிளிநொச்சி, முல்லைத் தீவுக்கான வெட்டுப்புள்ளி 147 என வெளியாகி இருந்தது. இது தவறாகும். இவ்விரு மாவட்டங்களுக்கும் வெட்டுப்புள்ளி 157 என்பதே சரியானதாகும். தவறுக்கு வருந்துகிறோம். (ஒ)

## வாணி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.30
நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழக் கலவன் பாடசாலையின் வாணிவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இந்து மாமன்றத் தலைவர் செல்வன் மு. அனுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சின்னையா சிவராசா கலந்து கொள்வார். (வ)

◆◆◆

வண்ணை-சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகமும் அற நெறிப்பாடசாலையும் இணைந்து நடத்தும் வாணி விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.
சைவ சமய அபிவிருத்திக் கழகத் தலைவர் இரா.செல்வ வடிவேல் தலைமையில் நடைபெறும் இந்த வாணி விழாவுக்கு பிரதம விருந்தினராக சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத் தலைவர் செ. சுப்பிரமணியம் கலந்து கொள்வார். (வ)

## மாணவர்களுக்கு கற்றல் சாதனங்கள்

யாழ்ப்பாணம், செப்.30
மானிப்பாய் சிற்றி லயன்ஸ கழகத்தால் லயன் மகேந்திரன் அனுசரணையில் மாணவர்களுக்கு கற்றல் உப கரணங்களும் உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன.
மேற்படி நிகழ்வு லயன் சி.நாகையா தலைமையில் அண்மையில் சாவற்கட்டு கிராமத்தில் அமைந்துள்ள மகாத்மா சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. 150இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்குகற்றல்உபகரணங்களும் வழங்கப்பட்டன. முதியோருக்கும்உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன. (வ)

## மின்சாரம் வழங்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.30
கொடிகாமம் தெற்கு ஜே/328 தவசிக்குளம் கிராமத்தின் சில பகுதிகள் இரவில் இன்னமும் இருளின் மத்தியிலேயே மூழ்கியுள்ளன. எனவே அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குமாறு கொடிகாமம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளனது.
இதுதொடர்பாக சங்கம் மேலும் தெரிவித்துள் ளதாவது:
குறிப்பாக 700 மீற்றர் தூரம் வரையான கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலைய முன்வீதி, மற்றும் 700 மீற்றர் தூரம் வரையான நாச்சிமார்கோயில் பாலர் பாடசாலை முன் வீதி ஆகியன மின்சாரம் இன்றி இருளில் மூழ்கி யுள்ளன.
இதுதொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு குறிப்பிட்ட பகுதிகளுக்கு மின்சாரம் பெற்றுத்தருமாறுவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ)

## தேசிய ரீதியில் மாவனல்லை மாணவி தமிழ் மொழி மூலத்தில் முதலிடம்



யாழ்ப்பாணம், செப்.30
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் படி தமிழ்மொழி மூலமான பரீட்சையில் மாவனல்லை சாஹிராக் கல்லூரி மாணவி பாத்திமா சமா, 197 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.
இது தொடர்பில் குறிப்பிட்ட மாணவி கருத்துத் தெரிவிக்கையில்;
இந்தச் சந்தர்ப்பத்தில் முதன் முதலாக அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பதுடன் என்னுடைய கல்வி நடவடிக்கைகளுக்கு துணை புரிந்த பாடசாலை அதிபர் கே. எம். பௌமி, ஆரம்பப் பிரிவு ஆசி ரியர் எம். இஸட். எம். ஐயூப், வகுப்பாசிரியர் எம். பீ. எம். பழீல் ஆகியோருக்கும் மற் றும் என்னுடைய பெற்றோ ருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.
அத்துடன் என்னுடைய பெறுபேறுகளைக் கேட்டு யாரோ சந்தோசம் அடைகின்றார்களோ அனைவருக்கும் இந்தச் சந்தர்ப் பத்தில் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னுடைய கல்வி முயற்சியைத் தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வேன் என்றார்.
அதிபர் கே.எம்.பௌமி கருத்துத் தெரிவிக்கையில்;
இந்த முறை இந்த மாணவி 197 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மாணவியுடைய வளர்ச்சியை தரம் 3 முதல் காணக் கூடியதாக இருந்தது. பாடசாலையில் நடத்தப்படும் பரீட்சைகளில் பெரும்பாலும் 100 புள்ளிகளையே அவர் பெறுவார்.
அது மாத்திரமல்ல ஏனைய தமிழ்த் தினப் போட்டிகளிலும் பங்கு பற்றி முதலிடங்களைப் பெற்றுள்ளார்.
கல்வித்துறையில் முதன்மை பெற்று விளங்கும் எமது பாடசாலைக்கு இந்த மாணவியுடைய பெறுபேறு இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு மேன்மேலும் பெரும் உந்து சக்தியாக அமையும். இந்த சமயத்தில் இதற்காகப் பாடு பட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் மற்றும் இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன் - என்றார். (வ)

## மரத்திலிருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், செப்.30
தென்னைமரத்தில் தேங்காய் பிடுங்குவதற்காக ஏறிய குடும்பஸ்தர் அதிலிருந்து தவறி விழுந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மு.ப10.30 மணியளவில் கரணவாய் மேற்கில் இடம் பெற்றுள்ளது.
இதில் சிற்றம்பலம் குலவீரசிங்கம் (வயது-48) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.
சமையல் தேவைக்காக தேங்காய் பிடுங்க தென்னை மரத்தில் ஏறிய போது கால் தவறி கீழே விழுந்ததில் படுகாயமடைந்த அவர், உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போது வழியில் உயிரிழந்தார்.
அவரது உயிரிழப்புக் குறித்த இறப்பு விசாரணையை இறப்பு விசாரணை அதிகாரி பாஸ்கரன்மேற்கொண்டார். சடலம் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் நேற்றுமுன்தினம் மாலை கையளிக்கப்பட்டது. (வ)

## நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி, செப்.30
சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் நடை பெற்றது.
கூட்டத்துக்கு விருந்தி னர்களாக தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் திருமதி சுதாகரும், கிராம அலுவலர் பொ.லோகேந்திரனும் கலந்து கொண்டனர்.
நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவி-திருமதி ம.கீர்த்திநாதன், உப தலைவி-திருமதி செ.உமாதேவி, செயலாளர்- திருமதி அ.ஸ்ரீசுசாந்தி, உதவிச் செயலாளர்-திருமதி சி.நாகேஸ்வரி,பொருளாளர்- திருமதி.த.அமுதகௌரி, காப்பாளர்- திருமதி கு.இராசரத்தினம். இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர் களாக மேலும் 8 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (வ-9)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 30
வட மாகாணத்திலுள்ள ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களின் நலன்கருதி இந்தி யாவில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற் படிப்புக்குச் செல்ல விரும்பும் மாணவர் களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
வட மாகாண கல்வி அமைச்சும் இந்தியத் தூதர கமும் இந்திய கல்வி வழிகாட்டல் நிறுவனத்துடன் இணைந்து இந்தக் கருத்தரங்கை நடத்தவுள்ளன. உயர் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் யாழ்.மத்திய கல்லூரியில் நாளை நடைபெறவுள்ள இந்தக் கருத்தமர்வில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுக் கொண்டுள்ளார். (வ-4)

## மயானங்கள் துப்புரவு



யாழ்ப்பாணம், செப். 30
அச்சுவேலி, வல்லையில் அமைந்துள்ள கிறிஸ்தவ மயானமும், இந்து மயானமும் அண்மையில், வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவரின் தலைமையில் சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.
இந்த சிரமதானப்பணியில் அச்சுவேலி பிரதேச மக்கள், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள், சபையின் பணியாளர்கள் மற்றும் அச்சுவேலி பொலிஸாரும் ஈடுபட்டனர். (வ-5-11)

# உவராகி வரும் கிணற்று நீர்

யாழ்ப்பாணம், செப்.30
யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாக இயந்திரம் மூலம் பெருமளவு குழாய்க் கிணறுகள் குறைந்த கட்டணத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் நிலத்தடி நீரின் பாவனை அதிகரிப்பால் அனைத்து கிணறுகளின் நீரும் உவர்த்தன்மை அடையும் நிலை காணப்படுகிறது.
இவ்வாறு பெருமளவு குழாய்க் கிணறு அமைக்கும் நிலை நீடிக்குமானால் விரைவில் எமது பிரதேசத்தில் ஆபிரிக்க நாடுகள் போன்று குடிதண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மாகாண சுற்றாடல் அமைச்சு மாவட்டத்தில் குழாய்க் கிணறுகளை அமைப்பதைத் தடை செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று சமூகவியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.
குடியிருப்புக் காணிகளில் கிணறு அமைப்பதாயின் அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் அனுமதி பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், குழாய்க் கிணறுகள் அனுமதி பெறப்படாமல் வகை தொகையின்றி காணிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.
இயந்திரங்கள் மூலம் தோண்டப்படும் குழாய்க் கிணறுகள் குறிப்பிட்ட ஆழத்துக்குக் கீழ் கடல் நீர் மட்டம் வரை துளையிடப்படுவதால் நிலத்தடி நீர் உவர்த்தன்மை அடைவதுடன் ஏனைய நீர்ப்பரப்பையும் உவர்த்தன்மைக்கு மாற்றி விடும் அபாயம் உள்ளது.
உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் உடனடியாக தலையிட்டு குழாய்க் கிணறுகள் அமைப்பதைத் தடை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கை கழுவுதல் தினத்தை முன்னிட்டு போட்டிகள்

தென்மராட்சி, செப். 30
உலக கைகழுவுதல் தினத்தையொட்டி தென்மராட்சி கல்வி வலயத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கட்டுரை, சித்திரம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளிடமிருந்து கோரப்படவுள்ளன.
'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் முதன் முறையாக நடத்தப்படவுள்ள போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ஒக்ரோபர் 10 ஆம் திகதி வலயத்தால் நடத்தப்படவுள்ள கை கழுவுதல் தின விழாவில் முறையே 5 ஆயிரம், 3 ஆயிரம், 2 ஆயிரம் ரூபாக்கள் பணப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன் பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கவுள்ளதாகவும் வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.
இதேவேளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சித்திர பாடம் தொடர்பான கலாசார நிகழ்வும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (வ- 9)

## ஏடு தொடக்கல்

வவுனியா, செப்.30
வவுனியா ஆதி விநாயகர் ஆலயத்தில் கடந்த 24ஆம் திகதி ஆரம்பித்த நவராத்திரி விரத பூசைகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.
எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விஜயதசமி விழா இடம்பெறும். அன்று காலை வித்தியாரம்பம் எனப்படும் ஏடு தொடக்குதல் ஆலய வசந்த மண்டபத்தில் இடம்பெறும். இதனை தமிழருவி த.சிவகுமாரன் நடத்தி வைப்பார். ஆலய பூசைவழிபாடுகளை சிவஸ்ரீ சி.திவாகரக் குருக்கள் நிகழ்த்திவருகிறார். (வ-402)

# பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து விழிப்புணர்வு

தென்மராட்சி, செப்.30
வடமாகாண கல்வி அமைச்சால் யாழ். மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கான வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சி செயலமர்வு அண்மையில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸும், சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்து கொண்டனர்.
கௌரவ விருந்தினர்களாக வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியற் சேவை) பொறியியலாளர் எஸ்.ஈ.எஸ். இராஜேந்திரா, வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் சிவராஜசிங்கம், வீதி அபிவிருத்தி ஆலோசகர் கலாநிதி றொபேர்ட் ஸ்மித், கலாநிதி வோல்டன் விற்றி ஆகியோரும் கலந்து கொண்டனர்.
ஓய்வுநிலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் பேரின்பநாயகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வீதி போக்குவரத்து ஒழுங்கு விதிகள் தொடர்பான கைநூல் பாடசாலைகளின் நூலகங்களுக்கென அந்தந்தப் பாட சாலை அதிபர்களிடம் வழங்கப்பட்டன. (வ-9)


## மரண அறிவித்தல்

### Dr. துரைராஜா கோபிநாத்

[சித்த ஆயுள்வேத வைத்தியரும், அகஸ்திய வைத்தியசாலை & மருந்தகமும், சமாதான நீதிவானும் J.P]



260/3, மூத்தவிநாயகர் வீதியைப் (கச்சேரி நல்லூர்) பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட Dr. துரைராஜா கோபிநாத் (27.09.2014) சனிக்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜா (யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார முகாமைத்துவ முன்னாள் பொறுப்பதிகாரியும், ஆயுள் வேத வைத்தியரும்) மற்றும் பரமேஸ்வரி (யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) தம்பதியினரின் பாசமிகு மூத்த மகனும், வாசுகி (லண்டன்), சுகிர்தரநாத் (பொறியியலாளர்-சிங்கப்பூர்), கோகுல்நாத் (அ[illegible]வையாளர் (Q.S.)), ராகவநாத் (T.R. மொபைல் உரிமையாளர்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை தம்பதியினரினதும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், அனுசம்மா மற்றும் இராசம்மா தம்பதியினரினதும் அன்புப் பேரனும், சண்முகரத்தினம், லோகநாயகி ஆகியோரின் மருமகனும், சிதம்பரப்பிள்ளை, வேலாயுதம்பிள்ளை, அனுசபவானி, பவானி, ஜெயந்திமாலா (சுவிஸ்) ஆகியோரின் பெறாமகனும், முருகானந்ததாஸ் (லண்டன்) அவர்களின் மைத்துனரும் [illegible]ஷா, கோகீஷ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக[illegible] [illegible]கள் இன்று (30.09.2014) செவ்வாய்க்கிழமை [illegible]கிரியைக்காக பி.ப. ஒரு [illegible] அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகன[illegible] மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

260/3, மூத்தவிநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
077 100 7567, 077 580 9812
(52703) (7.6.3)
தகவல்: குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### கனகசபை மோகனேஸ்வரன்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை மோகனேஸ்வரன் 28.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், செந்தில்நாதன் (ஜேர்மனி), வசந்தாதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும், அருந்ததி (ஆசிரியை - திருநெல்வேலி R.C.T.M.S) அவர்களின் பிரிய நாயகனும், ரமணன் (HNB - வேலணை), கபிலன் (மாணவன், யாழ்.இந்துக்கல்லூரி) ஆகியோரின் நேசமிகு தந்தையும், காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் மகேஸ்வரன், ஜெகன், காலஞ்சென்ற உலகேஸ்வரன் மற்றும் காராளீஸ்வரன், சிவா, காலஞ்சென்ற திருஞானம் ஆகியோரின் உடன்பிறப்பும், நந்தகுமார், அனுசியா, கௌரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

414/7, கோயில் வீதி,
நல்லூர்.
(52702) (12.3.6)
தகவல்: குடும்பத்தினர்.
TP: 021 205 4145



## மரண அறிவித்தல்

### பொன்னையா மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற விற்பனைத் திணைக்கள அதிகாரி D.M.O)



சி.சி.த.க. பாடசாலை ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மயில்வாகனம் 28.09.2014 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- மாரிமுத்து தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பு- பாக்கியம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும், சாந்தினி, சாந்தகுமரன், செல்வக்குமரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத்தந்தையும், தவறாஜசிங்கம் (நித்தியலெட்சுமி [illegible]க்காலை), தவமணி, சத்தியராணி ஆகியோரின் மாமனாரும், சுதன்-லக்ஷனா, செந்தீசன்-நிமோஜிதா (கனடா), மயூரன்-ஜீவனா (சிங்கப்பூர்), வாகீசன்(மொ[illegible]ட்டுவ பல்கலைக்கழகம்), இன்டூசன், தெமிசன், றோகன், வனூஜா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும், கிஷோனா, கிஷான், துஷிந்த், மதுஷ்ணவி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மேற்படி வதிவிடத்தில் நாளை (01.10.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 [illegible] மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்து[illegible]செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.சி.த.க.பாடசாலை ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம். (52701)(6.4.3)
தகவல்: த.தவறாஜசிங்கம் (குலம்)

# கிளாலியில் மணல் கடத்தல்

## வீட்டுத் திட்டம் என்ற பெயரில் அதிகாரிகளின் அனுமதியுடன் இடம்பெறும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த கோரிக்கை

வலி.தென்மேற்கு. செப்.30
வீட்டுத் திட்டம் என்ற பெயரில் கிளாலிப் பகுதியிலிருந்து அதிகாரிகளின் அனுமதியுடன் வியாபார நோக்கத்தில் தினசரி வேறு பிரதேசங்களுக்கு மேற்கொள்ளப்படும் மணல் கடத்தலை கிளாலிப் பகுதி மக்களின் நலன் கருதி உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அந்தப்பகுதிப் பொது அமைப்புக்கள் கூட்டாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக அரச அதிபருக்கு அவசர கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட விரோத செயலினால் கிளாலிப் பகுதியில் வயல் நிலங்கள் உவர் நிலமாக மாறுவதையும் கடல் நீர் கிராமத்துக்குள் உட்புகுவதையும் சுட்டிக்காட்டிப் பொது அமைப்புகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

கிளாலிப் பகுதியில் 2011 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் மக்கள் மீள்குடியமர அனு மதிக்கப்பட்டதை அடுத்து இது வரை 265 குடும்பங்கள் மீள் குடியமர்ந்துள்ளன. இவர்களில் 175 குடும்பங்களுக்குப் பொது நிறுவனங்களால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் 90 குடும்பங்கள் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் இணைக்கப்படவுள்ளன. கிளாலியிலுள்ள வீட்டுத்திட்டத்துக்குத் தேவையான மணல் இந்தப் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதால் பயனாளிகள் நன்மையடைந்துள்ளனர்.

> “ கிளாலிப் பகுதியில் 2011 ஆம் ஆண்டு 10ஆம் மாதம் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டதை அடுத்து இது வரை 265 குடும்பங்கள் மீள் குடியமர்ந்துள்ளன.

இந்த நிலையில் பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்திலுள்ள முகமாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்துக்குத் தேவையான மணல் பிரதேச செயலரின் அனுமதியுடன் கிளாலியிலிருந்து டிராக்டர் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. பிரதேச செயலரினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்துடன் மூலம் டிராக்டர்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படும் மணல் தற்பொழுது பிரதேசத்துக்கு அப்பால் சாவகச்சேரி, மிருசுவில், யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

சில சமயங்களில் வீதியில் வைத்து அது டிப்பர் வாகனத்துக்கு மாற்றப்படுகின்றது.

இதேவேளை- பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கமைய கிளாலி அபிவிருத்திச் சங்கத்தினால் ஒரு டிராக்டருக்கு 350 ரூபா என்ற அடிப்படையில் அறவிடப்படும் பணத்தில் 100 ரூபாவுக்கு மட்டும் பற்றுச் சீட்டு வழங்கப்படுகிறது.

மிகுதி 250 ரூபாவும் பிரதேச செயலரிடம் வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கத் தலை வர் ஒரு அனுமதிப் பத்திரத்தை வைத்துக் கொண்டு பல தடவைகள் மணல் ஏற்றிச் செல்லப் பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மணல் மோசடி குறித்து கிளாலி கிராம உத்தியோகத்தருக்குத் தெரியப்படுத்தி இருந்த போதும் அவர் உரிய நடவடிக்கை எடுக்காதமையால் தொடர்ந்தும் மணல் கடத்தல் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ள தலைவர், மேற்படி கிராம உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யுமாறு பிரதேச செயலரைக் கோரியுள்ளார்.

இதேவேளை- மண் கடத்தல் தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், பளைபொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அறிவித் துள்ளதுடன் இதனால் ஏற்பட்டுள்ள விளைவு பற்றியும், தடுத்து நிறுத்துவது அவசியம் பற்றியும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (த-115)


### கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினரும் சேமிப்புத் திட்ட உறுப்பினருமாகிய கு. தவராசா (உரிமையாளர் ராக்யேல் புடைவை - சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி பாக்கியவதி குழந்தைவேலு**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

(C/15998) (10.6.3)

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

### கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் திருமதி கி.இரஞ்சினிதேவி
அவர்களின் தந்தையார்

**இராசையா மயிலுப்பிள்ளை**

அவர்கள் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்*
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம். (52706)(7.6.3)

### கண்ணீர் அஞ்சலி

கடந்த 26.09.2014 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் காவலாளியாகக் கடமையாற்றும்
**கனகரத்தினம் விஜியதாஸ்** அவர்களின் அன்புத் தாய்

**திருமதி புஸ்பமலர் கனகரத்தினம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலிகாமம் வடக்குப் பிரதேசசபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
(C15995)(3)

### கண்ணீர் அஞ்சலி

எமது முகாமையாளர் (மனிதவளம்) திருமதி நி.ஜீவமலர்
அவர்களின் மாமியார்

**திலகாம்பிகை அருணாசலம்**

அவர்கள் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்*
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம். (52705)(7.6.3)

### மரண அறிவித்தல்



**இராசையா திலகராஜா**
(முன்னாள் பிரபல வர்த்தகர், கஞத்துறை)

76ஏ, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா திலகராஜா 28.09.2014 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், கொடிகாமம் ஆச்சியின் பேரனும், காலஞ்சென்ற சரஸ்வதி (ரெத்தினம்) மற்றும் சந்திரலீலா, விஜயரெட்ணம் (பங்கர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை மற்றும் மஞ்சுளா ஆகியோரின் மைத்துனரும், வரதராஜன், சுபோதினி, சுரேந்திரராஜன், தயாளினி, தயாணந்தராஜன், லோஜினி, ஷியாமினி, கலாஜினி, மாலினி ஆகியோரின் பெரிய மாமாவும், கார்த்திக்கின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2014) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள...

76 ஏ, கோயில் வீ... ...வும்.
தகவல்:
நல்லூர், சந்திரலீலா } சகோதரர்கள்
யாழ்ப்பாணம். விஜயரெட்ணம் }
(52707)(6.4.3) தயாளன் (மருமகன்)


## நீர்த் தாங்கிக் கட்டுமானம் நிறைவடையும் நிலையில்

கிளிநொச்சி, செப். 30
கிளிநொச்சி அக்கராயன்குளம் கிராமிய நீர் வழங்கல் திட்டத்துக்கென அமைக்கப்பட்ட நீர்த் தாங்கியின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து வருகின்றன.

கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் உள்ள கிராமங்களுக்குச் சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் நோக்கில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் 30 மீற்றர் கன அடி நீர்க் கொள்ளவு கொண்ட நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு அதன் 90 வீதமான பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

இந்நிலையில் நீரைப்பெறக்கூடிய வகையிலான கிணறு அமைக்கும் வேலைகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன.

குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் வரையும் தற்போது நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக பவுஸர் மூலமான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக குடிதண்ணீர் பெறுவதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இவ்வாறு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் போது ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் குறித்த அக்கராயன் கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் கீழ் 90 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (த-55)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி அபிஷா ரெக்ஸ்
உரிமையாளரும்
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்க
மன்ற உபசெயலாளருமாகிய
இ.கோகிலன் அவர்களின் அன்பு மகளும்
மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை
மாணவியுமான
*செல்வி கோ.அபிஷா*
அவர்கள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில்
பரீட்சை 2014 பெறுபேறுகளில்
169 புள்ளிகள் பெற்றமையையிட்டு
பாராட்டுவதுடன் மென்மேலும்
பரீட்சைகளில் உயர் சித்தி பெற்று
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.
**வர்த்தக சமூகம் -சாவகச்சேரி**
(சி/15996)(5.6.3

### கார் வாடகைக்கு

நாளாந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் கார் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0775 834 770 (52708)(5.6.3)

### வாங்கு மேசைகள் விற்பனைக்குண்டு

பாவனையிலுள்ள ரியூசன் வாங்கு மேசைகள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 076 540 8095 (52709)(5.6.3)

### பணிப்பெண் தேவை

புலோலி தெற்கு, புலோலியில் இரண்டு பேரைக் கொண்ட குடும்பத்தில் தங்கியிருந்து பணிபுரி வதற்கு நடுத்தர வயதையுடைய பெண் உடன் தேவை. சம்பளமாக 12,000 ரூபா வழங்கப்படும். தொடர்பு: (C/15997) (10.6.3)
077 516 7472, 021 226 0277

### TVகள் மலிவு விற்பனை

Sony, பனசோனிக் TVகள் 29" - 16000/=, 21" - 15000/= முதல், 14" - 9500/= ரேடியோ கசெற் 2500/= DVD - 2950/=,
தொடர்பு: 077 044 0570
சோனி ரேட்ற்சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம்.
(52700) (12.3.6)

### விற்பனைக்கு

அச்செழு, நீர்வேலி பிரதான வீதியில் நீங்கைப்புலம் பகுதியில் 6 பரப்பு 61/8 குழி காணி விற்பனைக்குண்டு.
(சி15993) (12.3.6) தொடர்பு: 077 968 7745

### கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிசங்க அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள் - 27.09.2014 பிற்பகல் 3.00 மணி

முதலாம் பரிசு இல - 0636
இரண்டாம் பரிசு இல - 5549
மூன்றாம் பரிசு இல - 2758

ஆறுதல் பரிசுகள்

1 - 0040 2 - 0185 3 - 1368 4 - 0042 5 - 0281
6 - 0018 7 - 1452 8 - 0281 9 - 2636 10 - 1212

மேற்படி இலக்கங்களை உடைய வெற்றியாளர்கள் 02.10.2014 வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வைத்தியசாலைக்கு சமுகமளித்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

நோயாளர் நலன்புரி சங்கம்
பிரதேச வைத்தியசாலை, கொடிகாமம். (47288) (7.6.3)

### பெரிய கடையில் காணி விற்பனைக்கு

ஞானம்ஸ் ஹொட்டலுக்கு
அருகில் B.M.C.ஒழுங்கையில்
இல 25/7 ...
...25/7 இல் மூன்று பரப்பு
7.50 குழி காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 790 3642
(இரவு 8.00 மணிக்குப் பின்) (52704) (5.6.3)



## அபூர்வ முக அமைப்புடன் சிறுவன்

*மொராக்கோவில் கண், மூக்கு இல்லாமல் அபூர்வமான முறையில் குழந்தை ஒன்று பிறந்துள்ளமை மருத்துவத்துறைக்கு சவாலாக அமைந்துள்ளது. மூன்று வயதுச் சிறுவனான யாஹ்யா எல் ஜாபாலிக்கு ஒழுங்கற்ற முறையில் இரு கண்களும், மூக்கு இருக்கும் இடத்தில் ஒரே ஒரு சிறு துவாரம் மட்டுமே உள்ளது.*

*அந்த சிறுவனுக்கு சத்திர சிகிச்சை செய்ய உதவி செய்யுமாறு சமூக வலைத் தளம் மூலம் கோரப்பட்டிருந்தது. இதனை அறிந்த பாத்திமா பராக்கா என்ற பெண்மணி அவனுக்கு உதவ முடிவு செய்துள்ளார்.*

*தற்போது அந்தச் சிறுவனை மெல்போர்னுக்கு வரவழைத்துள்ள அவர், அவனை அங்கு அறுவைச் சிகிச்சை நிபுணராக உள்ள டோனி ஹோல்ம்ஸின் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்க உள்ளார்.*

*வங்கதேசத்தைச் சேர்ந்த ஒட்டிப் பிறந்த இரட்டையர்களான திரிஷ்ணா மற்றும் கிருஷ்ணா ஆகியோரை அறுவைச் சிகிச்சை செய்து வெற்றிகரமாகப் பிரித்து தனித்தனி குழந்தைகள் ஆக்கியவர் டோனி ஹோல்ம்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.*

*யாஹ்யாவுக்கு வரும் டிசெம்பர் மாதம் அறுவைச் சிகிச்சை நடத்தப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது. இரு பிரிவாக பிரிந்துள்ள அவனது முகப்பகுதியை ஒன்றாக்கி அவனுக்கு மூக்கை உருவாக்க ஹோல்ம்ஸ் திட்டமிட்டுள்ளார். இதற்காக அவனது தசைகளையே பயன்படுத்தவும் அவர் முடிவு செய்துள்ளார்.*

*பிறப்பால் வித்தியாசமான முகஅமைப்பைகொண்டிருந்தாலும் அவனை அவனது பெற்றோர் மிகுந்த கவனத்துடன் பார்த்துக்கொள்வதால் எந்தவித சலனமும் இன்றி மகிழ்ச்சியாகவே யாஹ்யா வாழ்ந்து வருகிறான். (வ)*

# அல்கொய்தா மிரட்டல்

## ஐ.எஸ். மீது தாக்குதல் நடத்தும் நாடுகளுக்கு

டமாஸ்கஸ், செப்.30

ஈராக்கில் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) அமைப்பின் மீது பிரிட்டன் விமானத் தாக்குதலைத் தொடங்கியுள்ள நிலையில், ஐ.எஸ்.ஸுக்கு எதிராகத் தாக்குதலில் ஈடுபடும் நாடுகளுக்கு எதிராக பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படும் என அல்கொய்தாவின் சிரியா பிரிவான அல்-நுஸ்ரா மிரட்டல் விடுத்துள்ளது.

அல்-நுஸ்ராவின் செய்தித் தொடர்பாளர் அபு ஃபிராஸ் அல்-சுரி, இணையத் தளங்களில் சனிக்கிழமை வெளியிட்ட காணொலியில் கூறியிருப்பதாவது:

ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக பல்வேறு நாடுகளும் நிகழ்த்தி வரும் வான்வழித் தாக்குதல், இஸ்லாம் மதத்துக்கு எதிரான போராகும்.

இந்தச் செயல் மூலம், அந்த நாடுகள் உலகிலுள்ள புனிதப் போராளிகளின் தாக்குதலுக்கு இலக்காகும் என்று அந்தக் காணொலியில் அல்-சுரி மிரட்டல் விடுத்துள்ளார்.

ஈராக்கிலும், சிரியாவிலும் ஐ.எஸ்.இலக்குகள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

சிரியாவில் நடைபெறும் தாக்குதலில், அமெரிக்காவுடன் இணைந்து பஹ்ரைன், ஜோர்டான், கத்தார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் போர் விமானங்களும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீது குண்டு வீசி வருகின்றன.

இந்தநிலையில், ஈராக்கில் ஐ.எஸ். இலக்குகள் மீது தனது விமானத் தாக்குதலை பிரிட்டனும் சனிக்கிழமை ஆரம்பித்தது.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பால் முற்றுகையிடப்பட்டுள்ள குர்து இனத்தினர் வசிக்கும் அய்ன் அல்-அரபு நகரம் உள்ளிட்ட ஏழு பயங்கரவாத இலக்குகளைக் குறி வைத்து கூட்டுப் படைகள் தாக்குதல் நிகழ்த்தியதாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் 'பென்டகன்' தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் அல்கொய்தாவின் கோரஸான் பிரிவுத் தலைவர் முசின் அல்-ஃபாத்லி கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

முசின் அல்-ஃபாத்லி, தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றொரு கோரஸான் தலைவர் அபு யூசுஃப் அல்-துருக்கி ஆகியோரின் இறப்புகளுக்கு அஞ்சலி தெரிவித்து அல்கொய்தா உறுப்பினர்கள் தங்களுக்கிடையில் தகவல் பரிமாறிக்கொண்டதாக இணையத் தளங்களில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'சைட்' அமைப்பு கூறியுள்ளது.

மேலும், ஐ.எஸ். அமைப்பின் மீது நிகழ்த்தப்படும் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, அல்கொய்தா அமைப்பினர் டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவுகளை வெளியிட்டுள்ளதாகவும் 'சைட்' அமைப்பு தெரிவித்துள்ளது.

ஈராக்கிலும், சிரியாவிலும் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றிய ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு, அரசுப்படையினரை இரக்கமின்றி படுகொலை செய்ததுடன் அந்தப்பகுதிகளிலுள்ள சிறுபான்மையினர், பழங்குடியினருக்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

சிரியாவில் ஐ.எஸ்.ஸின் வன்முறைக்கு அஞ்சி, 1.6 லட்சம் அகதிகள் அண்டை நாடான துருக்கியில் தஞ்சமடைந்துள்ளனர்.

மேலும், இரு அமெரிக்க செய்தியாளர்களையும், பிரிட்டனைச் சேர்ந்த ஒருவரையும் தலையைத் துண்டித்து படுகொலை செய்த ஐ.எஸ். பயங்கரவாதிகள், அந்த கொடூரக் காட்சியை இணையத்தில் வெளியிட்டனர்.

அதனைத் தொடர்ந்து, ஈராக்கில் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொண்டு வந்த இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்திய அமெரிக்கா, அரபு நாடுகளுடன் இணைந்து சிரியாவிலும் அதனை விரிவுபடுத்தியுள்ளது. (வ)



வத்திக்கான் செயிண்ட் பீற்றர் சதுக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதியோர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த ஓய்வுபெற்ற பாப்பரசர் பதினாறாம் பெனடிக்கைத் தற்போதைய பாப்பரசர் பிரான்சிஸ் வரவேற்கிறார்.

## பெருவில் நிலநடுக்கம் 7 பேர் உயிரிழப்பு

கஸ்கோ , செப்.30

பெரு நாட்டின் கஸ்கோ நகரத்துக்கு அருகே உள்ள பின்தங்கிய கிராமமான அண்டியனில் நேற்று முன்தினம் மிதமான நில நடுக்கம் ஏற்பட்டது. இதன்போது கட்டட இடுபாடுகளில் சிக்கி 7 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.



இதேவேளை- பருரோ பகுதியிலும் நில நடுக்கத்தால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலப்பரப்பில் இருந்து ஐந்து மைல் தொலைவில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டிருந்ததாக தனது வலைத் தளத்தில் கூறியுள்ளது.

இதன் காரணமாக 15 வீடுகள் இடிந்ததுடன் 75 பேர் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர். இந்நிலநடுக்கத்தால் அந்தப் பகுதியில் 5 பேர் படுகாயமடைந்தனர். மின் விநியோகமும் துண்டிக்கப் பட்டுள்ளது. யாரிஸ்க் நகர மேயரான வில்பர் லோய்சா இது குறித்து கூறுகையில், கஸ்கோவில் இருந்து இரண்டு மணி நேரத்தில் செல்லக்கூடிய பகுதியாக பருரோ உள்ளது என்றார். விவசாய பூமியான இந்த நகரத்தில் ஆயிரம் பேர் வரையில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஆஸியில் நடந்த ஏலத்தில் வைர மோதிரம் திருட்டு



மெல்போர்ன், செப்.30

ஆஸ்திரேலியாவில் ஏல நிலையம் ஒன்றிலிருந்து 5 லட்சம் டொலர்கள் (சுமார் ரூ.3 கோடி) மதிப்புடைய அரிய வகை வைர மோதிரம் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் நியூ சௌத் வேல்ஸ் நகரிலுள்ள தியோடர் புரூஸ் ஏல மையத்தில் பாதுகாப்பான முறையில் அந்த மோதிரம் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. காணாமற்போனபோது, அந்த மோதிரத்தை நூற்றுக்கணக்கானோர் கடந்து சென்றதாகவும், மோதிரத்தைக் களவாடியவர் குறித்து இரகசியக் கண்காணிப்புக் கமராவில் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், அந்த மோதிரத்தில் லேசர் கதிர்கள் மூலம் அடையாள எண் பொறிக்கப்பட்டுள்ளதால் அதனைக் கண்டு பிடித்து விடலாம் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். (வ)

## பிறந்தவுடன் நீச்சல் அடித்த குழந்தை

லண்டன், செப்.30

பிரிட்டனில் தந்தை ஒருவர் தனது குழந்தை பிறந்த சில மணி நேரத்திலேயே குழந்தை நீச்சல் குளத்தில் இறங்கி விளையாடியது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த சார்லஸ் என்ற குழந்தை நீச்சல் குளத்தில் குளித்த மிகச் சிறிய குழந்தை என்ற பெயர் பெற்றுள்ளது.



அந்தக் குழந்தை பிறந்து 31 மணி நேரம் 46 நிமிடங்களே தான் கடந்த நிலையில் அதற்குள் தனது தந்தையின் கையில் அமர்ந்து கொண்டு நீச்சல் குளத்தில் இறங்கியுள்ளது.

பச்சிளம் குழந்தையான சார்லஸ் பிஞ்சுக் கைகளுடன், கண்களை மூடிக்கொண்டு தனது தந்தையுடன் தண்ணீரில் உள்ள காட்சி அனைவரையும் கண்களையும் கவர்ந்துள்ளது.

மேலும் இந்தத் தந்தை குழந்தைகளின் நீச்சல் பாடசாலையில் பயிற்சியாளராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## யேமன் வன்முறையால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### சவூதி அரேபியா எச்சரிக்கை

சனா, செப்.30

யேமனில் சமீபத்தில் புரட்சி வெடித்து ஷைட்டி முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் அதன் தலைநகரான சனாவைக் கைப்பற்றியதுடன் அதிகரித்து வரும் வன்முறைகளால் முன்னெப்போதும் இல்லாதவாறு தற்போது பெரிய சவால்கள் ஏற்பட்டிருப்பதாகவும் இது சர்வதேச பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் என்றும் சவூதி அரேபியா அறிவித்துள்ளது.

மேலும், யேமனில் தற் போது ஏற்பட்டிருக்கும் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற சூழ்நிலையை மாற்ற சர்வதேசத்தின் துரித நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன என்றும் - சவூதி அரேபியா அழைப்பு விடுத்துள்ளது.

உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான சவூதி அரேபியா யேமனுடன் மிக நீண்ட எல்லையைப் பங்கிடுகின்றது. மேலும், கடந்த 21 இல் ஷைட்டி கிளர்ச்சியாளர்களுக்கும் யேமனின் சில தெற்கு பிரிவினைவாத போராளிகளுக்கும் இடையே சமரசத்துடன் கூடிய புதிய அரசை தாபிப்பது என ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடும் சன்னி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளதுமான சவூதி அரேபியா தனது பிராந்தியத்தின் முக்கிய போட்டியாளரான ஈரானுடன் யேமனின் ஷைட்டி இனத்தவர் தொடர்பை வலுப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

எனவே இதைவிட அல்கொய்தா போராளிகள் பலமடைய வாய்ப்புள்ளது என்பதாலும் எச்சரிக்கையுடன் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 21 இல் எட்டப்படவுள்ள அதிகாரப் பகிர்வு ஒப்பந்தம் ஷைட்டிகளின் தேவை களை முழுமையாகப் பூர்த்தி செய்கின்றதா என்பது தெளிவாகாத நிலையில் புதிய அரசுடன் இவர்களையும் சேர்த்துக் கொள்வது என்ற முடிவின்படி இவர்கள் சனாவை விட்டு வெளியேற வேண்டும் என்பதும் பதிலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. ஆனால் ஷைட்டிகள் இன்னமும் சனாவிலேயே முற்றுகையிட்டுள்ளனர். (வ)

# கண்ணீருடன் பதவியேற்றார் தமிழக புதிய முதலமைச்சர்




சென்னை, செப்.30
தமிழகத்தின் புதிய முதல்வராக ஓ.பன்னீர்ச்செல்வம் இரண்டாவது முறையாக நேற்று கண்ணீர் மல்க பதவியேற்றுக் கொண்டார்.
ஆளுநர் மாளிகையில் பிற்பகலில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் ஆளுநர் ரோசையா. ஓ.பன்னீர்ச் செல்வத்திற்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
இந்தப் பதவியேற்பு விழாவில் அரசு அதிகாரிகள், பொலிஸ் துறை அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.
2001ஆம் ஆண்டு செம்ரெம்பர் தொடக்கம் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை தமிழக முதல்வராக ஓ.பன்னீர்ச் செல்வம் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



அரச முறைப் பயணமாக அமெரிக்காவுக்குச் சென்ற இந்தியப் பிரதமர் மோடிக்கு அங்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஓர் இந்திய கலாசார குழு நடனக்காரர்கள் நியூயோர்க்கில் ஞாயிறன்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ஒரு தோற்றத்தை வடிவமைத்து கார்டன் சதுக்கத்துக்கு வெளியே வரவேற்பளித்தபோது.

# அமெ.வாழ் இந்தியருக்கு குழந்தைகள் அமைதிப் பரிசு

அமெரிக்கவாழ் இந்தியப் பெண் 'கிட்ஸ்ரைட்ஸ்' சர்வ தேச குழந்தைகள் அமைதிப் பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



நெதர்லாந்தின் தலைநகரமான ஆம்ஸ்டர்டாமில் செயற்பட்டுவரும் குழந்தைகள் உரிமை அமைப்பு நிறுவனமான 'கிட்ஸ் ரைட்ஸ்' ஆண்டுதோறும் குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்தும் விதமாகச் செயற்படும் சிறுவர், சிறுமியருக்கு விருதுகளை வழங்கி வருகின்றது.
2005ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்பட்டு வரும் இந்த விருது களின் 10 ஆவது ஆண்டு நிறைவு இவ்வருடமாகும். அந்த வகையில் இந்த ஆண்டுக்கான விருதுகளுக்கு 3பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க வாழ் பெண்ணாவார். (வ)

# பிணை கோரி மனு

பெங்களூர், செப்.30
வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா சார்பில் பிணை வழங்கக் கோரியும், தண்டனைக்குத் தடை விதிக்கக் கோரியும் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.
அவருடன் சசிகலா உள்ளிட்ட 3 பேரும் பிணை கோரி மனுதாக்கல் செய்தனர்.
அந்த மனுக்கள் மீது கர்நாடக உயர் நீதிமன்ற விடுமுறை அமர்வுக்கு முன்னர் இன்று விசாரணை நடைபெறும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஜெயலலிதா சார்பில் அ.தி.மு.க. சட்டத்தரணிகள் அசோகன், பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிணை மனுவில், பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் அளித்த தண்டனைக்கு தடை விதிக்கக் கோரப்பட்டுள்ளது.
3 ஆவது நாளாக ஜெயலலிதா சிறையில் உள்ள நிலையில், அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சசிகலா புஷ்பா, விஜிலா சத்திய நாதன் உள்ளிட்ட பலர் சிறை வளாகத்தில் முகாமிட்டுள்ளனர். ஜெயலலிதாவை சந்திக்க அவர்கள் அனுமதி கோரியுள்ளனர்.



**பிணை மனு விவரம்**


கைது செய்யப்பட்டவர் சராசரி நபர் அல்ல. அவர் தமிழ கத்தின் முதல்வராக மூன்று முறை இருந்திருக்கிறார். மேலும் ஒரு கோடி தொண்டர்கள் கொண்ட அ.தி.மு.க. என்ற கட்சிக்கு பொதுச் செயலாளராக உள்ளார். பிணை வழங்க நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனையை ஏற்க அவர் தயாராக இருக்கிறார். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டும் அவரது வயது, நோய் ஆகியாவற்றைக் கருதியும் பிணை வழங்க வேண்டும் என்று மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**முன்னிலையாகிறார் ராம் ஜெத்மலானி**

பிணை கோரிய மனு தொடர்பில் அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா சார்பில் முன்னிலையாகிறார் மூத்த சட்டத் தரணி ராம் ஜெத்மலானி. இதற்காக லண்டனில் இருந்து அவர் தாயகம் திரும்புகிறார். (வ)

# இஸ்ரேல் பிரதமரை சந்தித்தார் மோடி

## பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்தும் பேசினர்



நியூயோர்க், செப்.30
அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, நியூயோர்க் நகரில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்துப்பேசினார்.
மோடி பிரதமராகப் பதவியேற்ற பின்னர் இந்தியா - இஸ்ரேலிய உயர் தலைவர்கள் சந்தித்துப்பேசியிருப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.
இந்த சந்திப்பின் போது, பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் மேற்கு ஆசியாவில் ஐ.எஸ். அமைப்பினர் உருவாக்கி இருக்கும் நிலைமை உள்ளிட்டவைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. 30 நிமிடம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பிரதமர் மோடியை இஸ்ரேல் வருமாறு நெதன்யாகு அழைத்தார் என்று வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பரூதின் தெரிவித்தார்.
இதுகுறித்து செய்தி தொடர்பாளர் மேலும் கூறுகையில்,
"இரு தலைவர்களும் பொருளாதார ஒத்துழைப்பை உயர்த்துவது, வேளாண்மை, நீர் நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் சைபர்செக்யூரிட்டி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயற்படுவது குறித்த முக்கிய அம்சங்கள், இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டன என்று தெரிவித்தார். (வ)

# வன்முறைச் சம்பவம் வைகோ கண்டனம்

சென்னை, செப்.30
தமிழகத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்தார். இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் வரலாறு போற்றும் ஒரு தீர்ப்பை நீதிபதி ஜான் மைக்கேல் டி குன்கா வழங்கியுள்ளார்.
தண்டனை பெற்றவர் மேல் நீதிமன்றத்தில் முறையீடு செய்து கொள்ளலாம். ஆனால், தமிழகம் முழுவதும் அ.தி.மு. கவினர் அராஜக வன்முறையில் இறங்கினர். கடைகளை உடைத்து நொறுக்கினர். பஸ்கள், வாகனங்களைத் தாக்கி தீ வைத்துக் கொளுத்தினர்.



வணிக நிறுவனங்கள் மீது கற்களை வீசிப் பொருள் சேதம் ஏற்படுத்தினர். ஒரு பாவமும் அறியாத பொது மக்கள் மிகுந்த துன்பத்துக்கு ஆளாகினர். இவை அனைத்தையும் பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்த்த அநீதியும் நிகழ்ந்தது.
முதல்வர்தான் சிறைக்குச் சென்றாரே தவிர, அரசு நிர்வாகம் என்பது அதிகாரிகளால் இயக்கப்படுவதாகும். பொலிஸார் சட்டத்தின் பணியாளர்கள், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்கள். இதற்கு முன்பு இப்படி அராஜகச்சம்பவங்களின் போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவா ரணம் வழங்க வேண்டும் என்று நீதி மன்றமே ஆணையிட்டது. அதனை மனதில் கொண்டு, அராஜகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க, தமிழக அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (வ)

# தீவிரவாதிகள் நால்வர் அஸாமில் சுட்டுக் கொலை

குவாஹாட்டி, செப்.30
அஸாமில் பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி அமைப்பைச் சேர்ந்த 4 தீவிரவாதிகள் ஞாயிற்றுக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.
இதுகுறித்து பாதுகாப்புப் படையினர் கூறுகையில்:
கோக்ரஜார் மாவட்டத்திலுள்ள வனப்பகுதியில் தீவிரவாதிகளைத் தேடும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டிருந்தனர்.
அப்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகள், பாதுகாப்புப் படை யினரை நோக்கி சுட்டனர். பாதுகாப்புப் படையினரும் எதிர்த் தாக்குதல் நடத்தினர். இதில் 4 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்தார். (வ)

# வதோரா மதக் கலவரத்தில் 40 பேர் கைது

வதோரா, செப்.30
குஜராத் மாநிலம் வதோரா வில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலை அடுத்து அங்கு 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குஜராத்தில் உள்ள வதோதராவில் இந்து மற்றும் முஸ்லிம் ஆகிய இரு மதத்தினரிடையே திடீர் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் இரு தரப்பினரும் பயங்கர மாக கல் வீசி தாக்கிக் கொண்டனர்.
வாகனங்களுக்குத் தீவையும் வைக்கப்பட்டது. நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர அங்கு துணை ராணுவம் குவிக்கப்பட்டது.
கலவரம் மேலும் பரவாமல் தடுக்கும் வகையில் மொபைல் இணையத்தளம், குறுந் தகவல் அனுப்புவது தடை செய்யப்பட்டது.
துணை இராணுவத்தினர் வதோராவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.
இந்த மதக்கலவரம் தொடர்பாக இதுவரை 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து கலவரத்துக்கு காரணமானவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக கைது எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று உள்துறை அமைச்சகத்தின் கூடுதல் தலைமை செயலாளர் எஸ்.கே நந்தா தெரிவித்தார்.
பதற்றத்தைத் தணிக்கவும் மேலும் கலவரம் பரவமால் தடுப்பதற்காகவும் தொலைபேசி சேவைகளுக்கான தடை இன்று வரை நீடிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
சமூக வலைத்தளங்களில் மதக்கலவரங்களை தூண்டும் விதமான புகைப்படங்கள் வெளியானதை அடுத்து கடந்த வியாழக்கிழமை முதல் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.
தற்போது அமெரிக்காவில் இருக்கும் பிரதமர் நரேந்திர மோடி, கடந்த மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் வதோரா தொகுதியில்தான் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இருந்த போதிலும் அவர் வாரணாசி தொகுதியை தேர்ந்தெடுத்தால், அங்கு இடைத் தேர்தல் நடத்தப்பட்டு சமீபத்தில்தான் பாரதீய ஜனதா வெற்றி பெற்றது நினைவுகூரத்தக்கது. (வ)

# ஐ.நா. பொதுச் செயலாளருக்கு மீண்டும் அழைப்பு விடுத்தார் மஹிந்த ராஜபக்ஷ

## போருக்குப் பிந்திய நிலைமைகளை நேரில் பார்வையிடுமாறு



நியூயோர்க், செப்.30

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்த மதிப்பிடுவதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூனை மீண்டும் இலங்கை வருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூனை சந்தித்து பேசியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் போருக்குப்பிந்திய நிலைவரங்கள் குறித்தும் அவருக்கு தெளிவுபடுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரின் போது இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் இலங்கை ஜனாதிபதியின் தலைமைத்துவத்தைப் பாராட்டினார் என்றும், போருக்குப் பிந்திய இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அவர் அங்கீகரித்துடன், மீதமுள்ள சவால்களுக்கு அவரது பாணியிலான தலைமைத்துவம் மூலமாக தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பின்போது பான் கீ-மூன் வெற்றிகரமாக அரசியல் நடைமுறைக்காக பரந்துபட்ட அரசியல் ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார். இதன் காரணமாக அனைத்துக் கட்சிகளுடனும் பேச வேண்டும் எனக் குறிப்பிட்டார். (ற)

# ஜனாதிபதி வேட்பாளருக்கு நிபந்தனை விதிக்கப்படும்

## ஜாதிக ஹெல கட்சி கூறுகின்றது



கொழும்பு. செப்.30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஜாதிக ஹெல உறுமய நிபந்தனைகளை முன்வைக்க உள்ளது என்று அந்தக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளரான மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சிங்களவர்களின் கோரிக்கைகள் என்ன என்பது அந்த நிபந்தனைகளில் வெளியிடப்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை தமது நிபந்தனைகளுக்கு இணங்க வைக்க ஜனாதிபதி ஹெல உறுமயவின் வாக்கு வங்கியை பலப்படுத்த வேண்டும். வாக்கு வங்கியை அதிகரிப்பதற்காக தனித்தனியாக இருக்கும் தரப்புக்களை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்கால சவால்களை எதிர்கொள்ள ஜாதிக ஹெல உறுமயவின் சிங்கள பௌத்த வாக்கு வங்கியை 10 லட்சமாக அதிகரிக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# வத்திக்கான் செல்கின்றார் மஹிந்த



கொழும்பு. செப்.30

பாப்பரசர் பிரான்சிஸின் இலங்கைப் பயணம் தொடர்பிலான உத்தியோக பூர்வ அழைப்பை விடுப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் வத்திக்கான் நகருக்கு செல்லவுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த நேற்று நாடு திரும்பினார். இவரது அடுத்த வெளிநாட்டுப் பயணம் வத்திக்கானாகும்.

வணக்கத்துக்குரிய பாப்பரசர் அடுத்த வருடம் ஜனவரி 13 ஆம் திகதி காலை 9 மணிக்கு இலங்கை வரவுள்ளார் என்று முன்னர் அறி விக்கப்பட்டிருந்தது. கட்டுநாயக்கா சர்வதேச விமான தளத்தை வந்தடையும் பாப்பரசர் திறந்த வாகனத்தின் ஊடாக கொழும்பு- நீர் கொழும்பு பிரதான வீதியில் பயணிக்கவுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சர்வமதத் தலை வர்களுடன் பாப்பரசர் கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளார். (ற)

# காவி உடையால் எதுவும் முடியும்

## ரணிலுக்கும், அனுர குமாரவுக்கும் காலக்கெடு விதித்தார் ஞானசாரதேரர்



கொழும்பு, செப்.30

இந்தக் காவி உடைக்கு அதிகாரத்தில் இல்லாதவர்களைப் புதிதாகக் கதிரையில் ஏற்றவும், அதிகாரத்தில் உள்ளவர்களை இறக்கவும் முடியும். அரசியல் கட்சித் தலைவர்களே, இந்த நாட்டில் கட்சிக்கு வேலை செய்தது போதும். பௌத்த மதத்துக்காக செயற்பட வாருங்கள். மாற்றத்தை கொண்டு வருவதற்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அனுர குமார திஸநாயக்காவுக்கும் ஒரு வார கால அவகாசத்தை வழங்குகின்றோம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கல்கொட அத்தே ஞானசார தேரர்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுபல சேனா அமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"நீங்கள் சேர்ந்து வருவீர்களாக இருந்தால், நாம் உங்களுடன் இணைந்து செயற்பட தயார். உங்களை நாம் அதிகாரத்தில் அமர்த்துவோம். குறைந்தது பட்டதாரியையாவது நாடாளுமன்றத்துக்கு அனுப்புவோம். படிப்பறிவில்லாதவர்களை அனுப்புவதால் ஊழல், மோசடிகளே அதிகரிக்கின்றன.

இந்த நாட்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கு எமது விருப்புக்குரிய சோபித தேரர் பொது அபேட்சகராக வரப் போகிறார். அவரிடம் நாம் கேட்கின்றோம். இந்த நாட்டில் ஜனாதிபதி முறைமையா பிரச்சினை?. தயவு செய்து தன்னார்வ நிறுவனங்களின் கைப்பொம்மையாக மாறிவிட வேண்டாம்.

இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தமிழர்களின் ஆதரவையும் பெற முயலுவோம். மியான்மார் மத குரு விராதுவின் இலங்கை வருகையை தடுக்க முயன்றமைக்காக முஸ்லிம் கவுன்ஸிலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்.

பொதுபல சேனா எதிர்பார்க்கும் மாற்றத்தை கொண்டு வருவதற்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அனுர குமார திஸநாயக்காவுக்கும் ஒரு வார கால அவகாசத்தை வழங்கியுள்ளோம். அல்லது அவர்கள் விளைவுகளை சந்திக்க நேரிடும். எமது சிந்தனைகள் பண்டாரநாயக்காவினுடைய சிந்தனைகளாகவோ, டி.எஸ் சேனநாயக் காவினுடையதாகவோ இருக்க முடியாது. அவை புத்தரின் சிந்தனைகள்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அரசுக்கு ஒத்துழைக்காத நீதிவான்கள் புறக்கணிப்பு

## சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.30

அரசுக்கு பக்கச்சார்பாக செயற்படாத நீதிவான்கள் ஓரங்கட்டப்படுகின்றனர் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சுயாதீனமான முறையில் கடமையாற்றிய சட்டத்தரணிகள் ஒடுக்கப்படுகின்றனர் என்றும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

குறிப்பாக இலங்கையின் 43 ஆம் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவை பணி நீக்கம் செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உத்தரவை இரத்து செய்த, நீதிவான்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிவான்களான அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் அனில் குணரட்ன ஆகியோர் இவ்வாறு ஓரங்கட்டப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பக்கச்சார்பின்றி செயற்படும் நீதிவான்கள் மீது அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. பக்கச்சார்பின்றி நியாயமாக செயற்படும் நீதிவான்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை தடுக்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (ற)



இலங்கை இராணுவத்துக்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதி 65 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. அதனைக் கொண்டாட இலங்கை இராணுவம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. நிகழ்வை முன்னிட்டு நாடு முழுவதிலும் சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதன் முதலாவது நிகழ்வு கடந்த சனிக்கிழமை கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்றது.

# படகு தீப்பற்றி 5 மீனவர்கள் காயம்

கொழும்பு. செப்.30

தங்காலை, ரெக்வ கடலில், படகு தீப்பற்றியதால் 5 மீனவர்கள் காயங்களுக்கு உள்ளான நிலையில் தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் நால்வர் மேலதிக சிகிச்சைகளுக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# தேர்தல் நடத்தாது ஜனாதிபதி முறையை இரத்துச் செய்யலாம்

## லங்கா சம்சமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் பெட்டி வீரக்கோன்

கொழும்பு, செப்.30

தேர்தல் நடத்தாமலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய முடியும் என லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் பெட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற்று பொது வேட்பாளராக போட்டியிட்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்ட மாதுலுவாவே சோபித தேரர் முயற்சிக்கின்றார். எனினும், இவ்வாறு தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் சோபித தேரர் சிக்கலில் மாட்டிக்கொள்வார். தேர் தலில் வெற்றியீட்டினாலும் ஜனாதிபதி முறைமையை மாற்றியமைக்க முடியுமா என்பது கேள்விக்குறியே.

சோபித தேரருக்கு அரசியல் அனுபவம் கிடையாது. வேறு நபர்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே நடவடிக்கைகள் எடுக்க நேரிடும். ஜனாதிபதி தேர்தல் நடத்தாமலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்ய முடியும். அரசியல் சாசனத்தில் அதற்கு இடமுண்டு.

எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற்று பொது வேட்பாளராக போட்டியிட்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்ட மாதுலுவாவே சோபித தேரர் முயற்சிக்கின்றார். எனினும், இவ்வாறு தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் சோபித தேரர் சிக்கலில் மாட்டிக்கொள்வார்.

நாடாளுமன்ற ஆட்சி முறைமை ஒன்றை நிறுவுவதன் மூலம் நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்ய முடியும். சட்டங்களை உருவாக்கும் மற்றும் சட்டங்களை மாற்றியமைக்கும் அதிகாரம் நீதிமன்றுக்கு காணப்படுகின்றது. சட்டத்திருத்தங்களின் மூலம் ஜனாதிபதி முறைமையை ஜனாதிபதியின் பதவிக் காலம் உள்ளிட்டவற்றை மாற்றியமைக்க முடியும்.

ஜனாதிபதிக்கு தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு அவற்றை நாடாளுமன்றில் நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. எனவே நாடாளுமன்றின் ஊடாகவே திருத்தங்களை மேற்கொண்டு மாற்றங்களைச் செய்ய முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



## உலகில் முதல்முறையாக
# கண்ணின் கருவிழியில் பச்சை குத்திய நபர்

உலகின் முதல்முறையாக அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் கண்ணின் கருவிழியில் பச்சை குத்தியுள்ளார். அவருடைய செயல் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த 58 வயது வில்லியம் வொட்சன் என்பவருக்கு சிறுவயதிலேயே ஒரு கண்ணின் பார்வை பறிபோனது. சிறுவயதில் பள்ளியில் விளையாடும்போது, பந்து கண்ணில் பட்டதால், கடுமையாகப் பாதிக்கப்பட்ட வில்லியம், படிப்படியாக இடது கண்ணின் பார்வையை இழந்தார். அவருடைய இடது கண் கொஞ்சம் வித்தியாசமாக இருந்ததால், திடீரென அந்தக் கண்ணில் பச்சை குத்த முடிவு செய்தார்.


உபயோகம் இல்லாமல் இருக்கும் இடது கண்ணை அழகுபடுத்தவே அவர் தன்னுடைய கண்ணின் கருவிழியில் பச்சை குத்தியதாகக் கூறியுள்ளார்.



காதலிச்சா அண்ணன்கிட்ட சொல்றதும் காதலிச்சுப்போட்டு "அண்ணா"ன்னு சொல்றதும் பெண்களுக்கே உரிய சிறப்பியல்பாகும்

# அடுத்த மாதம் எத்தனை படங்கள்?







இந்த ஆண்டில் இதுவரை 150க்கும் மேற்பட்ட படங்கள் வெளிவந்துள்ள நிலையில் அடுத்த மூன்று மாதங்களில் 50 படங்களுக்கும் மேல் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே தீபாவளிக்கு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் 'ஐ, கத்தி, பூஜை' ஆகிய படங்களால் நவம்பர் மாதம் ஒரு சில வாரங்களுக்கு எந்தப் படமும் வெளியாகாத சூழ்நிலை உருவாகலாம். அந்த மூன்று படங்களுமே பெரும்பாலான திரையரங்குகளை ஆக்கிரமித்து விடும் என்பதால்தான் அந்த நிலை வரும். அதனால் முடிவடைந்துள்ள பல படங்களை தீபாவளிக்கு முன்னதாகவே வெளியிட பல தயாரிப்பாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஒக்ரோபர் மாதம் சுமார் 30க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் வெளியாகும் சூழ்நிலை உருவாகியுள்ளது. 'யான்' படம்தான் அடுத்த பெரிய படம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படத்தைத் தொடர்ந்து 'ஒரு ஊரில இரண்டு ராஜா, திருடன் பொலிஸ், தமிழுக்கு எண் 1ஐ அழுத்தவும், தெரியாமல் உன்னை காதலிச்சிட்டேன், சுற்றுலா, அர்ஜுனன் காதலி, குபீர், சோக்கு சுந்தரம், நான் பொன்னொன்று கண்டேன், ஜமாய், வருச நாடு, யாவும் வசப்படும், ஆ, அர்ஜுனின் ஜெய்ஹிந்த் 2, கப்பல், நம்பியார், மகாபலிபுரம்' என்று வெளியாக உள்ள படங்களைப் பற்றிய ஒரு நீளமான பட்டியல் உள்ளது.

நவம்பரில் 'உத்தம வில்லன், காவியத் தலைவன், அனேகன், மீகாமன், வை ராஜா வை' போன்ற படங்கள் வெளியாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தமாகப் பார்த்தால் 2014 இல் வெளியாகும் படங்களின் எண்ணிக்கை 250 தைத் தொட்டாலும் ஆச்சரியமில்லை.

## ரிலாக்ஸா வாசியுங்க

ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு வந்த கடிதம்:

'ஐயா! என் மனைவி என்னை விவாகரத்துச் செய்ய திட்டமிட் டிருந்தாள். உங்கள் பத்திரிகையில் வெளிவந்த விவாகரத்தும் அதன் விபரீத விளைவுகளும் என்ற கட்டுரையைப் படித்ததும் மனம் திருந்தி விவகாரத்து முயற்சிகளை கைவிட்டு விட்டாள்'

பிற்குறிப்பு: இத்துடன் நான் எனது சந்தாவை ரத்துச் செய்கிறேன். இனிமேல் உங்கள் பத்திரிகையை எனக்கு அனுப்ப வேண்டாம்....



# பேராசிரியரின் குப்பைத் தொட்டி



குப்பைத் தொட்டியில் வாழ்வதற்கு யாராவது விரும்புவீர்களா ? ஆனால் அமெரிக்காவைச் சேர்ந்த பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் குப்பைத் தொட்டியில் வசித்து வரும் தகவல் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்க பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் பேராசிரியரான வில்சன், பொதுமக்கள் சாதாரண வாழ்க்கையை விரும்புகின்றார்களா என்பதை ஆய்வு செய்வதற்காக, குப்பைத்தொட்டியில் ஒரு வருட காலம் வாழ்வதற்கு தீர்மானித்துள்ளதுடன், குப்பைத்தொட்டியொன்றை வீடாக மாற்றி, சுமார் 7 மாதங்களாக வாழ்ந்தும் வருகின்றார். குப்பைத்தொட்டி வீடானது 36 சதுர அடி அளவைக் கொண்டுள்ளது.

குப்பைத்தொட்டி வாழ்க்கையில் மிகவும் கடினமான விடயம் வெப்பத்தை தாங்கிக்கொள்வதேயாகும். எந்தவித அடிப்படை வசதிகளுமற்ற இந்த வீட்டில், வெப்பகாலத்தில் 45 பாகை செல்சியஸ் வெப்பமும் குளிர்காலத்தில் 5 பாகை செல்சியஸ் வெப்பமும் காணப்படுகின்றதாம். மேலும் மலசலகூடத்திலிருந்து வரும் நாற்றத்தையும் பொறுத்துதான் ஆகவேண்டும்.

எனினும் அவருடைய ஆராய்ச்சிக்கான புதிய வழிமுறைகளை கண்டுபிடிப்பதில் ஆர்வமாக இருக்கின்றார். ஆரம்பத்தில் இவருடைய இந்த திட்டத்தை பலரும் நிராகரித்தனர். இருந்தபோதிலும் திட்டத்தை கைவிடாமல் முயற்சித்து தற்போது தன்னுடைய ஆய்வின் முடிவு கட்டத்தில் இருக்கின்றார்.



# அளவுடன் நடிப்பு

சின்னத்திரை தொடர்களில் தொடர்ச்சியாக நடித்துக் கொண்டிருந்த ஸ்ரீவித்யா, திருமணம் செய்த பின்னர் நடிப்பதைக் குறைத்தார். குழந்தை பிறந்த பின்னர் நடிப்பதையே நிறுத்தினார். இப்போது குழந்தை வளர்ந்து விட்டதால் மீண்டும் நடிக்க வந்து விட்டார். தென்றல், சித்திரம் பேசுதடி, பொன்னூஞ்சல் தொடர்களில் நடித்து வருகிறார். 'திருமணத்துக்கு முன்பு நிற்க நேரமில்லாமல் நடித்துக் கொண்டிருந்தேன். திருமணம், குழந்தை என்று என்னை ரிலாக்ஸ் பண்ணிக் கொண்டேன். இப்போது மீண்டும் நடிக்க வந்து விட்டாலும் குழந்தையை கவனிக்க வேண்டும் என்பதால் நடிப்பதை குறைத்துக் கொண்டேன். தேர்ந்தெடுத்த தொடர்களில் மட்டுமே நடிக்கிறேன், என்கிறார் ஸ்ரீவித்யா.

# ஸ்பைக்ஸ் ஏஷியா நிகழ்வில் எட்டு இளம் இலங்கையர்கள்

2014 செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை சிங்கப்பூரில் இடம்பெறவுள்ள ஸ்பைக்ஸ் ஏஷியா விழா 2014 நிகழ்வில் கலந்துகொள்ளும் வகையில் இலங்கையின் விளம்பரத் தொழிற்றுறையை சேர்ந்த ஆறு இளம் தொழில் நெறிஞர்கள் மற்றும் இரண்டு இளம் மாணவர்கள், நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் மெட்டல் பேக்டர் மற்றும் சர்வதேச விளம்பரப்படுத்தல் கூட்டமைப்பு ஆகியவற்றின் பங்குடைமையுடன் முன்னெடுக்கப்பட்ட போட்டியின் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட மூன்று குழுக்கள் யங் ஸ்பைக்ஸ் ஏஷியா போட்டிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட ஊடக மற்றும் டிஜிட்டல் பிரிவுகளில் பங்கேற்கவுள்ளன.

அக்கடமி ஒஃப் டிசைன் இனைச் சேர்ந்த இரண்டு இளம் மாணவர்கள், இந்த நிகழ்வில் இடம்பெறவுள்ள யங் க்ரியேற்றிவ் அக்கடமியில் பங்குபற்றுவதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு ரீதியில் இடம்பெற்ற போட்டியில் 74 இளம் தொழில் நெறிஞர்கள் பங்கேற்றனர். பங்கேற்ற குழுக்களுக்கு சுருக்கமான விவரங்கள் அளிக்கப்பட்டதுடன். அது பற்றி. குறித்த நாளின் முடிவில் அவர்கள் பதிலளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். சுருக்க விவரத்துக்கு பதிலளிக்கும் வகையில் குழுக்கள் ஒவ்வொன்றும், விளம்பரப்படுத்தல் தொழிற்றுறையைச் சேர்ந்த முன்னணி தொழில் நிபுணர்கள் முன்னிலையில் தமது தீர்வுகளை காட்சிப்படுத்தினர்.

ஒருங்கிணைக்கப்பட்ட போட்டியில், வீதி விதிகளை அனுசரித்து பாதுகாப்பான வாகனம் ஓட்டுதல் குறித்தும், வீதியில் கைக் கொள்ள வேண்டிய பழக்கவழக்கங்கள் குறித் தும் சிறப்பாக குறிப்பிடும் ஊக்குவிப்பு ஒன் றினை முன்னெடுக்குமாறு போட்டியாளர்கள் கேட்கப்பட்டனர். ஊடக போட்டிப் பிரிவில் கலந்து கொண்ட போட்டியா ளர்கள், நகரத்தில் வாழ்பவர்கள் நீரை அளவோடு உபயோகிப் பதற்கான சமூக விழிப்புணர்வை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதற்கான தீர்வை அளிக்குமாறு கோரப்பட்டனர். டிஜிட்டல்குழுவினர், டிஜிட்டல்தளங்களை உபயோகித்து எக்ஸ்கிள மேசன்' என்ற ஆடை வர்த்தக நாமமானது, நுகர்வோரை அதிகளவில் சென்றடைதல் மற்றும் செயற்திறனுள்ள முறையில் நுகர்வோருடன் ஊடாடுதல் ஆகியவற்றை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டனர்.

இந்த வருட போட்டிகள் குறித்தும் பங்கேற்க தெரிவு செய்யபட்டிருக்கும் வெற்றியாளர்கள் குறித்தும் கருத்துகளை பகிர்ந்துகொண்ட ஸ்பைக்ஸ் ஏஷியா இலங்கைப் பிரதிநிதி ரணில் டி சில்வா, இந்த வருடம் நடைபெறும் ஸ்பைக்ஸ் ஏஷியா விழாவில் எம் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் எட்டு இளம் திறமையாளர்கள் தேர்வுசெய்யப்பட்டிருப்பது எனக்கு மிகுந்த பெருமிதத்தை அளிக்கின்றது. ஸ்பைக்ஸ் ஏஷியா விழா மற்றும் யங் ஸ்பைக்ஸ் போட்டி ஆகியன இலங்கையில் உள்ள இளம் தொழில் நெறிஞர்களுக்கு சர்வதேசத் தராதரங்களுக்கமைவான படைப்பாற்றல் வெளிப்பாட்டை அளிக்கும். இது, இலங்கையை பிராந்திய உலகப்படத் தில் பெயர்பெறுவதற்கு உதவியளிக்கும் என நான் நம்புகிறேன். இலங்கை ரீதியில் தேர்வு பெற்றிருக்கும் குழுக்கள், பிராந்தியத்தின் மிகச் சிறந்த குழுவினருடன் போட்டியிடவுள்ளனர். இந்த போட்டி நிகழ்வில் அவர்கள் பெறுமதிமிக்க அனுபவத்தை ஈட்டுவதற்கான வாய்ப்பைப் பெறுவர். இது இந்தத்துறையில் குறித்த போட்டியாளர்கள் சிறந்த தொழின்முறை நிபுணர்களாக உருவாவதற்கு வழிவகுக்கும். இது போன்ற சந்தர்ப்பங்கள், இலங்கையின் விளம்பரத் தொழிற்றுறையை மேம்படுத்துவதற்கு சிறந்ததொரு வாய்ப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை என்று குறிப்பிட்டார். (த)






# செலான் வங்கியின் புத்தாக்க வழிமுறை

செலான் 'டிக்கிரி பொல' முன்னெடுப்பானது கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் சர்வதேச சிறுவர் தினத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதிலிருந்து நாடு முழுவதிலுமுள்ள 5000 இற்கும் அதிகமான முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பாடசாலை சிறுவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக அவர்களது நடத்தை மற்றும் சிந்தனை போன்ற விடயங்களில் மாற்றமொன்றை உருவாக்கியுள்ளது. தொழில் முயற்சியாண்மையின் மகிழ்ச்சியை அது அவர்களுக்கு கற்றுக் கொடுத்திருப்பது மட்டுமன்றி, சேமிப்புப் பழக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் படிப்படியாக அறிவுறுத்தி இருக் கின்றது. இதற்கு இன்னுமொருபடி மேலே சென்று, இந்த சின்னஞ் சிறார்கள் மத்தியிலும் அதேபோல் பாடசாலை மற் றும் உள்ள 10 பேர் சமூகத்தில் உள்ள அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மத்தியிலும் கடைப்பிடிக்கப்படும் வாழ்க்கைமுறை போக்குக்குள் உள்ளடங்கும் விதத்தில் மேற்படி இரு கருத்திட்டங்களும் இந்த செயற்திட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

பாரம்பரிய கிராமங்களில் அமைக்கப்படும் 'பொல' (சந்தை) இன் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு புதுமையான கருத்திட்டமாக செலான் 'டிக்கிரி பொல' காணப்படுகின்றது.

'இலங்கை சிறுவர்களுக்கு சேமிப்புப் பழக்கத்தில் ஓர் உறுதிமிக்க அடித்தளத்தை இடுவதே எமது நோக்கமாகும். சேமிப்பின் முக்கியத்துவம் தொடர்பில் சிறுவயதிலேயே சிறுவர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண் டும் என்று நாம் நம்புகின்றோம். அவ்வாறு இருந்தால் மட்டுமே அதற்குப் பின்னர் வரும் வருடங்களில் அவர்களால் நிதி அடிப்படையில் சௌகரியமான நிலையில் வாழ முடியும். இதற்கு மேலதிகமாக, அவர்களது வாழ்க்கைக்கு உறுதியான அடித்தளத்தை கட்டமைக்கக் கூடிய தொழில் முயற்சியாண்மையின் அடிப்படை திறன்களையும் நாம் வழங்குகின்றோம்.

செலான் 'டிக்கிரி பொல' முன்னெடுப்பின் மூலம் 5000 இற்கும் அதிகமான சின்னஞ் சிறார்களின் வாழ்க்கையை மட்டுமன்றி அவர்களது பெற்றோர்கள் மற்றும் ஏனைய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வாழ்க்கையையும் தொட்டுள்ளோம். இதுவே எமது மிகத் தெளிவான இலக்காகும்' என்று செலான் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) டிலான் விஜயசேகர தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டிலிருந்து செலான் டிக்கிரி பொல நிகழ்வுகள் - அவிசாவளை, அகலவத்தை, பொகவந்தலாவை, மட்டக்களப்பு, சாவகச்சேரி, தெபரவேவ, எம்பிலிப்பிட்டிய, காலி, யாழ்ப்பாணம், கம்புறுப்பிட்டிய, கிளிநொச்சி, நெல்லியடி, பெல்மதுளை, றுவன்வெல்ல, றைகம, திஸ்ஸமஹாராம, பதுளை, வலஸ்முல்லை, பண்டாரகம, மாத்தறை, மாவத்தகம, கிராண்ட்பாஸ், அம்பலாந்தோட்டை, மத்துகம, வெலிமட போன்ற நாடு முழுவதிலும் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்றிருக்கின்றது.

# ஹொக்கி விளையாட்டை மீளக் கட்டியெழுப்பும் ரிட்ஸ்பரி

இலங்கையில் முதல் தர சொக்லட் வர்த்தகநாமமான ரிட்ஸ்பரியின் பூரண அனுசரணையுடன் இலங்கையின் ஹொக்கி விளையாட்டுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கும் குறிக்கோளுடன், மாத்தளை புனித.தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர் ஹொக்கி சங்கத் தலைமையின் கீழ் ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி 'ரிட்ஸ்பரி பாடசாலைகளுக்கிடையேயான அணிக்கு எழுவர் கொண்ட ஹொக்கி போட்டித்தொடர்' மாத்தளை எட்வர்ட் பார்க்கில் இடம்பெறவுள்ளது.

கடந்த காலப்பகுதியில் இலங்கையில் ஹொக்கி விளையாட்டு பல பின்னடைவுகளை சந்தித்திருந்தன. இந்த விளையாட்டுக்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல வீரர்களை உருவாக்கி தந்த மாத்தளை நகரில் மீண்டும் ஹொக்கி விளையாட்டை கட்டியெழுப்புவதற்கான அடித் தளத்தை ஏற்படுத்தியுள்ளமை விசேட விடயமாகும்.

இதற்கான ஆரம்ப கட்ட முயற்சிகளை மாத்தளை புனித.தோமஸ் கல்லூரி பழைய மாணவர் ஹொக்கி சங்கம் ஆரம்பித்துள்ளதுடன், இது பாடசாலை மற்றும் ஹொக்கி விளையாட்டுக்கு இடையே பிரிக்க முடியாத பிணைப்பை பிரதிபலிப்பதாகவும், இந்தப் பாடசாலையினால் உருவாக்கப்பட்ட வீரர்கள் ஹொக்கி விளையாட்டுக்கு பங்களிப்பை வழங்கவுள்ளதாகவும் கல்லூரியின் அதிபர் லெப்ரினன்ட் கேணல் தம்பிய வனசிங்க தெரிவித்தார்.

'சி.பி.எல். நிறுவனம் கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், ஸ்குவாஷ் மற்றும் கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளுக்கு அனுசரணை வழங்கியுள்ளது. அது மட்டுமன்றி, ஜோர்ன் டார்பட், வர்த்தக மெய்வல்லுநர் போட்டி மற்றும் சர்வதேச பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகளுக்கும் அனுசரணை வழங்கி தடகளத் துறையை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை எமது நிறுவனம் மேற்கொண்டுள்ளது. கடந்த காலங்களில் நம்நாட்டில் புகழ்பெற்று விளங்கிய ஹொக்கி விளையாட்டை மீண்டும் தேசிய மட்டத்துக்கு உயர்த்துவதே எமது முயற்சியாகும்' என சி.பி.எல். இன் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேஜா பீரிஸ் தெரிவித்தார்.

இந் நாட்டில் புகழ்பெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுசரணை வழங்கி வந்த ரிட்ஸ்பரி நிறுவனமானது தற்போது ஹொக்கி விளையாட்டினை பாடசாலை மற்றும் தேசிய மட்டத்தில் மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தேவையான ஆதரவை வழங்கியுள்ளது' என மாத்தளை புனித.தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர் 'ஹொக்கி சங்கத்தின்' செயலாளர் எரிக் ஹூலங்கமுவ தெரிவித்தார்.

எந்தவொரு விளையாட்டையும் மக்கள் மத்தியில் பிரபல்யமடையச் செய்வதற்கு சக்திமிக்க அனுசரணை அவசியமாகும். இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஹொக்கி விளையாட்டுக்கு புகழ்பெற்று விளங்கிய மாத்தளை நகரிலிருந்து ஆரம்பிக்கவுள்ள ஹொக்கி விளையாட்டை நாடு முழுவதும் பரவச் செய்வதற்கு நாம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு ரிட்ஸ்பரி ஆதரவு வழங்குகின்றமை மாபெரும் சக்தியை அளிக்கிறது.



இந்த விளையாட்டின் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் போட்டியின் ஊடாக தேசிய ஹொக்கி விளையாட்டுக்கு ஆற்றும் சேவைகள் குறித்து மிக கவனத்துடன் அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

48 போட்டிகளை கொண்ட ஒருநாள் போட்டித்தொடரில் கொழும்பிலிருந்து றோயல் கல்லூரி, ஆனந்தா கல்லூரி, வெஸ்லி, டி.எஸ்.சேனாநாயக்க மற்றும் கல்கிசை புனித.தோமஸ் கல்லூரிகளும், கண்டியிலிருந்து தர்மராஜ, திரித்துவக் கல்லூரி, புனித.சில்வெஸ்டர் மற்றும் கிங்ஸ்வுட் கல்லூரிகளும், மாத்தளையிலிருந்து புனித.தோமஸ், விஜய, கிறிஸ்துதேவ மற்றும் சாஹிரா கல்லூரிகளும், யாழ்ப்பாண வித்தியாலயம், காலி அலோசியஸ், வென்னப்புவ ஜோசப் வாஸ், நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா, கம்பளை பண்டாரநாயக்க மற்றும் பதுளை தர்மதூத கல்லூரிகள் போன்றன பங்குபற்றவுள்ளன.

# சீன ராணுவத்துக்காகவே வடக்கில் காணி சுவீகரிப்பு

## மாகாண விவசாய அமைச்சர் கூறுகிறார்

கிளிநொச்சி, செப். 30

வடக்கில் சீன இராணுவத்தை நிலைகொள்ள வைப்பதற்காக அரசு இராணுவத்துக்குப் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் கணக்கில் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.



வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி மண்டலாய் பிள்ளையார் கோவிலடியில் நில அளவை முயற்சியை தடுத்து நிறுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி கிராம அலுவலரின் பிரிவின் மண்டலாய், தட்டாங்குன்று, புல்லாவெளி ஆகியபிரதேசங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 700 ஏக்கர் பரப்பளவிலான காணி மேட்டு நிலச் செய்கை, வயல் செய்கை ஆகியவற்றுக்கான காணியாகும். இவை உறுதிகள் உள்ள பொதுமக்களது சொந்தக் காணிகளாகும்.

மேற்படி காணியை இராணுவத்தினரின் பயிற்சிக்காகச் சுவீகரிப்பதற்கான முயற்சியாக கடந்த 21ஆம்திகதி நில அளவையாளர்கள் நில அளவை செய்வதற்கு வருகை தந்திருந்தார்கள். பொது மக்கள் எமக்கு தகவல் தந்தார்கள். நானும் ஏனைய உறுப்பினர்களும் அந்தப் பகுதிக்குச் சென்று நில அளவீட்டு முயற்சியை கடுமையாக எதிர்த்திருந்தோம். அந்த முயற்சி அன்று கைவிடப்பட்டிருந்தது. இன்று (நேற்று) மீளவும் அந்தக் காணியை அளப்பதற்கு நில அளவையாளர்கள் வருவதாகப் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

காணி உரிமையாளர்கள் எங்களுக்கு இந்தத் தகவலை தெரிவித்திருந்தார்கள்.நாங்களும் அந்த இடத்துக்குச் சென்றோம். பொதுமக்களும் வந்திருந்தார்கள். நிலஅளவையாளர்கள் பொலிஸாருக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள்.பொலிஸார் என்ன காரணமோ தெரியாது அவ்விடத்துக்கு வரவில்லை. நாங்கள் எங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தி நில அளவை செய்வதற்கு அனுமதியளிக்கமாட்டோம் என்று கூறியிருந்தோம். தங்களுடைய காணிகளை அளக்க அனுமதிக்கமாட்டோம். காணி வழங்கமாட்டோம் என்றும் பொதுமக்கள் கூறியிருந்தார்கள். கடிதங்களும் வழங்கியிருந்தார்கள். இதனை அடுத்து நிலஅளவையாளர்கள் அவ்விடத்தை விட்டு விலகிச்சென்றார்கள். ஒவ்வொரு நாளும் இராணுவம் காணியை அளக்க முயற்சிப்பது எமது வேலைகளையும் காலத்தையும் செலவழிக்க எடுக்கும் முயற்சியாகவுள்ளது.

மக்களை சட்டரீதியான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கூறியிருக்கின்றோம். விரைவில் காணிக்குரிய மக்கள் வழக்குத் தாக்குதல் செய்யவுள்ளார்கள். எம்மைப் பொறுத்தவரையில் போர்க் காலத்தில் கூட இவ்வளவு பெரிய நிலப் பரப்பில் இராணுவம் நிலை கொண்டிருக்க வில்லை. போருக்குப் பின்னர் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் கணக்கில் காணியினை இராணுவம் சுவீகரிப்பதற்கான நோக்கம் என்ன? இதன் பின்னால் பெரும் பின்புலம் இருப்பதாகக் கருத வேண்டியுள்ளது. அந்நிய இராணுவங்கள் குறிப்பாகச் சொல்வதானால் இப்பிராந்தியத்தில் சீன இராணுவம் நிலைகொள்வதற்கும் இராணுவ முகாம்கள் தேவைப்படலாம் என்பதன் காரணமாகத்தான் வடக்கில் பெருமளவு நிலப் பரப்பில் அரசு காணி சுவீகரிப்பில் ஈடுபட்டுள்ளது என்று நினைக்கவேண்டியுள்ளது.

வீதிகள் பெருமளவில் அகலிப்பு செய்யப்படுவதன் நோக்கம் மக்கள் நலனில் கொண்ட அக்கறையில்லை. மக்களின் நலனில் இந்த அரசு அக்கறை கொள்ளுமானால் கிராமப் புறங்களின் வீதிகள் புனரமைக்கப்பட்டிருக்கும். மக்களின் வாழ்வாதாரத்துக்குரிய நிலங்கள் கையளிக்கப்பட்டிருக்கும். காணி சுவீகரிப்புகள் ஒருகாலமும் இடம்பெற்றிருக்காது. இது அரசின் ஒரு இராணுவ நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் நடைபெறுகின்றது. அரசின் காணி சுவீகரிப்புக்களை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்-என்றார்.(த-18)

## தாய்மார் கழக அங்கத்தவர் கௌரவிப்பு

கிளிநொச்சி, செப் 30

கண்டாவளைப் பிரதேசத்தில் சிறார்களினதும் கர்ப்பிணித் தாய்மார்களினதும் போசணை மட்டத்தை உயர்த்துவதற்குச் சேவையாற்றிய தாய்மார் கழக அங்கத்தவர்களை பாராட்டிச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் தேசிய போஷாக்கு மாதத்தையொட்டிய வகையில் கிராம மட்டங்களில் சிறார்களினதும் கர்ப்பிணித் தாய்மார்களினதும் போசணை மட்டத்தை உயர்த்துவதற்கு சேவையாற்றி தாய்மார் கழக அங்கத்தவர்களைப் பாராட்டிச் சான்றிதழ் வழங் கும் நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி தர்மபுரம் இலக்கம்-01 பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தேவநேசனும், சிறப்பு விருந்தினர்களான கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கண்டாவளைப் பிரதேச செய லாளர் ரி.முகுந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-55)

# நுகர்வோர் நலன் பேணல் குறித்து வவுனியாவில் கலந்துரையாடல்



வவுனியா, செப். 30

நுகர்வோர் நலன் பேணுகை தொடர்பான வேலைத்திட்டம் தயாரித்தல் தொடர்பாக வவுனியா மாவட்டத்திலுள்ள மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச மட்டங்களிலுள்ள உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

நுகர்வோர் அமைச்சினால் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலுக்கு வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ச.மோகனநாதன் வரவேற்புரையை வழங்கினார். சிரேஷ்ட அமைச்சர் எஸ்.ரி.நாவின்ன இதில் கலந்து கொண்டு நுகர்வோர் நலன் பேணுகை தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

இந்த நிகழ்வில் நிகழ்ச்சி திட்டத்தின் நோக்கங்கள் பற்றி நுகர்வோர் அமைச்சின் செயலகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கே.கே.வி.எஸ்.ரணவீர, பேராசிரியர் நவரத்தின, திட்டமிடல் பணிப்பாளர் மங்கள குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர்.

இதில் நுகர்வோர் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், அதனை எவ்வாறு தடுப்பது என்பன பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் நுகர்வோர் நகரச் சந்தை தொடர்பாக பிரதேச மட்டத்தில் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டுப் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்ட பின்னர் பிரதேச செயலாளர் ஊடாக உரிய அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் என அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மங்கள குணவர்த்தன தெரிவித்தார். (த-421)

## சந்தன மரக் கன்றுகள் வீடு வீடாக விற்பனை

வவுனியா, செப்.30

வவுனியாவில் சந்தன மரக் கன்றுகளை விற்பனை செய்வதில் தனியார் நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வீடு வீடாகச் சந்தன மரக்கன்றுகளை விற்பனை செய்து வருகின்றனர்.



மரமொன்று ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய் யப்படுகிறது.

இந்த மரக்கன்று வீட்டில் வளர்க்கப்படும் போது அது கருகிப் போனால் மீள அதற்குப் பதிலாக மரக்கன்று வழங்கப்படும் எனவும் சந்தன மரக்கன்று வளர்ச்சியடைந்து மூன்றாண்டுகளின் பின்பு அதன் வித்தைக் கொள்வனவு செய்வதற்கும் சந்தன மரத்தை அறுவடை செய்வதற்கும் தாம் முன்வருவோம் என்று கூறி இந்தச் சந்தன மரக்கன்றுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதனை வளர்ப்பதற்கு உரிய சட்டச் சிக்கல் எதுவும் இல்லை என்பதனால் வீட்டில் சந்தன மரக்கன்றுகளை நடுவதில் வவுனியா மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். (த-402)

# 1800 வீடுக்ளில் டெங்கு பரவும் அபாயம் மன்னாரில் சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை

மன்னார், செப். 30

மன்னார் சுகாதார திணைக்களத்தினால் கடந்த 26 ஆம், 27 ஆம் திகதிகளில் மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பிரிவுகளில் உள்ள 5 ஆயிரம் வீடுகளில் டெங்குப் பரிசோதனை செய்யப்பட்டபோது அவற்றில் ஆயிரத்து 800 வீடுகளில் டெங்கு நுளம்பு பரவும் சூழல் நிலவுவது அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.றோய் பீரிஸ் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கிராமங்கள் அனைத்திலும் உள்ள 5 ஆயிரம் வீடுகள் கடந்த வெள்ளி,சனி ஆகிய இரண்டு நாள்களில் பரிசோதனை செய்யப்பட்டு டெங்கு இல்லாத மன்னார் நகரை உருவாக்கும் முதற்கட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.



இதன்போது மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட 5 ஆயிரம் வீடுகளில் குறித்த இரு தினங்களிலும் டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுசரணையுடன் குறித்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சோதனைகளின் போது சுமார் ஆயிரத்து 800 வீடுகளில் நுளம்புபரவும் சூழல் உள்ள இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

அவற்றில் 75 வீதமான வீடுகளில் உடனடியாக துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டன. மிகுதி வீடுகளின் உரிமையாளர்களுக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதி களில் வடக்கு மாகாண விசேட டெங்கு ஒழிப்பு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் அடையாளம் காணப்பட்ட குறித்த வீடுகள் விசேட கவனம் செலுத்தப்பட்டு மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

குறித்த பரிசோதனையின் போது ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட வீடுகள் மீண்டும் டெங்கு நுளம்பு பரவும் வகையில் வைத்திருக்கக் காணப்படும் பட்சத்தில் குறித்த வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக உடனடியாகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். றோய் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (த)

## இரண்டு நாள் மழையினால் நெற்செய்கையாளர் மகிழ்ச்சி

### விதைப்புப் பணிகள் ஆரம்பம்

அளவெட்டி,செப்.30

கடந்த இரண்டு நாள்கள் பெய்த மழையினால் வயல் நிலங்கள் செழிப்புற்றுக் காணப்படுவதால் காலபோக நெற்செய்கையாளர்கள் மிகவும் மகிழ்வடைந்ததுடன் நெல் விதைப்புக்கான செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

அளவெட்டி, கந்தரோடை, மல்லாகம், சண்டிலிப்பாய் வயல் வெளிகளில் நெல் விதைப்புக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபடுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஏற்கனவே வயலை உழுது பயன்படுத்தி வைத்திருந்தவர்கள் நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர். ஏனைய விவசாயிகள் நெல் விதைப்பதற்காக தமது நிலங்களை தயார்ப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

சென்ற முறை மழையின்மை காரணமாக உரிய தரமான விதை நெல்லைத் தம்மால் சேகரிக்க முடியவில்லை என்று, இதன் காரணமாக இந்த முறை விதை நெல்லுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச கமத்தொழில் சேவை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்ட விதை முடிவடைந்துள்ளதாகவும் இங்கு தருவிக்கப்பட்ட விதை நெல் ஒரு புசல் ஆயிரத்து 330 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

பிரதேச கமத்தொழில் சேவை நிலையங்களுக்கு வந்த விதை நெல் அளவு குறைவாக வந்தமையால் பெரும்பாலான விவசாயிகள் அங்கு விதை நெல்லைப் பெறமுடியாமல் போயுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் கடைகளில், வீடுகளில் விதை நெல் ஒரு மூடை 5 ஆயிரம் ரூபா முதல் 6 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும். இத னால் நடுத்தர குறைந்த வருமானம் பெறும் விவசாயிகள் உரிய காலத்துக்கு விதைநெல்லைப் பெறுவதில் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்வதாகவும் கவலை தெரிவித்தனர். (த-36)

# முதியோர் தின நிகழ்விலும் மூக்கை நுழைத்த ஆளுநர்

கைதடி, செப்.30

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் சர்வதேச முதியோர் வாரத்தை நாளை முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஏழாம் திக்தி வரை கைதடி அரச முதியோர் இல்லத்தில் கொண்டாடவுள்ளது. இந்த நிகழ்வுக்கு திணைக்கள அதிகாரிகள் ஏற்கனவே செய்திருந்த ஏற்பாடுகளை ஆளுநரின் உத்தரவு என்று கூறி பிரதம செயலாளர் மாற்றி அமைத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

நிகழ்வின் முதல் நாளில் விருந்தினராக அழைக்கப்பட இருந்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பிரதம செயலரின்தலையீட்டை அடுத்து கடைசித் தினத்திற்கான விருந்தினராக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச முதியோர் தினத்தை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் கைதடி முதியோர் இல்லத்தில் நடத்துவதே வழமை. இம்முறையும் அதற்கான ஏற்பாடுகள் திணைக்கள அதிகாரிகளால் வழமை போன்று மேற்கொள்ளப்பட்டன. அழைப்பிதழ்களும் இறுதி செய்யப்பட்டிருந்தன.

எனினும், சில தினங்களுக்கு முன்னர் பிரதம செயலர் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்ட திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு நிகழ்ச்சி நிரலில் மாற்றங்கள் செய்யும்படி அறிவுறுத்தல் வழக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அதனடிப்படையில் புதிய நிகழ்ச்சி நிரலும் புதிய அழைப்பிதழும் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏன் இவ்வாறு திடீர் தலையீடு மேற்கொள்ளப்பட்டது என்று பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸிடம் உதயன் பத்திரிகை கேள்வி எழுப்பியதற்கு, "அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. திணைக்களத்தினரே நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டார்கள்" என்று தெரிவித்தார். ஆனால், ஆளுநரின் உத்தரவின் பேரில் மாற்றங்களைச் செய்யும்படி திணைக்கள அதிகாரிகள் பிரதம செயலாளரினால் கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டனர் என்று தெரியவந்துள்ளது.

புதிய நிகழ்ச்சி நிரலின்படி, நாளை ஆரம்பமாகவிருக்கும் முதல்நாள் நிகழ்வுகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி றமேஸும் கலந்துகொள்வார்கள்.

இறுதிநாள் நிகழ்வுகளும் வடக்கு மாகாண உள்ளூராட்சி சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தலைமையில் நடைபெறவுள்ளன. பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரனும் சிறப்புவிருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர். இந்த நிகழ்வுகளில் முதி யோர் கௌரவிப்பு உட்பட பல நிகழ் வுகளும் இடம்பெறவுள்ளன. (உ-288)



கந்தரோடையைச் சேர்ந்த சமூக ஆர்வலரான திரு செல்லத்துரை சற்குணலிங்கம் என்பவர் 10ஆயிரம் ரூபா பெறுமதியான சத்திரசிகிச்சை உபகரணங்களைத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி திவாகரிடம் நன்கொடையாக வழங்கினார். (த-36)

## வளலாய் அ.மி.த.க பாடசாலையை மீள ஆரம்பிப்பதில் இழுபறி நிலை

*பெற்றோர்கள் தரப்பில் விசனம்*

அச்சுவேலி, செப்.30

வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் மற்றும் அதிகாரிகள் வாக்குறுதி செயற்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது எனப் பெற்றோரும் வளலால் மீள்குடியேற்றச் செயற் குழுவினரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வளலாய் மீள்குடியேற்றச் செயற்குழு சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

1882 ஆம் ஆண்டு அமெரிக்கா மிஷனரியால் ஆரம்பிக்கப்பட்டுக் குறித்த பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவியதும் காலத்தால் முந்தியதுமான வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரின் ஓய்வு நிலையோடு 1996 ஆம் ஆண்டு மூடப்பட்டது.

வளலாய் மீள்குடியேற்றத்தோடு பாடசாலையை மீள ஆரம்பிப்பதற்கு 60 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக மீள்குடியேற்ற செயற்குழுவுக்கு அறிவிக்கப்பட்டதோடு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் வளலாய் மக்களுடனான நேரடிச் சந்திப்பின்போதும் உறுதிமொழி தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை ஆரம்பிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை பாடசாலையை ஆரம்பிப்பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் இழுத்தடிப்பது தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் நேரடிக் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா மற்றும் மாகாணக் கல்வி.அமைச்சு உயர் அதிகாரிகள், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பாடசாலைச் சூழலை நேரில் பார்வையிட்டுப் பெற்றோர் மற்றும் மீள்குடியேற்றச் செயற்குழுவுடன் கலந்துரையாடினர்.

கடந்த மார்ச் மாதம் வளலாய் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் இந்த வருடம் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் மே மாதத்தில் இருந்து பாடசாலை ஆரம்பிக்கும் என வாக்குறுதி வழங்கியதோடு பாடசாலை குறிப்பிட்ட பிரகாரம் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு மக்கள் முன்னிலையில் பணிப் புரை வழங்கினார்.

ஆனால் இந்த வருடம் மூன்றாம் தவணை ஆரம்பமாகியுள்ள நிலையிலும் பாடசாலையை ஆரம்பிப்பதற்கோ அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கோ முற்படாமை பாடசாலைச் சமூகத்தின் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது என மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் எஸ்.துரைரத்தினம் தெரிவித்தார். (த-11)

## சாவகச்சேரி பிரதேச சபையின் உப அலுவலகம் நேற்று திறப்பு

தென்மராட்சி, செப்.30

படையினரால் விடுவிக்கப்பட்ட பின்னர் 4 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுச் சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் உப அலுவலகம் மற்றும் ஆயுள்வேத மருந்தகம் ஆகியவற்றின் திறப்பு விழா நேற்று திங்கள்கிழமை இடம்பெற்றது.

பிரதேச சபை தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உப அலுவலகப் பிரிவை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும், ஆயுள்வேத மருந்தகப் பிரிவை தமிழரசுக் கட்சி யாழ்.மாவட்டத் தலைவர் கனகசபாபதியும் நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

பெயர்ப் பலகைகளை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனும், வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தனும் திரைநீக்கம் செய்து வைத்தனர். (த-9)

## வாசிப்பு மாத நிகழ்வுகள் ஒக்ரோபர் 13இல் ஆரம்பம்

கரணவாய், செப்.30

வாசிப்போம் அறிவை வளர்ப்போம் தேசியவாசிப்பு மாத நிகழ்ச்சிகளை பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை நடைமுறைப்படுத் துமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

தேசியவாசிப்புமாதநிகழ்வுகளை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்துமாறு கல்விச் சேவைகள் அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே குறித்த காலப் பகுதியில் பின் வரும் கால ஒழுங்கில் பாடசாலைகளில் நிகழ்வுகளை நடைமுறைப்படுத்துமாறும் அது தொடர்பான அறிக்கையினை பணிப்பாளர், பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவு, கல்விச் சேவைகள் அமைச்சுஇசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

13ஆம் திகதி 'வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்' என்ற தலைப்பில் நூல்களை வாசிப்பதன் முக்கியத்துவம் தொடர்பான உரை நிகழ்த்துதல்

14ஆம் திகதி 'கற்றல் சூழல்' தலைப்பில் பாடசாலை நூலகம் மற்றும் அதன் சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.

15ஆம் திகதி 'நூல்களை வாசிப்போம் அறிவை வளர்ப்போம்' என்ற தலைப்பில் 30 நிமிடங்கள் பாடசாலை மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் போட்டி நடத்துதல்.

16ஆம் திகதி 'வாசிப்பதற்கு நூல்களைத் தாருங்கள், பறப்பதற்கு சிறகைத் தாருங்கள்' என்ற தலைப்பில் நூற்கண்காட்சி, நூலக சேகரிப்பை அதிகரிப்பதற்காக அன்பளிப்புக்களை பெற்றுக்கொள்ளல்.

17ஆம் திகதி 'பல்வேறு வகையில் வாசிப்போம் கௌரவிப்போம்' என்ற தலைப்பில் வாசிப்பு முகாம்களை நடத்துதல் மற்றும் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருள்களை வழங்குதல். (த-108)

## இனங்காணப்பட்ட பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை

சங்கானை, செப் 30

வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்விளான், பொன்னாலை மேற்கு மற்றும் இனம் காணப்படும் பிரதேசங்களில் குடிதண்ணீருக்காக கஷ்டப்படும் மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படும். வலி. மேற்கு பிரதேச செயலகமும் பிரதேசசபையும்கூடுதல்ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு நிதியைப்பெற்று மக்களின் குடிதண்ணீர்த் தாகம் தீர்ப் போம்.

வேள்ட் விசன் நிறுவனத்தின் செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெ.அன்ரனி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கல்விளான் மக்களுக்கு நிலைத்திருக்கக் கூடிய திட்டத்தின் கீழ் மக்களின் பங்களிப்புடன் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வலி.மேற்கில் உள்ள இரு செயலகங்களான பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஒத்துழைப்பை நாடியுள்ளோம்.

இதனைவிடச் சுகாதார வைத்திய அதிகாரி, தேசிய நீர்வழங்கல்வடிகாலமைப்புசபை, நீர்வளசபை மற்றும் நிறுவனங் களின் உதவியையும் நாடியுள் ளோம். எனினும் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வலி.மேற்குப் பிரதேச சபை முதற் கட்டமாகப் பூரண பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளது.

இதற்காக நீர் பெறக்கூடிய நீரேந்து நிலைகளை ஆய்வு செய்து, பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இதற்குமேலாகவேள்ட்விசன்முன்னெடுக்கும் திட்டத்துக்கு வலி. மேற்கு உறுப்பினர்கள் பூரண பங்களிப்பை வழங்கியுள்ளனர்-என்றார். (த-50)

## கை கழுவுதல் தினப் போட்டி

உலக கை கழுவுதல் தினத்தையொட்டி தென்மராட்சிக் கல்வி வலயத்தினர் மாணவர்களுக்கிடையிலான சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ள்னர்.

போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. வேல்ட் விசன் நிறுவன அனுசரணையுடன் முதன் முறையாக நடத்தப்படவுள்ள போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும்மாணவர்களுக்குமுறையே 5ஆயிரம் ரூபா, 3ஆயிரம் ரூபா, 2ஆயிரம் ரூபா பணப்பரிசில்களும்போட்டியில்கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சிறப்புப்பரிசுப்பொதிகளும்வழங்கப்படவுள்ளன. எதிர்வரும் பத்தாம்.திகதி உலக கை கழுவுதல் தினத்தன்று பரிசில்கள் வழங்கப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அ.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (த-7)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அமைதி காக்கட்டும் தமிழ்நாட்டு மக்கள்

தமிழ்நாட்டில் இன்று காணப்படும் அமைதியின்மையை ஒரு தேசிய எழுச்சியாகவோ மக்கள் புரட்சியாகவோ கருதிவிட முடியாது. ஓர் அரசியல் தலைவர் அதாவது தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டத்தின் முன் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் அவர் பதவி வகித்த காலத்தில் மேற்கொண்ட பல்வேறு பொதுநலப் பணிகளால் பயன்பெற்ற மக்களும், அரசியல்வாதிகளும் அவர் சிறைவாசம் அனுபவிப்பதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் உணர்ச்சிவசப்பட்டிருக்கிறார்கள். அதனால் தமிழ்நாடு ஒரு போதும் கண்டறியாத வகையில் வன்செயல்களும், தீக்குளிப்புகளும், எதிர்த்தரப்பினரின் கொடும்பாவி எரிப்புகளும், வாகனங்களைக் கொளுத்துவதும், அடித்து நொருக்குவதும் என இன்னோரன்ன சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. இவைகளை உடனடியாக காவல் துறையினரால் கட்டுப்படுத்த முடியாமல் போனமைக்கு ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்களே இந்த காட்டுமிராண்டிச் செயல்களில் இறங்கியிருந்தார்கள் என்பதும் ஒரு காரணம் எனக் கூறப்படுகின்றது.

அதுமட்டுமல்ல அண்மையில் நடந்து முடிந்த மத்திய மக்கள் பேரவைக்கான தேர்தலில் எதிர்த்தரப்புக்கள் பலவற்றையும் மண் கவ்வச் செய்து அ.இ.அ.தி.மு.கழகத்தை தமிழ்நாட்டு மக்கள் அபரிமிதமான வெற்றிக்கு இட்டுச் சென்றிருந்தார்கள். அந்தத் தேர்தலின்போது ஜெயலலிதா அம்மையார் செய்த பரப்புரைகளில் மத்திய ஆட்சியில் தமது கட்சிக்கு ஆதிக்கம் இருக்கும் வகையில் வெற்றியை அள்ளித் தாருங்கள் என்று மக்களைக் கேட்டிருந்தார். அது மட்டுமல்ல மத்தியில் பிரதமராக வருமளவுக்குக் கூட ஒரு வாய்ப்பு ஏற்படக்கூடும் என்று அந்தக் கட்சியினர் எதிர்பார்த்திருந்தார்கள். அவ்வாறு நிகழுமானால் இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திய மத்திய அரசின் கொள்கையில் பெரும் மாற்றம் ஏற்படலாம், இலங்கை அரசுக்கு கடும் நெருக்குதல்களை ஏற்படுத்தலாம் என்றும் அனேகர் எதிர்பார்த்திருந்தார்கள்.

ஆனால் அவை ஒன்றும் நடக்கவில்லை. மாறாக ஜெயலலிதா சட்டத்துக்கு மாறாக சொத்துக் குவித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டார். சட்டத்துக்கு மாறாக என்றால் பொதுமக்கள் சொத்து சூறையாடப்பட்டிருப்பதாகவே கருத்துக் கொள்ள வேண்டும். ஒரு ரூபாய் சம்பளம் பெற்றுக் கொண்டவர் பல கோடிகளை எவ்வாறு சொத்தாக சேர்த்திருக்க முடியும் என்ற கேள்வி பெரிதாகவே கேட்கப்பட்டிருந்தது. ஜெயலலிதா மீதான வழக்கு பல நீதிமன்றங்களிலும், பல நீதிபதிகளின் முன்னிலையிலும் , ஏன் வேற்று மாநிலத்திலும் 18 ஆண்டுகாலம் நடைபெற்று வந்துள்ளது. அப்போதெல்லாம் தமது தரப்பிலான நியாயங்களை எடுத்து வைத்து வாதாட அவருக்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன. மிகச் சிறந்த வழக்கறிஞர்களும் அவருக்காக வாதாடியிருந்தார்கள். அவர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கவும் பெருமுயற்சி எடுத்திருந்தார்கள். இறுதியில் சட்டம் அவரை குற்றவாளியாகக் கண்டது. எனவே சட்டத்தை மீறி எவரும் செயற்பட முடியாது என்பதை மக்கள் உணர்வது அவசியம். அதை உணர வைக்க வேண்டியது ஆட்சியிலிருப்போரின் கடமை, பொறுப்பு. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மீறல்கள் இரண்டு நாள்களுக்கு மேல் நீடித்திருப்பது கவலையளிப்பது ஒருபுறமிருக்க தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சிக்கும் அது வழிவகுத்துவிடலாம். அதனால் புதிதாக பதவி ஏற்றிருக்கும் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் அந்த வகையில் அவசியமான நடவடிக்கைகளில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். சொல்லப் போனால் செல்வி ஜெயலலிதா மீது விதிக்கப்பட்டிருக்கும் தண்டனையை எதிர்த்து அவர் மேல் முறையீடு செய்வதற்கும் வசதிகள் இருப்பதை மக்கள் உணர வேண்டும். ஒருவேளை அதில் அவர் வெற்றி பெறவும் செய்யலாம். மேலும் சிறையில் இருக்கும் அம்மையாரே விஷேட செய்தியொன்றை வழங்கி மக்களை அமைதியுடன் இருக்கும்படி கேட்டுக் கொள்ள முடியும். சட்டம் ஒழுங்கு நிலை பெறாவிடில் நீதியும் நியாயமும் கிடைக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

# குடிமக்களின் தேய்வுக்கா ஆசிய எழுச்சி?



கானநாதன்

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, புவியரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், குறிப்பாக அமெரிக்காவுக்கும்-ரஷ்யாவுக்கும் ஏற்பட்டுள்ள பனிப்போரின் காரணமாக வல்லரசு அந்தஸ்தைப் பெறும் வாய்ப்பைப் பெறும் போட்டிகள் சீனாவுக்கும்-இந்தியாவுக்குமிடையில் அதிகரித்திருக்கின்றன. 21 ஆம் நூற்றாண்டில் ஆசியாவே உலக அரசியல் ஒழுங்கை தீர்மானிக்கும் சக்தியாகும் என்று மோடி பரவலாகத் தெரிவித்தும் வருகின்றமையும் நோக்கத்தக்கது.

### மோடியின் பயணங்கள்

மோடி முதலில் ஜப்பானுக்குச் சென்று பிரதமர் ஷின்சே அபேயைச் சந்தித்துப் பேசினார். பின்னர் இந்தியாவுக்கு வந்த சீன குடியரசு தலைவர் ஜீ ஜின்பிங்கை வரவேற்றார். இப்போது அமெரிக்க அதிபர் ஒபாமாவைச் சந்திக்கச் சென்றிருக்கிறார். சீனாவை அடக்கவும், ரஷ்யாவுக்குப் பதில் தரவும், ஈராக்- சிரியாவில் மத பயங்கரவாதிகளைச் சமாளிக்கவும் இந்தியாவை அணைக்கத் தயாராகிறது அமெரிக்கா. நவீன ஆயுதங்கள், தொழில்நுட்பம், இராணுவப் பயிற்சி, உளவுத் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதில் ஒத்துழைப்பு, ஆகியவற்றை இந்தியாவுக்கு அளிக்கவும் அமெரிக்கா தயாராக இருக்கிறது. அமெரிக்கா, இந்தியாவுக்கு அத்தனை சலுகைகளையும் தரத் தயாராக இருந்த போதிலும் ரஷ்யா, சீனா, ஈரான் ஆகியவற்றுடன் உறவாடுவதால் பெரும் சலுகைகளை விட்டுத்தர இந்தியா தயக்கம் காட்டும். சீனத்துடன் இந்தியா கொண்டுள்ள உறவு சிக்கலானது. இரண்டுமே வர்த்தகம், முதலீடுகளைப் பெருக்கிக்கொள்ள நினைக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட பொருளாதார நிலைமையை ஜனநாயகப்படுத்த நினைக்கின்றன. ஆயினும் இதற்கு வரம்புகளை அவை வைத்திருக்கின்றன. அண்மையில் இந்தியாவுக்கு வந்திருந்த சீனக் குடியரசுத் தலைவர் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இருதரப்பு வர்த்தகம் குறித்தே அதிகம் கலந்துரையாடினர். சீன தலைவர் சென்றவுடனேயே. இந்தியாவை நோக்கி அந்நிய முதலீட்டாளர்களைப் படையெடுக்கும்படி அறிவித்தல் விடுத்திருந்தார் மோடி. ஆக, உலகளவில் ஜனநாயகமயப்பட்ட வணிக வலையமைப்பை ஆசியாவை நோக்கி இழுத்துவரும் வேலைத்திட்டத்தில் இந்தியாவும்-சீனாவும் கவனம் செலுத்தத் தொடங்கியியுள்ளன என்பது இதனூடாக வெளிப்படுகின்றது. இரு நாடுகளுக்குமிடையில் எல்லைப் பதற்றங்கள் நீடித்துக் கொண்டிருந்தாலும், தமக்கிடையிலான வணிக உறவுகளில் சமநிலைத்தன்மையை. முரணற்ற நிலையை தக்கவைத்துக் கொள்வதில் அதீத அக்கறையெடுக்கின்றன.

### சீனாவுக்கு இணையாக இந்தியா

ஓரணிக்கு வரும் இரு நாடுகளும், ஆசியாவில் அடுத்தடுத்த நிலைகளில் இருக்கின்ற நாடுகளின் மீதான வெளியுறவு, படையியல் கொள்கைகளிலும் தந்திரமிக்கப் போக்கைக் கடைபிடிக்கின்றன. அவைகளின் முதலாவது தெரிவாக இப்போதைக்குப் பாகிஸ்தானே இருந்துவருகின்றது. அதிலும் படையியல் ரீதியான சிக்கல்கள் இருதேசங்களுக்குமே உண்டு. ஆசியாவில் சீனாவுக்கு இணையாக இராணுவ பலத்தில் வர வேண்டும் என்று இந்தியா நினைக்கிறது. பாகிஸ்தானுடனான உறவை சீனா முறித்துக்கொள்ள வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. அமெரிக்காவுடன் இந்தியா இராணுவக் கூட்டாளியாகச் சேர்ந்தால், சீனா இந்தியாவுக்கு இராணுவ ரீதியான பாடத்தைப் புகட்டும். இந்தியாவுடன் போருக்குப் போக வேண்டாம் என்று பாகிஸ்தானை சீனாதான் இப்போது தடுத்துக்கொண்டிருக்கிறது. இந்தியாவுடன் உள்ள உறவு காரணமாகத்தான் ரஷ்யா பாகிஸ்தானுக்கு ஆயுதம் விற்காமல் இருக்கிறது. அமெரிக்காவுடன் இந்தியா கூட்டு சேர்ந்தால், ரஷ்யாவும், பாகிஸ்தா னுக்கு ஆயுத விற்பனையைத் தொடங்கிவிடும்.

இந்திய இராணுவத்தின் வலிமையைப் பெருக்குவது. பயங்கர வாதத்தை ஆதரிப்பதாகக் கூறி பாகிஸ்தானைத் தனிமைப்படுத்துவது. பலுசிஸ்தான் பிரிவினை வாதிகளை ஊக்குவிப்பது. பாகிஸ்தானைச் சீர்குலைக்க டி.டி.பி. பயங்கரவாதிகளைத் தூண்டிவிடுவது என்ற உத்தியை நரேந்திர மோடி கைக் கொள்ளப் பார்க்கிறார். இதனால் பாகிஸ்தானின் தேசியவாதிகளும், மதத் தீவிரவாதிகளும் இந்தியாவுக்கு எதிராகப் போராடுவதில் மேலும் உறுதியடைவார்கள். இந்தியாவுடன் ராணுவ சமபல நிலையை எட்ட பாகிஸ்தான் மேலும் அணு ஆயுதங்களை நாடத் தொடங்கும்.

காஷ்மீர் பிரச்சினை, பயங்கரவாதத் தாக்குதல்கள், அணுகுண்டை வெடித்துப்பார்க்கும் ஆர்வம் மிக்க ராணுவச் சூழல் காரணங்களால் இந்திய - பாகிஸ்தா[illegible] தேக்கநிலை, சர்வதேச அமைதி, பாதுகாப்புக்[illegible] ஆபத்தானதாகமாறக்கூடும். வல்லரசாகும் இந்தியாவின் ஆசை, பாகிஸ்தானுடன் ஒரு போருக்கு நிச்சயமாக வித்திடும் அபாயமும் உண்டு.

### இலங்கை மீது ஒரு கண்

பாகிஸ்தானுக்கு அடுத்த நிலையில் இருப்பது இலங்கைதான். இலங்கையின் வரலாறு ஆரம்பித்த காலம் தொட்டு, ஆசியப் பிராந்திய வல்லரசுகளான இந்தியா-சீனா ஏதோ ஒரு விதத்தில் இந்தநாடு மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்திவந்துள்ளன. அரசியல், வணிகம்,கலாசாரம், படையியல் உதவிகள், நேரடி ஆக்கிரமிப்புகள் என அந்த உறவு நீடிக்கின்றது. இன்றும் இரு தேசங்களுமே இலங்கையைத் தமது நிலமாகக் கணக்கெடுத்துக் கொண்டு, போட்டியிட்டுக் கடனுதவிகளை வழங்குகின்றன. இலங்கையின் பெரும்பாகம் சீனாவின் ஆதிக்கத்துக்குள் வந்துவிட்டது. அண்மையில் சீன குடியரசு தலைவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும், அசைக்கப்பட்ட செங் கொடிகளும், இலங்கையை சீனாவின் இன்னொரு மாகாணமாகப் பிரகடனப்படுத்திவிட்டார்களா என எண்ணத் தோன்றியது. இலங்கையைக் கைப்பற்றிக் கொள்வதற்கான போட்டியில் சீனா இப்போதைக்கு முன்னிலையில் நிற்கிறது. ஆனால் இந்தியா மிகவும் அயலில் இருப்பதாலும், நேரடியான கலாசார தொடர்புகளைக் கொண்டிருப்பதனாலும், அந்த நாட்டின் உறவை முறித்து, சீனாவுடன் நெருங்க முடியாது. என்னதான் இலங் கையை சீனா சுற்றிவளைத்துக் கால் பதித்தாலும், இந்தியாவின் தலையீடற்ற இலங்கையை எதிர்பார்க்க முடியாது.

### உலக அரசியலின் மையமாக ஆசியா

இவ்வாறு ஆசியாவை உலக அரசியலின் மையமாக மாற்றுவதில் எழுந்திருக்கின்ற வணிக, அரசியல் போட்டிகள், இந்த நாடுகளின் குழப்பத்திற்கே வழி வகுக்கும். வணிக வளர்ச்சியைத் தடுக்க முடியாது. அதே நேரத்தில் வறுமைக்குள் தள்ளப்படுவோரின் எண்ணிக்கையையும் தடுக்க முடியாது. இந்தப் பிராந்தியத்தின் பொருளாதாரம், சீனாவைத் தவிர்த்து மக்கள் உழைப்பை அதிகம் நம்பியிருப்பதால், நாடு வளர்ச்சியைத் தொட, அதற்காக உழைத்தவர்கள் தேய்ந்து போகும் நிலையே உருவாகும். இவ்வாறான குடிமக்களின் பொருளாதாரம், வல்லரசு அல்லது உலகுக்குத் தலைமைதாங்கும் சக்தி என்ற கனவைத் தொடர்ந்து தள்ளாட்டத்துக்குள் வைத்திருக்கும்.

டெய்லி மிரர்
பத்திரிகையிலிருந்து
தமிழாக்கம் : வீ.கே. ஆர்.

# குடும்ப ஆட்சியில் நாட்டின் நிர்வாகம்

## மனம் திறக்கிறார் அத்துரலிய ரத்ன தேரர்



இந்த நாட்டின் நிர்வாகம் யாவும் ஒரே குடும்பத்தின் கட்டுப்பாட்டின் கீழான முறைமையின் கீழ் சுழன்று கொண்டிருக்கின்றது. உதாரணமாகச் சொல்லப் போனால் பெரும்பான்மையான அமைச்சு திணைக்களப் பொறுப்புக்கள் ஜனாதிபதிக்கும் அவரது சகோதரரான பஸில் ராஜபக்‌ஷவுக்குமிடையில் பகிரப்பட்டுள்ளன. ஏனைய அமைச்சுகள் காலியான நிலையிலேயே காணப்படுகின்றன. அவற்றினால் மக்களின் வாழ்க்கையில் எத்தகைய மாற்றங்களையும் ஏற்படுத்திவிட முடியாது.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான வண. அத்துரலிய ரத்ன தேரர். கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 57 ஆவது பிரிவின் பிரகாரம் ஜனாதிபதியால் நிதியமைச்சர் ஒருவரை நியமனம் செய்ய முடியும். ஆனால் எமது நாட்டைப் பொறுத்த வரையில் அரசியலமைப்புக்கு விரோதமான வகையில் ஜனாதிபதி நிதி அமைச்சின் பொறுப்புக்களையும் கவனித்து வருகின்றார்.

**நிதியின் 75 வீதம் ஜனாதிபதியிடம்**

நாட்டின் 75 வீதமான நிதியைக்கையாளும் பொறுப்பு ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளது. ஏனென்றால் 75 வீதமான நிதி ஒதுக்கீடுகள் விமான நிலையங்கள், துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியனவற்றின் கட்டுமானப் பணிகளுக்கே மேற்கொள்ளப்படுகின்றன.

**தற்போது இந்த அரசு அதிகார மயக்கத்தில் காணப்படுகின்றது. இதனால் அடி மட்டத்தில் என்ன நடக்கின்றது என்பதைப் புரியாத நிலையில் உள்ளது. ஜனாதிபதியைச் சுற்றி இருக்கும் கையாள்கள் அவர் நாட்டில் நடக்கின்றவற்றை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லையென்பதில் பிடிவாதமாகக் காணப்படுகின்றனர்.**

இவை யாவும் ஜனாதிபதியின் பொறுப்பிலேயே உள்ளதெனவும் ரத்ன தேரர் மேலும் தெரிவித்தார்.

**நிறைவேற்று அதிகாரங்கள்**

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்; தனி நபர் ஒருவரிடம் அதிகாரங்கள் குவிந்துள்ளமை இந்த நாட்டின் ஜனநாயகத்தையே சீரழித்து வருகின்றது. குறிப்பாகக் கூறுவதென்றால் பொறுப்புக் கூறும் தன்மையை இல்லாது செய்தமை, தன்னிச்சையான வகையில் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடல், தேர்தல் திணைக்களம், நீதித் துறை, லஞ்ச ஊழல் ஆணையகம் முதலியவற்றிலான தலையீடுகள் மற்றும் அதிகாரம் செலுத்துதல் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும்.

தற்போது இந்த நாடு ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சின் செயலாளர் ஜயசுந்தரவின் கட்டுப்பாட்டில் உள்ளது. நிதி தொடர்பான கொள்கைகளை அவர்களே வகுக்கின்றனர்.

**விகிதாசார தேர்தல்முறை**

இந்த நாட்டின் விகிதாசார தேர்தல் முறைமையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். ஜனாதிபதி முறைமை என்பது மாற்ற முடியாததொரு திருஷ்டிதோஷம் அல்ல.

எமக்கு வாக்களித்தமக்களுக்கு கடமைப்பட்டிருப்பதன் காரணமாகவே நாம் இந்த அரசுடன் தொடர்ந்து இணைந்துள்ளோம். மேலும் இந்த அரசு அமைவதற்கு நாமும் உதவியுள்ளோம். ஆனால் இந்த அரசு தனது கூட்டாளிகளுடன் எந்தவொரு விடயம் தொடர்பாகவும் கலந்து ஆலோசனை செய்வதில்லை. இதற்கு உதாரணமாக நிலக்கரி மூலமான மின்சார உற்பத்தி, நாடு முழுவதும் காணப்படும் சிறுநீரகப் பிரச்சினைகள் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும்.

ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது அரசு தேர்தல் விதிகளை மீறியுள்ளது. அரசு பதவியில் நீடிப்பதற்காக தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகின்றது. இன்று ஒரு மதிய உணவுப் பொட்டலத்தை வழங்கிவிட்டு வாக்குகளைப் பெறும் நிலைதான் காணப்படுகின்றது. மக்கள் இது தொடர்பாக ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஊவா மாகாண சபைக்கான தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு யார்தான் ஆலோசனை கூறினார்களோ தெரியவில்லை. தற்போது இது தொடர்பாக ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமான அமைச்சர் ஒருவர் மீது குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் எம்மால் அரசியலமைப்பில் மேற் கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் தொடர்பாக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்காதுவிட்டால் நாம் மாற்றுவழியொன்றை நாட வேண்டியிருக்குமெனக் கூற விரும்புகின்றேன். இது எமது தார்மீகக் கடமையுமாகும்.

**அதிகார மயக்கத்தில் அரசு**

தற்போது இந்த அரசு அதிகார மயக்கத்தில் காணப்படுகின்றது. இதனால் அடி மட்டத்தில் என்ன நடக்கின்றது என்பதைப் புரியாத நிலையில் உள்ளது. ஜனாதிபதியைச் சுற்றி இருக்கும் கையாள்கள் அவர் நாட்டில் நடக்கின்றவற்றை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லையென்பதில் பிடிவாதமாகக் காணப்படுகின்றனர். எனவே மக்களின் மனவியல்புகளை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஜாதிக ஹெல உறுமய கட்சி தயாரித்துக் கொண்டிருக்கும். அரசமைப்பின் சட்ட வரைவு தொடர்பாக அவரிடம் கேட்டபோது:

90 வீதமான வேலைகள் முடிவு பெற்றுள்ளன. இது தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அடுத்த மாதம் 14 ஆம் திகதி இதனை மக்கள் முன்கொண்டு செல்லவுள்ளோம் என அவர் பதிலளித்தார்.

**பொது வேட்பாளர்**

சோபித தேரர் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்குவது தொடர்பாகக் கேட்டபோது: ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களை இல்லாதொழிப்பதில் நாம் ஒன்றுபட்டுள்ளோம். சிலர் இதை முழுமையாகவே நீக்கப்பட வேண்டுமென அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். நாம் இது தொடர்பாக ஆராயவுள்ளோம்.

---

*(நேற்றைய தொடர்ச்சி)*

# இருளில் அமிழ்ந்து தவிக்கும் அளுத்கம முஸ்லிம் மக்கள்

## நீதி, நியாயம் கிடைக்குமா என்பதிலும் சந்தேகம்

**மொஹமட் சிராஸ்**

இறந்தவர் எனது சகோதரர். மொஹமட் நஸார் அல்லது மொஹமட் சிராஸ் என்பார்கள். அவருக்கு இரண்டு பிள்ளைகள். அவர் துப்பாக்கிச் சூட்டினால் மரணித்துள்ளார். விரட்டி விரட்டித் துப்பாக்கியால் சுட்டார்கள். தற்போது இது தொடர்பாக எந்தப் பேச்சும் கிடையாது.

**தாக்குதல்கள்**

தர்காநகரிலுள்ள வலிப்பிட்டிய, சம்சுதீன் மாவத்தையிலுள்ள 88/42ம் இலக்க வீட்டில் வசிக்கும் ஒருவர் கூறுகிறார்; அன்று நான் வெலிப்பன்னையிலுள்ள மரண சடங்கொன்றுக்குச் சென்றேன். எனது வாகனத்தில் எனது மனைவி, பிள்ளை, நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவரப்பெரும ஆகியோர் இருந்தனர். கற்கல், தடிகள், இரும்பு, பெற்றோல் போத்தல்கள், மணல் நிரம்பிய போத்தல்களோடு பெருந் தொகையானோர் பொலிஸ் ஊரடங்கையும் பொருட்படுத்தாமல் டொல்பின் ரக வாகனமொன்றை தாக்கினார்கள். பொலிஸார் சுமார் 500 பேரளவில் அந்த இடத்தைச் சுற்றியிருந்தார்கள். இந்த வேலையை மேற்கொண்டவர்கள் சிங்களவர்கள். பொலிஸார் அதனை தடுக்கவில்லை. அவ்வாறு தாக்கியவாறே எமது வாகனத்தை நோக்கி வந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் எனது மனைவி பயத்தின் காரணமாக மயக்கமுற்றார். எனது வாகனத்தின் மீது தடிகளால் தாக்கிய அதேவேளை-



மயக்கமுற்றிருந்த எனது மனைவியின் முகத்திலும் தடியால் தாக்கினார்கள். அவரது வலப்பக்கமாக உள்ள கண் முழுமையாக சேதத்துக்குள்ளாகியது. களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றேன். பின்னர் நாம் நவலோக வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொண்டோம். பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள் இரண்டை மேற்கொண்டோம்.

**எனது சமூகமே உதவியது**

எனது சமூகம் எனக்கு இதற்காக உதவியது. 9 மாதங்களைக் கொண்ட எனது மகன் அப்துல்லாவின் தலையிலும் தடியால் தாக்கினார்கள். அதனால் நரம்பொன்று சேதத்துக்குள்ளாகியுள்ளதால் மண்டையோட்டில் 18 தையல்கள் போடப்பட்டுள்ளன. இந்த தாக்குதல் காரணமாக எனது மனைவியின் முகம் எந்தளவுக்கு விகாரமடைந்துள்ளதெனின் எனது குழந்தை தாயிடமிருந்து பாலருந்துவதைக் கூட நிறுத்தியுள்ளது. எனது சிறிய மகன் தாயிடம் செல்வதற்கு அச்சப்படுகிறார். தாயை வெறுக்கிறார். இன்றுள்ளவர்கள் மனோ ரீதியாகக் கஷ்டப்படுகின்றார்கள். நாம் எவருக்கும் தவறு செய்யவில்லை. எங்களுக்கு இவ்வாறு செய்தது ஏன்?

**முஸ்லிம் மக்களின் உதவிகள்**

இவ்வாறு இடம்பெற்ற அவர்களுக்கு உதவுவதற்கிருந்த ஒரே ஒரு வழிமுறை அவர்களது சமூகமாகும். இந்த ஒன்றிணைவையும் ஒற்றுமையையும் அல்லாவின் பெயரால் நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்வது சிறந்ததாகும். இன்று இராணுவத்தினர் இந்த வீடுகளை நிர்மாணித்து வழங்குகிறார்கள். அது அரசு நிதியின் மூல மாகும். அது மாத்திரம்தான். எனினும் அவர்கள் இழந்த சொத்துக்கள், இருப்பதற்கான இடத்தையுமிழந்து கூலி வீடுகளை வாடகைக்குப் பெறுதல், காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்தல், சத்திரசிகிச்சை மேற்கொள்ளல் போன்ற அனைத்தையும் சுமக்க வேண்டியிருந்தது. அளுத்கம, தர்காநகர் முஸ்லிம்களாகும். முஸ்லிம் இளைஞர்கள், யுவதிகள், புத்திஜீவிகள், வியாபாரிகள் உருவாக்கிக் கொண்டுள்ள இந்த ஐக்கியத்தினால் அனைத்தும் இல்லாவிடினும் அதில் அரைவாசியையாவது நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதுவரை காயப்பட்டவர்களுக்கு சத்திரசிகிச்சைகளுக்காக இலட்சக்கணக்கில் இவர்கள் செலவு செய்துள்ளார்கள். தீப்பற்றிய சொத்துக்களை மீள உருவாக்கிக் கொள்ள உதவி செய்கிறார்கள். இவை அனைத்தையும் அவர்கள் முறையாக மேற்கொள்கின்றார்கள். அது இனமென்ற ரீதியில் மகிழ்ச்சியடைவதற்கும் இந்த வழிமுறை காரணமாக பொறுமையை தக்க வைத்துக் கொள்வதற்கும் முற்பட்டுள்ளார்கள். தனது மதம் கருதி அவர்கள் உழைக்கின்ற நூற்றுக்கு மூன்றுவீதமான பணம் ஏழைகளின் நலன்களுக்காக் ஒதுக்கப்பட வேண்டும். அவர்கள் இவை அனைத்தையும் மேற்கொள்வது அவர்களுக்கிடையேயுள்ள ஐக்கிய மூலதனத்தினாலாகும். இதற்கு பொறாமைப்படுவதும் முஸ்லிம் வியாபாரிகள் மீது பொறாமைப்படுவதும் கொடுமையாகும். அவர்கள் முஸ்லிமாக இருந்தாலும் இறுதியாக இலங்கையர்கள். அந்த வகையில் இலங்கையராகவிருப்பது எமக்கு பெருமையாகும்.

அளுத்கம இடர்களுக்கு மத்தியில் உயிர் பிழைத்திருப்பது இவர்களது ஒத்துழைப்பினால் என்பதைக் கூற வேண்டும் என அங்கு இருக்கும் முஸ்லிம் மக்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். (முற்றும்)

நன்றி-ராவய

# டி.எச்.எல். நிறுவனத்தின் புதிய விநியோக முயற்சி



உலகளாவிய ரீதியில் விநியோக சேவையை வழங்கிவரும் டி எச்.எல். நிறுவனம் புதிய முயற்சியொன்றில் இறங்கியுள்ளது. இதன்படி தனது விநியோக சேவையில் ட்ரோன் வகை சிறிய விமானங்களைப் பயன்படுத்தவுள்ளது.

முதன் முதலில் இந்தச் சேவை ஜேர்மனியில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

செக்கனுக்கு 18 மீற்றர் என்ற வேகத்தில் 50 மீற்றர் உயரத்தினூடாக பறக்கக்கூடிய இவ் விமானங்கள் 5 கிலோகிராம் வரை எடையுள்ள பொருள்களை காவிச் செல்லக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இவ்வகை சேவையை அமேஸன், கூகுள் மற்றும் அரபிக் எமிரேற் நிறுவனங்கள் ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | 6 | 4 | | 8 | |
| 1 | 6 | | | | 2 | | 4 | 5 |
| | | 4 | | | 3 | 7 | | 2 |
| 5 | 2 | | | | | 1 | | 6 |
| | | 1 | | | | 2 | | |
| 7 | | 6 | | | | | 5 | 8 |
| 3 | | 9 | 8 | | | 5 | | |
| 6 | 1 | | 7 | | | | 2 | 3 |
| | 4 | | 3 | 1 | | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 2 | 7 | 4 | 8 | 3 | 6 | 9 |
| 7 | 4 | 3 | 1 | 6 | 9 | 5 | 8 | 2 |
| 6 | 8 | 9 | 2 | 5 | 3 | 4 | 7 | 1 |
| 1 | 3 | 6 | 4 | 9 | 5 | 7 | 2 | 8 |
| 9 | 2 | 8 | 3 | 7 | 1 | 6 | 4 | 5 |
| 4 | 5 | 7 | 8 | 2 | 6 | 9 | 1 | 3 |
| 3 | 7 | 1 | 9 | 8 | 4 | 2 | 5 | 6 |
| 2 | 9 | 5 | 6 | 1 | 7 | 8 | 3 | 4 |
| 8 | 6 | 4 | 5 | 3 | 2 | 1 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## உண்மையான அன்பு வெறுப்பைக் காட்டாது

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



அன்பு என்னும் இந்த வார்த்தையின் பொருளைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம், சுதந்திரம் இல்லாத வரையில் ஒரு மனிதனிடம் அன்பு தோன்றுவதில்லை. ஓர் அடிமையிடம் உண்மையான அன்புக்கு இடமேயில்லை. நீங்கள் ஓர் அடிமையை விலைக்கு வாங்கி விலங்கு பூட்டி உங்களுக்காக வேலை செய்யச் சொல்லுங்கள். அவன் வேலை செய்வான். ஆனால் அவனுக்கு உங்கள் மீது அன்பு இருக்கவே இருக்காது. இவ்வாறு நாம் உலகப் பொருள்களுக்காக அடிமைபோல வேலை செய்தோமானால் அவை மீது எமக்கு அன்பு என்பதே இருக்க முடியாது. நாங்கள் செய்யும் செயல்களும் உண்மையான செயல்களாக இருக்க முடியாது. எமது உறவினர்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் எம்முடைய சுகத்துக்காகவுமே செய்யப்படுகின்ற வேலையை போன்றதே இவையும். சுயநலத்துடன் செய்யும் வேலை அடிமை வேலையே.

அன்பின் மூலமாக செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும். அமைதியையும் ஆசிகளையும் தன்னுடைய எதிர்விளைவாகக் கொண்டுவராத அன்புச் செயல்கள் உலகத்தில் எதுவும் இல்லை. உண்மையான வாழ்வு, உண்மையான ஞானம், உண்மையான அன்பு என்ற இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று மிக நெருக்கமாக இணைந்தவை ஆகும். உண்மையான அன்பு எப்போதுமே வெறுப்பைக் காட்டாது. அன்பு காட்டுபவரிடமோ காட்டப்படுபவரிடமோ துன்பத்தையோ துயரத்தையோ உண்டாக்காது. அன்பு எப்போதும் இன்பத்தையே எதிர் விளைவாகத் தருகிறது. இன்பத்தைத் தராத அன்பு அன்பு அல்ல. துன்பம், பொறாமை எதுவுமற்று மனைவி, மக்கள், உலகம், உயிர்கள் அனைத்தையும் சுயநலமின்றி நேசிப்பதே உண்மையான அன்பாகும்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்**: உங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைகளில் தலையிடுவதும் குற்றம் குறை சொல்வதையும் தவிர்த்தல் நலம். முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். செலவுகளைத் திட்டமிட்டு செய்வது நல்லது. தாமத நிலையும் மாறும்.

**இடபம்**: உத்தியோகத்தர்களுக்கு ஊதிய விடயங்களில் நல்ல மனநிலை இருக்கும். பணியாள்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். கலைத்துறைகளில் உள்ளவர்களுக்கு புகழ் கிடைக்கும். தங்கள் தொழிலை விரிவுபடுத்திக் கொள்ள சரியான நேரம் இது.

**மிதுனம்**: வேலையில் இருந்த பளு ஓரளவுக்குக் குறையும். அதில் இருந்து வந்த தாமத நிலையும் மாறும். வெளிநாட்டு வேலையை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

**கடகம்**: விலகி நின்ற உறவுகளும் உரிய நேரத்தில் கை கொடுப்பார்கள். உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். பயணங்களின்போது கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் நல்ல பெறுபேறுகளைப் பெறுவார்கள்.

**சிங்கம்**: மனதைச் சஞ்சலத்தில் ஆழ்த்துவதைத் தவிருங்கள். கலைத்துறையினருக்கு ஓரளவு நன்மைகள் வந்து சேரும். முன்னோர்கள் வழிபாட்டால் நேர்மறையான செயல்கள் அனைத்திலும் வெற்றிகள் ஏற்படும்.

**கன்னி**: எதிரிகளின் தொல்லைகள் குறையும். உங்கள் பக்கமுள்ள நியாயம் ஓங்கும். திருமண பாக்கியம் கைகூடி வரும். குடும்பத்தில் விட்டுக் கொடுத்து நடவுங்கள். மேலதிகாரிகளை அனுசரித்து நடவுங்கள்.

**துலாம்**:பணவரவு கிடைக்கும். அதை உரியதாக செலவழிப்பதில்தான் உங்கள் திறமை இருக்கிறது. இரக்கப்பட்டுச் செய்த உதவி கூட ஏன் செய்தோம் என்று எண்ண வைக்கும். சுபகாரிய விடயங்கள் தொய்வு இல்லாமல் நடக்கும்.

**விருச்சிகம்**: அரசல்புரசலாக உங்களைக் கேலி பேசியவர்கள் கூட தங்களது தவறான போக்கை மாற்றிக் கொள்வர். பரம்பரைச் சொத்துக்கள் சிலருக்கு அமையும். உங்களது நேர்மையான முன்னேற்றத்தால் எந்தத் தடங்கல்கள் வந்தாலும் சாதிப்பீர்கள்.

**தனுசு**: குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகன்று நிம்மதி பிறக்கும். தாய் மற்றும் தாய் வழி உறவினர்கள் மூலம் பாசம் அன்பு பெறுவீர்கள். அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**மகரம்**: வீண் வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். அலைச்சல்களுடன் நடைபெற்ற செயல்கள் நல்லபடியாக முடிவடையும். வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் கை வந்து சேரும். சிலர் மனம் விரும்பிய வீட்டுக்குக் குடி பெயர்வார்கள்.

**கும்பம்**: ஆடம்பரக் கேளிக்கைகளுக்காக செலவு செய்வதைக் குறைத்துக் கொள்ளவும். சில நேரங்களில் யோசிக்காமல் பேசி வம்பில் மாட்டிக் கொள்ள நேரலாம். உங்கள் இரகசியங்களை எவரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

**மீனம்**: நினைத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. வெளிநாட்டில் வசிப்பவர்கள் நாடு திரும்பி இங்கே தொழில் தொடங்குவதற்கு வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**நாளை**

**புரட்டாதி-15 புதன்கிழமை 01.10.2014**

திதி: ஸப்தமி மு.ப.10.40 வரை
நட்சத்திரம்: மூலம் மு.இ.08.47 வரை

சுபநேரம்:04.32-06.02 வரை
இராகுகாலம்:12.02-01.32 வரை



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.30
யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் ஈ.கே குமரையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க் கிழமை 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வர விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.55 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (து-23)

# குருநகர் கார்மேல் போய்ஸ் தனதாக்கியது கிண்ணத்தை



யாழ்ப்பாணம், செப். 30
அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்திய மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற வடக்கு மாகாண ரீதியிலான இறுதியாட்டத்தில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துக் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி 12 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அழகன் 18 பந்துகளில் இரண்டு 6 ஓட்டங்கள் அடங்கலாக 26 ஓட்டங்களையும், அஜன் 17 பந்துகளில் இரண்டு 6 ஓட்டங்கள் அடங்கலாக 24 ஓட்டங்களையும் பவீன் ஓர் 6 ஓட்டம் அடங்கலாக 13 ஓட்டங்களையும், செல்டன் ஒரு 6 ஓட்டம் அடங்கலாக 7 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி சார்பில் நிஷா 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3இலக்குகளையும். அருண 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்குகளையும். சிந்து 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்குகளையும். வீழ்த்தினர்.

90 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி 9.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 75 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சிந்து இரண்டு 6 ஓட்டங்கள் அடங்கலாக இரண்டு நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 34 ஓட்டங்களையும், நிக்சன் ஓர் 6 ஓட்டம் அடங்கலாக 15 ஓட்டங்களையும். அருண் இரண்டு 6 ஓட்டங்கள் அடங்கலாக 13 ஓட்டங்களையும். தமது அணி சார்பாகப் பெற்றனர்.

குருநகர்கார் மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் றொக்சன் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 4 இலக்குகளையும். அலன் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்குகளையும், கிர்ஷாந்த் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்குகளையும் அஜன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் றொக்சனும் தொடர் ஆட்டநாயகனாக அஜனும் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்தப் போட்டியில் ரசிகர்களின் மனம் கவர்ந்த வீரருக்கான வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. மனங்கவர்ந்த வீரருக்கான போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணித்தலைவர்செல்டனும்கொக்குவில்ஸ்ரீகாமாட்சி அணி வீரன் ஜெயறூபனும் இடம் பெற்றனர். ரசிகர்களின் குறுந்தகவல்கள் வாயிலாக வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் செல்டன் அதிகூடிய வாக்குகள் வித்தியாசத்தின் மூலம் வெற்றி பெற்று ரசிகர்களின் மனம் கவர்ந்த வீரனாக தெரிவு செய்யப்பட்டு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டுகௌரவிக்கப்பட்டார். (து-23)

# வீரர்களுக்கு காலணிகள்



வலி. வடக்கு, செப்.30
வடக்கு மாகாணத்தில் இருந்து முதற் தடவையாக தேசிய மட்ட எறிபந்து, கரப்பந்தாட்டம் ஆகியவற்றுக்குத் தெரிவாகியுள்ள வவுனியா மாதர பனிக்கர் மகிழங்குளம் ஏ. எஸ்.வி. பாடசாலை வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கான காலணிகளை வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத் தலைவர் ப. தர்மகுமாரன் வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சத்தியபாலனிடம் கையளித்துள்ளார்.

பின்தங்கிய பாடசாலைகளின் மாணவ, மாணவிகளின் விளையாட்டுத்திறனை ஊக்குவிக்கும் வகையில் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளின் ஒரு செயற்பாடாக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு அண்மையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்றது. இதற்கான நிதியை உடற்கல்வி டிப்ளோமா பழைய மாணவனும் சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வருபவருமான என். விஜயகுமார் வழங்கியிருந்தார். (து-86)

# 100 மீற்றர் ஓட்டத்தில் புதிய சாதனை

வலி. வடக்கு, செப் .30
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் புதிய சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ம.கமலினி என்பவர் 13.3 செக்கனில் ஓடி இந்தப் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

இவர் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் அங்கத்தவரும், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் மாணவியும் ஆவார். புதிய சாதனையைப் பதிவு செய்தமைக்காக இவரைப் பாராட்டி வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் ஓட்டப் போட்டிகளுக்குப் பயன்படுத்தப்படும் காலணிகள் வழங்கப்பட்டன. (து-86)



# உதைபந்தாட்ட லீக்குகளின் தலைவர்களுக்கு செயலமர்வு




வலி.வடக்கு, செப் .30
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இலங்கை உதைபந்தாட்ட லீக்குகளின் தலைவர்கள், செயலாளர்களுக்கான உதைபந்தாட்ட அபிவிருத்தி தொடர்பான ஒரு நாள் பயிற்சிச் செயலமர்வு இலங்கை உதைபந்தாட்ட இல்லத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற செயலமர்வில் உதைபந்தாட்ட லீக்குகளின் நிர்வாகம் வீரர்களின் பதிவுகள், கழக மாற்றங்கள் தொடர்பாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயற்திட்டப் பணிப்பாளர் அனுர டி சில்வாவும், போட்டிகளை நடத்துதல், ஏற்பாடுசெய்தல் தொடர்பாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் போட்டிகளுக்கான பணிப்பாளர் எ.அன்ரனிப்பிள்ளையும், மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி அளித்தல், பரீட்சைகள், போட்டிகளுக்கான மத்தியஸ்தர்கள் நியமனம் தொடர்பாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மத்தியஸ்தர்களுக்கான பணிப்பாளர் எ.எம்.யாப்பாவும், உதைபந்தாட்ட தொழில்நுட்பங்கள் தொடர்பாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தொழில்நுட்பப் பணிப்பாளர் டி.சந்திரஸ்ரீயும், சந்தைப்படுத்தலும் ஊடகங்களும் தொடர்பாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் ஊடகங்களுக்கான பணிப்பாளர் றுக்மல் பெரெராவும், அடிமட்டத்திலான உதைபந்தாட்ட வளர்ச்சி தொடர்பாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தொழிநுட்பப் பிரிவைச் சோந்த சமிந்தா ஸ்ரின்வெல்லும், பெண்களும் உதைபந்தாட்டமும் தொடர்பாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பெண்கள் உதைபந்தாட்டப் பணிப்பாளர் திருமதி ஒலிவ கமகேயும், நிதி முகாமைத்துவம் தொடர்பாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிதி முகாமையாளர் பிரபாத் குணவர்த்தனவும், பிராந்திய உதைபந் தாட்ட லீக்குகளின் அபிவிருத்தி தொடர்பாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிராந்திய உதைபந்தாட்ட அபிவிருத்திகளின் பொறுப்பாளர் என்.கே.அபயசிங்கவும் செயலமர்வுகளை நடத்தினார்கள்.

இந்தச் செயலமர்வில் இலங்கை உதைபந்தாட்ட லீக்குகளின் நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். (து-86)

# வென்றது பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி

யாழ்ப்பாணம், செப். 30
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவு ஒளி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்குப் பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவு ஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தமது அணிக்கான பழங்களைப் பெறுவதற்காகக் கடுமையாக மோதிக் கொண்டனர்.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. முதல் பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி 2 பழங்களையும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகம் 4 பழங்களையும் பெற்றிருந்தன.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தமது அணிக்கான மேலதிக பழங்களைப் பெற்றிடவேண்டும் என்று கடுமையாக விளையாடினர்.

பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்காக மேலும் 2 பழங்களைப் பெற்றனர்.

உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான பழங்கள் எதனையும் பெறவில்லை.

ஆட்டம் முடிவில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாகப் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் தாச்சியாக விளையாடிய சதீசன் தெரிவானார்.

(து-23-86-288)

# நான் இல்லாமல் எதுவும் இல்லை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வீரர் யூனுஸ் கான், தான் இல்லாமல் பாகிஸ்தான் அணியைக் கட்டி எழுப்பு மாறு கோபமான கருத்துகளை வெளியிட்டுள்ளார். ஐக்கிய அரபு ராச்சியத்தில் நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய அணியுடனான ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கு யூனுஸ் கான் தெரிவு செய்யப்படவில்லை. இதன் காரணமாக உலகக்கிண்ண தொடருக்கான அணியில் அவர் இடம் பெறும் வாய்ப்புகளும் இல்லாமல் போயுள்ள நிலையிலேயே குறித்த கருத்துகளை அவர் வெளியிட்டுள்ளார்.

என்னை இனி அணியில் சேர்க்க வேண்டாம். டெஸ்ட் அணியிலும் சேர்க்க வேண்டாம். நான் கிரிக்கெட்டை தியாகம் செய்கின்றேன் என கூறியுள்ள யூனுஸ் கான், இளையவர்கள்தான் ஒரு நாள் போட்டிகளின் எதிர்காலம் என்றால் பாகிஸ்தான் டெஸ்ட் எதிர்காலம் எங்கே என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். என்னை டெஸ்ட் அணியில் சேர்க்க வேண்டாம். இளையவர்களை வைத்தே டெஸ்ட் எதிர்காலத்தையும் பார்த்துக் கொள்ளுங்கள். அந்த இளையவர்கள் ஒரு நாள் அணியையும், டெஸ்ட் அணியையும் சரியாக அமைக்க முடியாமல் போனால் மீண்டும் என்னை அழைப்பார்கள என வும் மேலும் தெரிவித்துள்ளார்.

நான் இப்போது இறக்க மாட்டேன். இன்னும் 5 மாதங்களில் எனக்கு 70 வயதும் ஆகி விடாது. என்னை உரிய கௌரவத்துடன் விளையாட விட வில்லை. என்னை காயப்படுத்தி விட்டார்கள். 35, 36 வயதாகிவிட்டால் எதிர்காலம் இல்லை என்றால் என்னைப் போன்றவர்கள் எங்களை சுட்டுக்கொள்வதா? என்னைப் போன்றவர்கள் காலை 7 மணிக்கு எழும்பி எங்கள் ஈடுபாட்டைக் காட்ட முடியும் எங்களை சுட்டுக்கொள்ளாமல். எனக்கு எதிர்காலம் இல்லை என்று சொல்கின்றார்கள். 4.5 மாதங்கள் இருந்து பார்ப்பேன். அணியை சரியாக இறுக்கமாக அவர்கள் கட்டி எழுப்பினால் நான் மீள வர மாட்டேன். இப்போது ஓய்வு பெறமாட்டேன் என யூனுஸ் கான் தெரிவித்து உள்ளார். பாகிஸ்தான் அணிக்காக விளையாடியவீரர்களைபெருமைசேர்த்தவர்களை இவ்வாறு அவதூறாக நடத்துவது வழமையாகி வருகின்றது. ஜாவிட் மியாண்டாட், இன்சமாம் உல் ஹக், மொஹமட் யூசுப் என எல்லோரும் இவ்வாறே நடாத்தப்பட்டனர். பாகிஸ்தான் கொடியை தூக்கியவர்களை இவ்வாறு நடத்தாதீர்கள். பின்னர் இளையவர்கள் யாரும் அணிக்காக விளையாட வரமாட்டார்கள். அணியில் இடம் பிடித்த போது நான் தெரிவிக்குழுவினருடன் பேசுவதில்லை. தொலைபேசியிலோ, ஊடகங்களிலோ அவர்களுக்கு ஆதரவு கருத்துகளைக் கூறுவதில்லை. இவையா நான் செய்தத் தவறு? 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பந்தை சேதப்படுத்தியதாக இங்கிலாந்து ஊடகங்கள் கடுமையாக விமர்சித்த போது நான் பாகிஸ்தானுக்காக நின்றது தவறா? 2009 ஆம் ஆண்டு உலக 20/20 தொடரில் சம்பியன் ஆகிய போது நான் தலைவராக இருந்தது தவறா? அப்படியானால் இளையவர்களுக்கு நான் சொல்வது பாகிஸ்தான் அணிக்கு விளயாட வேண்டாம். அதை நினைத்தும் பார்க்க வேண்டாம் என கடுமையான, கோபமான தனது கருத்துகளை யூனுஸ் கான் வெளியிட்டுள்ளார்.

இலங்கை அணியுடனான தொடரில் ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் யூனுஸ் கான் இடம்பெற்ற போதும் உறவினர் ஒருவரின் இறப்பு காரணமாக அணியில் இருந்து விலகினார் யூனுஸ் கான். ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் இவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டுக்கு பின்னர் இவர் ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் சதம் எதனையும் பெற்றதில்லை. அத்துடன் 2013 ஆம் ஆண்டு விளையாடிய 8 போட்டிகளில் 32 ஓட்டங்களே கூடுதலான ஓட்டங்கள் ஆகும். (த)

## பயஸ் ஜோடி சம்பியன்

கோலாலம்பூரில் நடைபெற்ற மலேசிய ஓபன் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பயஸ், போலந்தின் மார்சின் மட்கோவ்ஸ்கி ஜோடி சம்பியனானது.



இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் பயஸ், போலந்தின் மார்சின் மட்கோவ்ஸ்கி ஜோடி, பிரிட்டனின் ஜமி முர்ரே, ஆஸ்திரேலியாவின் ஜான் பீர்ஸ் ஜோடியை எதிர் கொண்டு விளையாடியது.

போட்டியின் முதல் செற்றை 3- 6 என இழந்த பயஸ் ஜோடி, பின்னர் எழுச்சி கண்டு டை-பிரேக்கர்' வரை சென்ற இரண்டாவது செற்றை 7- 6 எனக் கைப்பற்றியது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் சுப்பர் டை-பிரேக்கரில்' 10- 5 என பயஸ் ஜோடி வென்றது.

முடிவில் பயஸ்-மார்சின் ஜோடி 3- 6, 7- 6, 10- 5 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. (ரி)

## மெஸ்ஸியின் புதிய மைல்கல்

உதைபந்தாட்ட வாழ்க்கையில் 400 கோல்கள் எனும் மைல்கல்லை கடந்துள்ளார் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி.



ஸ்பெயினில் நடைபெற்றுவரும் லாலிகா உதைபந்துக் கழகப் போட்டிகளில், பார்சிலோனா கழகத்துக்காக விளையாடிவரும் மெஸ்ஸி, கிரனடாவுக்கு எதிரான ஆட்டத்தில் இரு கோல் அடித்தார். இதன் மூலம் பார்சிலோனா 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கண்டது. குறித்த இரண்டு கோல்க்ளையும் சேர்த்து மெஸ்ஸியின் ஒட்டுமொத்த கோல் எண்ணிக்கை 400ஐக் கடந்தது.

கழக அணிகள் மற்றும் ஆர்ஜென்ரினா அணிக்காக இதுவரை 524 ஆட்டங்களில் விளையாடியுள்ள அவர் 401 கோல்கள் அடித்துள்ளார்.

இந்தச் சாதனை பற்றி மெஸ்ஸி கூறுகையில், இது போன்ற மைல் கல்லை தொடுவேன் என்று ஒரு போதும் நினைத்ததில்லை என்று கூறினார். (ரி)



## அடுத்தது ஹபீஸா?

பாகிஸ்தான் அணியின் முன்னணிச் சுழற்பந்து வீச்சாளரான சயீட் அஜ்மலுக்கு பந்துவீச ஐ.சி.சி. தடை விதித்துள்ள நிலையில், அந்த அணியின் மொகமட் ஹபீஸின் பந்து வீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருப்பதாக நடுவர்கள் முறைப்பாடு அளித்துள்ளனர்.

சம்பியன் லீக் ரி- 20 தொடரில் லாகூர் லயன்ஸ் அணிக்காக விளையாடி வரும் சுழற்பந்து வீச்சாளர் மொகமட் ஹபீஸ் மற்றும் டொல்பின்ஸ் அணிக்காக விளையாடி வரும் சுழற்பந்து வீச்சாளர் பிரினெலன் சுப்ராயன் ஆகியோரின் பந்துவீச்சு விதிமுறைக்கு புறம்பாக இருப்பதாக நடுவர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இதைத் தொடர்ந்து இவர்கள் இருவரையும் சோதனைக்கு வரும்படி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பந்து வீச்சுக் குழு அழைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தற்போதைக்கு அவர்கள் எந்தவித பரிசோதனையும் இன்றி தங்கள் அணிக்காக தொடர்ந்து விளையாட முடியும். ஆனால் மீண்டும் இது போன்ற புகார்கள் வந்தால், உடனடியாக இந்தத் தொடரில் பந்து வீச தடை விதிக்கப்படும் என்று தெரிகிறது. (ரி)



## அரையிறுதியை தவறவிட்டது கேப்கொப்ராஸ்

கேப் கொப்ராஸ் அணியின் பின்வரிசை வீரர்கள் பிரகாசிக்கத் தவற, 7 இலக்குகளால் வெற்றிபெற்றது பஞ்சாப் அணி. இதன் மூலம் அரையிறுதிக்கு தகுதி பெறும் வாய்ப்பை கொப்ராஸ் அணி இழந்தது.

சம்பியன் லீக் தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற 17ஆவது ஆட்டத்தில் கேப் கொப்ராஸ் அணியும், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனடிப்படையில் களமிறங்கிய கொப்ராஸ் அணி ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடி, ஓட்டங்களைச் சேர்த்தது. எனினும் பின் வரிசை வீரர்கள் பிரகாசிக்க தவறியமையால் ஓட்ட எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டது. இதன்படி அந்த அணி 18.3 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. அந்த அணிக்காக தொடக்க வீரர்கள் லெவி 37 பந்துகளில் 42 ஓட்டங்களையும், அம்லா 22 பந்துகளில் 40 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் பஞ்சாப்பின் அனுரீத் சிங், அக்ஷர் பட்டேல் தலா மூன்று இலக்குகளை வீழ்த்தினர்.

136 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்குடன் பஞ்சாப் அணி களமிறங்கியது. வழக்கம் போல தொடக்க ஆட்டக்காரர்களான சேவாக்கும், வோக்ராவும் அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்தனர். இருவரும் தலா 23 ஓட்டங்களுடன் வெளியேற பின்னர் வந்த மக்ஸ்வெல்லும் 23 ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தார். ஐந்தாவது இலக்குக்காக ஜோடி சேர்ந்த மில்லரும், சகாவும் இறுதி வரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றனர். 18.1 ஓவர்களில் 3 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றியிலக்கை எட்டிய பஞ்சாப் அணி 7 இலக்குகளால் கொப்ராஸை வீழ்த்தியது. சாகா 42 ஓட்டங்களுடனும், மில்லர் 16 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். ஆட்டநாயகனாக பஞ்சாப் அணியின் அக்ஷர் பட்டேல் தெரிவானார். (ரி)

## இன்றைய CLT-20 ஆட்டம்

LAHORE LIONS Vs PERTH SCORCHERS மாலை 4 மணி


லாகூர் லயன்ஸ்
Vs
ஸ்கொரேச்சர்ஸ்

இரவு 8 மணி

Vs KNIGHTS

ரெடின்றஸ்
Vs
நொதேர்ன் டீ

# எச்சரிக்கப்பட்ட பின்னர் மக்ஸ்வெல் நகைச்சுவை




மொஹாலியில் நேற்று முன் தினம் நடைபெற்ற சாம்பியன்ஸ் லீக் ரி20 கிரிக்கெட் போட்டியில் நடத்தையை மீறியதற்காக கிங்ஸ் லெவன் பஞ்சாப் வீரர் கிளென் மக்ஸ்வெல் எச்சரிக்கப்பட்டார்.

கோப்ராஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சைபிராண்ட் எங்கெல்பிரெக்ட் என்பவரிடம் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கிளென் மக்ஸ்வெல். இதனால் வெறுப்படைந்த அவர் பவிலியன் திரும்பிச் செல்லும் போது பவுண்டரி அருகே வைக்கப்பட்டிருந்த குப்பை போடும் தொட்டியை மட்டையால் தாக்கியதாக புகார் எழுந்தது.

இது ஐ.சி.சி நடத்தை விதி மீறலை சேர்ந்தது. மக்ஸ்வெல் தன் தவறை ஒப்புக் கொண் டார்.

அதாவது கிரிக்கெட் உபகரணங்கள் அல்லது உடைகள், மைதானம், மைதானத்தில் உள்ள பொருள்கள் ஆகியவற்றைச் சேதப்படுத்துதல் விதிமீறல் ஆகும். வெறும் எச்சரிக்கையோடு தப்பித்தார் கிளென் மக்ஸ்வெல்.

இந்த சம்பவத்துக்கு பிறகு அவர் தனது டுவிட்டரில் நகைச்சுவையாக குப்பைத் தொட்டியை தட்டிவிட்டதற்காக ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்கிறேன். அதன் பிறகு குப்பைத் தொட்டியுடன் நீண்ட நேரம் பேசினேன். இப்போது எங்களிடையே உறவு நல்ல முறையில் உள்ளது என்று பதிவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கிங்ஸ் லெவன் பஞ்சாப், கோப்ராஸ் அணியை 7 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. (த)

# உரும்பிராய் சென்.மைக்கல் நடத்தும் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் செப் 30

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல்வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றன.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்செழு வளர்மதி விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி மோதவுள் ளது.

மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23)

# வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், செப் 30

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக்க ழகங்களுக்கு இடையில் நடத்தும் 11பேர் பங்கு பற்றும் தலைவர் கிண்ணத்துக்கான லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை உதயதாரகை விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டங் களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணிக்கும் திருநகர் விளையாட்டுக் கழகஅணிக்கும் இடையிலான ஆட்டத்தில் திருநகர் விளையாட் டுக்கழக அணி 1:0என்ற கோல் கணக்கில்; வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத் தில் உழ வர் ஒன்றிய விளையாட்டுக் கழக் அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஜெயந்திநகர் விளையாட்டுக்கழக அணி 1:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# யாழ்.மத்தி–பாதுகம விஜயரட்ண மோதல்

யாழ்ப்பாணம் செப் 30

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான பிரிவு 3ற்கான சுப்பர் குழு நிலை இன்னிங்ஸ் போட்டித் தொடர் ஆட்டம் ஒன்று கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது

இதில் பாதுகம ஸ்ரீவிஜய ரெட்ண மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாதுகம ஸ்ரீவிஜய ரெட்ண மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதற்கு அமைய முதலாவது இன் னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் 58.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 158 ஓட்டங்க ளைப்பெற்றது. இதில் கார்த் தீபன் 40 ஓட்டங்களையும், கோமோதரன் 27 ஓட்டங்க ளையும், மதுஷன் 27 ஓட்டங்களையும், கௌதமன் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பாதுகம ஸ்ரீவிஜய ரெட்ண மத்திய கல்லூரி அணி சார்பில் கனிஸ்க 14 பந்துப்பரி மாற்றங்கள் பந்து வீசி 46 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், லக்சன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், பிரசாந் 16 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 57 ஓட்டங்களுக்கு3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய பாதுகம ஸ்ரீவிஜய ரெட்ண மத்திய கல்லூரி அணி47 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சந்துரு றுவான் 42 ஓட்டங்களையும், மினிஸ் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் மது[illegible] 19 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட் டங்களுக்கு 5 இலக்குகளையும் கௌத மன் 14 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 43 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்

தனது 2 ஆவது இன்னிங் ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல் லூரி அணி 36 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருபாகரன் 46 ஓட்டங்களையும், நிரேஷன் 27 ஓட்டங்களையும், விேனாஷன் 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர் பந்து வீச்சில் பாதுகம ஸ்ரீ விஜய ரெட்ண மத்திய கல்லூரி அணி சார்பில் [illegible] சமபத் 19 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், லக்சன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (த-23)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் தவராஜசிங்கம்



பொன்னாலையைச் சேர்ந்த ஆறுமுகம் தவராஜசிங்கம் நேற்று (29.09.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் தம்பதிகளின் அன்பு மகனும் சசிகலா, சதீஸ் குமார் சத்தியகலா, நித்தியகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் பாபு, பாலகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொன்னாலை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கழிபுரம்,
பொன்னாலை. (52724)
T.P 0774598220

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சதாசிவம் கயிலாயபிள்ளை

(ஓய்வு பெற்ற சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்)



பண்ணாகத்தைச் சேர்ந்த சதாசிவம் கயிலாயபிள்ளை நேற்று (29.09.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் சதானந்தன் (தாதி உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை) [illegible] சிவமலர் ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்வரஜனி, சூரியரட்னா (சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தெய்வநாயகி, மாரிமுத்து(மலேசியா), சுந்தரமூர்த்தி காலஞ்சென்ற மாணிக்கவாசகர் ஆகியோரின் சகோதரரும் சங்கீதா, அபினயா, திவ்வியா, கலியுகன், பிரணவன் மதிவண்ணன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2014) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம், (52725)

தகவல்:
க.சதானந்தன்(மகன்)

## பணிநிலை வெற்றிடங்கள்

01. பெண் -சிறுமிகள் மேற்பார்வையாளர்
02. பெண் -முதியோர்கள் பராமரிப்பாளர்
03. பேருந்து சாரதி
04. பெண் சமையலாளர்

குறிப்பு:

1. சாரதி 50 வயதுக்கு மேற்பட்டவராகவும், மற்றையோர் 35 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. சாரதி பாரஊர்தி, முச்சக்கர வண்டி, அனுமதிப்பத்திரம் உள்ளவராகவும், வெளிமாவட்டங்களில் வாகனம் செலுத்திய அனுபவம் அவசியம்.
3. இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றக் கூடியவர் விரும்பத்தக்கது.
4. கல்வித்தகைமைகள், அனுபவங்களுக்கான விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
5. ஊதியம் நேர்முகத்தேர்வின்போது கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும்.
6. விண்ணப்ப முடிவுத் திகதி : 15.10.2014

தலைவர்,
ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம்
வதிரி, கரவெட்டி.
021 321 5156, 021 226 3136 (C/16702) (10)

## தொழில்நுட்ப உதவியாளர் தேவை

★ வீடியோ எடிற்றர் ★ போட்டோ டிசைனர்
★ வீடியோ-போட்டோ படப்பிடிப்பாளர்
★ HD வீடியோ எடிற்றர்

ஆகிய பதவிநிலைகளுக்கு தொழில்நுட்ப உதவியாளர் தேவை. 2014.10.02 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.00 - 12.00 இற்கு நேரில் சமுகம் தரவும்.

★ கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

வீடியோ கலாமினி
அச்சுவேலி. (C/16000) (10)

இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
நளினின் அதிரடிச்சலுகை

Special Offer for scholarship Students



→ Laptop Computers
→ Desktop Computers
→ Printers
→ Pen Drives



தவணைக்கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம். * conditions Apply

NALIN Information Technologies Pvt Ltd.
Nalin Information Technologies (PVT) Ltd.
No 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna
Phone- 0212221121/1166 0777667975

Nalin City Showroom
1166 KKS Rd, Chunnakam
Phone-0212242222

# இடித்து அகற்றப்பட்டன சட்டவிரோத கட்டடங்கள்



அம்பாறை, செப்.30

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேச சபைக்குட்பட்ட கருங்கொடித்தீவு பள்ளியாக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்களை நீதிமன்ற உத்தரவுக்கமைய அகற்றும் நடவடிக்கை நேற்று ஆலையடிவேம்பு பிரதேச சபையினரால் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி பிரதேசத்தில் 8 கடைகள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறி கடைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக கடந்த வருடம் ஆலையடிவேம்பு பிரதேச சபையினால் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துகொண்ட நீதிமன்றம் சட்டவிரோத கட்டடங்களை அகற்றுமாறு உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய அதிகாரிகள் கட்டடங்களை அகற்றச்சென்றபோது கட்டடங்களை அகற்றவிடாது கடை உரிமையாளர்கள் தடுத்தனர்.

இதனால் இந்த நடவடிக்கை இடைநடுவில் நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சட்டவிரோத கட்டட உரிமையாளர்கள், அக்கரைப்பற்று நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக கல்முனை மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்தநிலையில் கடந்த மாதம் கல்முனை மேல் நீதிமன்றம் அக்கரைப்பற்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சரியானது என்றும்- அதனை நடைமுறைப்படுத்துமாறும் தீர்ப்பளித்தமையைத் தொடர்ந்து நேற்று பலத்த பாதுகாப்புடன் சட்டவிரோத கட்டடங்கள் அகற்றப்பட்டன. (வ)

# மட்டு. அபிவிருத்தித் திட்டங்களை ஒக்ரோபருக்குள் நிறைவுசெய்க

## மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் வலியுறுத்து

மட்டக்களப்பு, செப்.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தினுள் நிறைவு செய்து, அவற்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதி அடுத்த வருடம் ஜனவரி மாதத்துக்கு முன்னர் செலவு செய்யப்பட வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

'தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்யும்போது, வெறுமனே நிதியொதுக்கீடு செய்வது மாத்திரமல்லாமல், அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் நிதித் தொகையில் 50 சதவீதத்தை ஆரம்பத்திலேயே விடுவிக்கிறது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில், இதுவரை 30 சதவீதமான நிதிக்குரிய வேலைத் திட்டங்களே முடிவடைந்துள்ளன. இதைப் பார்க்கின்றபோது மிகவும் குறைந்தளவு நிதியே இதற்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

சில திணைக்களங்கள் இன்னமும் திட்டங்களுக்குரிய மதிப்பீட்டு அறிக்கைகளைக் கூட அனுப்பி வைக்கவில்லை.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். ஒக்ரோபர் மாதத்தினுள் இந்த அபிவிருத்தித்திட்டங்கள் அனைத்தும் நிறைவுசெய்யப்பட்டு, நவம்பர் மாதத்தினுள் அதற்குரிய அனைத்து நிதிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

இந்த நிலையில், துரிதமாக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். . குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் திட்டங்களை நிறைவுசெய்து அதற்கான பணத்தை செலவு செய்ய வேண்டும். இதற்காக பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள் முழுக்க வனத்தையும் செலுத்தி திட்டங்களை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக அனைத்து அதிகாரிகளும் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்' என்றார். (வ)

# சிங்களப் பொலிஸாருக்கு தமிழ்மொழி டிப்ளோமா

மட்டக்களப்பு, செப்.30

மட்டக்களப்பு பொலிஸ் நிலையங்களில் கடமை புரியும் சிங்களமொழி மூல பொலிஸாருக்கான தமிழ்மொழி டிப்ளோமா பாடநெறி கல்லடி பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

5 மாதங்களைக் கொண்ட இந்தப் பாடநெறியில் 156 சிங்கள மொழி மூலமான பொலிஸார் இணைந்து கற்று வருகின்றனர்.



இதற்கான நிகழ்வில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரெட்ண, குண்டசாலை பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஆரியரெட்ண, கல்லடி பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் பொறுப்பதிகாரி எஸ். அருளானந்தம் மற்றும் கல்லடி தமிழ்மொழி பயிற்சிப் பாடசாலையின் பொறுப்பதிகாரி கே.பேரின்பராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தப் புதிய பிரிவு 9 ஆவது தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் மூத்தவிநாயகர் வீதியில் ஒரு பரப்பு 4.50குழி விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 836 7479 (52711) (7.6.3)

## வேலையாள்கள் தேவை

நெல்லியடியிலுள்ள பிரபல உணவகம் ஒன்றுக்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கான வேலையாள்கள் தேவை.

1) றொட்டி மேக்கர்
2) சிற்றுண்டி தயாரிப்பாளர்
3) உணவு பரிமாறுபவர்

நியூ சஸ்ஸின் உணவகம்
நெல்லியடி. (49791) (7.6.3)

தொடர்பு: 021 791 7455, 021 791 7454

## பதவி வெற்றிடம்

அச்சுவேலியில் அமைந்துள்ள கணினிக் கல்லூரிக்கு அலுவலக உதவியாளர் தேவை.

நிபந்தனைகள்:

- தகைமை A/L (அரசாங்க கணினி அறிவு)
- பெண்கள் மட்டும்.
- வயதெல்லை 20-25 வரை.
- எமது நிறுவனத்திலிருந்து 5KM பகுதிக்கு உட்பட்டதாக இருத்தல்.

தொடர்பு:077 239 5823 (52712) (4.6.3)

# சுயதொழில் உதவித் தொகை

மட்டக்களப்பு, செப்.30

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள 11 குடும்பங்களுக்கு சுய தொழில்களுக்கான உதவித்தொகை நேற்று வழங்கப்பட்டது.

அந்தக் குடும்பங்களுக்காக ஒரு லட்சத்து 95 ஆயிரம் ரூபா நிதியை கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன், கிழக்கு மாகாண சமூகசேவைதிணைக்களத்தினூடாக ஒதுக்கீடு செய்திருந்தார்.

நாவிதன்வெளி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.மதிதயன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேசசெயலர் எஸ்.கரன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ரி.கமலநாதன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (வ)

## மரண அறிவித்தல்

### செல்லையா குமரையா
(புகையிரத நிலைய ஊழியர்)



பொற்கலந்தம்பையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குமரையா நேற்று (29.09.2014) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகேந்திரராசா, வசந்தகுமாரி, ஜெயகுமாரி, செல்வேந்திராசா, சந்திரகுமாரி, சூரியகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தினி, சிவபாதசுந்தரம், சிறிகந்தராசா, சுகுணா, ரவிக்குமார், மன்மதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்(04.10.2014) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிறிகந்தராசா
077 122 6272/021 790 4273
0014167240510

அளவெட்டி நேர்த,
அருணாசலம் பாடசாலை வீதி,அளவெட்டி. (52751)(5.3)

## யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை
## கந்தரோடை, சுன்னாகம்.
## தரம் 5 புலமைப் பரிசில் பெறுபேறுகள் - 2014



### நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 01)கி.தர்மிகா - 157 | 11)டி.மதுமிதா -130 | 21)செ.சுதர்ஷன் -118 |
| 02)சி.கபினயா -156 | 12)த.தனுசன் -130 | 22)பி.மதுடக்ஷன் -118 |
| 03)து.டினேஸ் -153 | 13)ப.திருசா -129 | 23)ம.சுருத்திக்கா -114 |
| 04)த.பிரியந்தா -153 | 14)வி.கேதுஷா -129 | 24)கு.கெத்சியா -113 |
| 05)சு.நிஜா -153 | 15)சு.சஞ்சயன் -128 | 25)சி.தர்சிகா -113 |
| 06)சி.தர்சிகன் -140 | 16)ஜீ.கஜீன் -125 | 26)வி.பிரகாஷ் -111 |
| 07)ஜெ.சாருஜன்-140 | 17)த.லாணுஜா -123 | 27)க.ஜோன்டேவிட்-107 |
| 08)ஜ.மதுசிகா -136 | 18)உ.யதுஷா -123 | 28)கு.அபிஷன் -107 |
| 09)மோ.மதுரன்-134 | 19)ர.அபர்ணன்-120 | 29)கே.நிதுஷன் -102 |
| 10)உ.கபிஷா -133 | 20)ர.கஜிதா -119 | 30)கு.நிதர்ஷன் -101 |

மேற்படி உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் அதற்கு உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes Congratulation

ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலைச் சமூகம்

(52713)(7.3)

## யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

O/L சித்தியடையவில்லையா?
ஆங்கிலம் சித்தியடையவில்லையா?
கவலையை விடுங்கள்!

100% விசா உத்தரவாதம்

Singapore, Malaysia, Mauritius இல் தொழிலுடன் கூடிய கல்வி வாய்ப்புக்கள்!

- எவ்விதமான முகவர் கட்டணமும் இல்லை
- பாடநெறியின் முடிவில் PR பெற்றுக் கொள்வதற்கான வசதிகள்
- பின்னர் உங்கள் கனவுலக நாட்டு விசாவை பெற்றுக்கொள்ளும் வழிகள்

FREE
Air Ticket
Accommodation
Sim card
Transport From Airport to Accommodation

உங்கள் கனவை எம் மூலம் நனவாக்குங்கள்!
உங்கள் கலாச்சார சூழலுடன்

Coss Jaffna (Pvt) Ltd
381B, Stanley Road, Jaffna.
Tel: 021 221 7552, 011 564 4440,
Mobile:076 7561 346, Fax:011 221 7552
E-mail: cossjaffna@gmail.com

(C/16670)(10.3)

## பண்பாட்டு பெருவிழா இன்று

யாழ்ப்பாணம், செப். 30
ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா இன்று செவ்வாய்க் கிழமை பி.ப 3 மணிக்கு, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச செயலாளர் இ.குருபரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

## பாடசாலை மேம்பாட்டு திட்ட மீளாய்வு

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி, பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. (த-108)

## விமர்சித்தவர்களை மறந்து விட்டார்கள்

### சாடுகின்றார் மைத்திரிபால



கொழும்பு, செப்.30
ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி காலத்தில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட விமர்சனங்களை அனைவரும் மறந்துவிட்டார்கள் என்று சாடியுள்ளார் அமைச்சர் மைத்திரி பால சிறிசேன.
பார்டி பிரேமலால் நிதியத்தின் ஊடாக அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட சிரேஷ்ட பிரசைகளுக் கான விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,
"அவ்வாறான குற்றச்சாட்டுகள் மற்றும் விமர்சனங்களை தற்போதுள்ள ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பிமனர்களும் கூட மறந்து விட்டு செயற்படுகின்றனர்.
எதிர்க்கட்சியினர் தற்போது அரசால் மோசடி வாக்களிப்பு மற்றும் தேர்தல் வன்முறைகள் குறித்து விமர்சிக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னடைவு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னேற்றம் என்பவற்றுக்கு யார் காரணமாக இருந்தார்கள் என்று அனைவரும் தெளிவு பெற வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/ஜோண்பொஸ்கோ பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 174 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த கேதீஸ்வரன் கோசலா தம்பதியரின் ஏக புதல்வன்

**ஜனுரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேன்மேலும் சித்திகளைப் பெற்று கல்வியில் சிறந்துவிளங்க மனமார வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
குமாரசாமி குடும்பம்,
அம்மப்பா, அம்மம்மா,
திருக்குமரன் (மாமா)
கைதடி, நாவற்குழி. (52715)(12.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யாழ்/சித்தங்கேணி ஸ்ரீகணேச வித்தியாசாலையில் கல்வி பயிலும் செல்வன் **சூரியகாந்தன் மோகனகானன்**
2014 நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகள் பெற்று பாடசாலைக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.
இவர் இன்று போல் என்றும் பல சிறப்பான சித்திகளைப் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ சித்தங்கேணி ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையார் பாத விந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றோம்
மேலும் இவரது கல்வி செயற்பாட்டிற்கு பெரிதும் உதவிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.



வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா,
அண்ணா

**துயர் பகிர்கின்றோம்**

எமது கல்லூரி ஆசிரியை திருமதி குமரன் எழிலரசியின் பாசமிகு சகோதரனின்

**கனகராஜா தர்சன்** (ஆசிரியர் மத்துகம கலைமகள் வித்தியாலயம்)



அகாலமரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(52722)(08)
ஆசிரியர் கழகம்
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

**BUTTERFLY INTERNATIONAL SCHOOL**
**BLOOMING BUDS DAY CARE CENTRE**

ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை
T. C. LANE, CHANKANAI.
KEERIMALAI ROAD, PANDATERUPPU.
Education to Salvation
T.P.: 077 2436737 - 077 8907229

BUTTERFLY INTERNATIONAL SCHOOL, BLOOMING BUDS DAY CARE CENTRE

| வயது - 2 + | வயது - 3 + | வயது - 4 + |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |



அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை இன்றே முந்துங்கள்.

**அறைகள் வாடகைக்கு**

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு. (ஆண்கள் மட்டும்)
(52719)(10) தொடர்பு: 071 825 3255

**காணி விற்பனைக்கு**

பொஸ்கோ பாடசாலை, இந்தியத் துணைத் தூரகம் என்பவற்றுக்கு அருகில் விற்பனைக்கு உண்டு. காணித்துண்டு பரப்பு 22 இலட்சம். 1¼ பரப்பு.
(52713)(08) தொடர்பு: 077 0538405

**தவறிவிட்டது**

பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த இரட்ணசிங்கம் சுஜன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (820054326V) சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் வரி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன கடந்த 27.09.2014 அன்று இணுவிலுக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 542 4536 (52720)(10)

**மரண அறிவித்தல்**

**இராசையா மயிலுப்பிள்ளை**



நுணாவில் சந்தியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியை வசிப் பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற நன்நடத்தை காரியாலய அலுவலர் இராசையா மயிலுப்பிள்ளை 27.09. 2014 சனிக்கிழமை காலை இறைவ னடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான இராசையா-இராசம்மா தம் பதியரின் பாசமிகு சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பா-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கம் மாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) நேச மிகு கணவரும், கண்ணகைப்பிள்ளை (சுவிஸ்), தம்பையா, கருணாவதி (சுவிஸ்), காலஞ்சென்ற பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவேந்திரநாதன் (கனடா), காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, செல்லையா, செல்லம்மா, இராஜரட் ணம் ஆகியோரின் மைத்துனரும், றஞ்ஜினிதேவி (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்), சிவாஜினி (கனடா), மனோகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணானந்தலிங்கம் (உதவி பிரதம செயலாளர், வடமாகாணம் பொது நிர்வாகம்), கணேசலிங்கம் (கனடா), நளினி (சுவிஸ்), செல்வநந்தினி (நியூஸிலாந்து) ஆகியோரின் பாசமிகு மாமனும், பிரஷாந் (பொறியியல் பீடம்,பேராதனைப் பல்கலைக்கழகம்), டிலக்ஷனா (பல்கலைக்கழகம், புதுமுக மாணவி), தர்மிகன் (க.பொ.த. (உ/த) கணிதப்பிரிவு, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), விதுஷன் (கனடா), மதுஷன்(கனடா), லக்ஷன்(கனடா), லிக்ஷிகா (சுவிஸ்), விதுர்ணா (நியூஸிலாந்து), புருஷோத் (நியூஸிலாந்து) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2014) புதன்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14/9, பழைய பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.
0777 464901, 077 616 4038,
(47292) (10)
தகவல்:
குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

**கனகர் சின்னராசா**



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் 3/1, ஸ்ரான்லி கல்லூரி வீதி, கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் சின்னராசா (28.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர்-அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி- தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசகிளியின் அன்புக் கணவரும், கேமலதாவின் (சுவிஸ்) அன்புத் தந்தையும், சந்திரதாசனின் (சுவிஸ்) பாசமிகு மாமனும், சப்ரீனா, சோபியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேரனும், தியாகராசா, நடராசா, தவமணிதேவி, துரைராசா, சாரதாமணி தேவி, செல்வராசா, மனோன்மணிதேவி, கனகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நற்குணம், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் தவமணி தேவி, சந்திரகலா, காலஞ்சென்ற தங்கராசா, ஞானசோதி, ஜோர்ஜ், மொறின், தவராசா, யோகராணி ஆகியோரின் மைத்துனரும், சரஸ்வதி, ஞானேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2014) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/1, ஸ்ரான்லி கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு. யாழ்ப்பாணம்.
(52721) (10)
தகவல்:
குடும்பத்தினர்.

# தொடர்ச்சிகள்

## உள்நாட்டு

யாது. ஆனால் வெளிநாட்டு உதவிகளுடன் பெரிய செயற்திட்டங்களில் அவர்கள் இறங்குவார்கள் என்ற எதிர்பார்ப்பு எம்முள் இருக்கத்தான் செய்கின்றது. அது எப்படி இருப்பினும் எம்மைப் பொறுத்தவரை மாகாணத்தில் மக்கள் சார்பான நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட எம் மக்கள் வளமாக வாழ வேண்டும். அவர்களுக்கு வாழ்வாதாரங்கள் அளிக்கப்பட வேண்டும். வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும். கல்வி வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். இவற்றைத் தனியார்களோ, தனியார் நிறுவனங்களோ, புலம்பெயர்ந்தவர்களோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ மக்களுக்கு வழங்க முன்வந்தால் நாங்கள் அதற்கு அனுசரணை வழங்குவோம்.

அரசு வெளிநாட்டுப் பணத்துடன் கண்காட்சிக் காரியங்களில்தான் கரிசனை காட்டிச் செய்து வருகின்றது. மக்களின் நாளாந்த தேவைகள், முன்னுரிமைகள், மனோநிலைபற்றியெல்லாம் அவ்வளவு சிரத்தை கொள்வதாகத் தெரியவில்லை.

அரசுக்கும் அதன் அலுவலர்களுக்கும் எமக்குமிடையே அன்னியோன்னியம் அற்ற நிலை காணப்படுவதற்கு அரசியலே காரணம். அரசியலை மறந்து எமது மக்களின் நல்வாழ்வுக்காக உழைக்கும் ஒரு பாங்கு எம் யாவர் மத்தியிலும் உருவாகவேண்டும்.

தனியார் துறையினரும், தனியார்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் மனித நேய நடவடிக்கைகளில் ஈடுபட ஆர்வம் காட்டினாலும் அரசு அரசியல் எண்ண விருத்திகளிலேயே அதிகாரத்தைப் பாவித்து வருவது மனவருத்தத்தைத் தருகின்றது.

பெரும் போரின் வடுக்களைக் கொண்ட எம்மக்களின் நல்வாழ்வை அரசியல் என்ற சாக்கடையினுள் அமிழ்த்தாதீர் என்று அரசிடம் கேட்டுக் கொள்கின்றேன்-என்றார். (த-4)

## ஜனாதிபதி

பகுதிகளிலும் பதிவுகள் இடம்பெறுகின்றன என்று கூறப்படுகிறது.

முன்னறிவிப்பற்ற இந்தச் செயற்பாடுகள் காரணமாக மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

எனினும் ஜனாதிபதியின் வருகையை ஒட்டி பாதுகாப்பு காரணங்களுக்காகவே தாம் பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-4)

## கூட்டமைப்பு

தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் திடீரென சுகவீனமுற்ற காரணத்தால் இச்சந்திப்பு இடைநிறுத்தப்பட்டது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்தது.

இச்சந்திப்பை இந்தவார இறுதியில் கொழும்பில் நடத்துவதற்கு இரு கட்சிகளும் தீர்மானித்துள்ளன. (த -சி)

## இலங்கை மனித உரிமை

லும் ஆய்வு நடத்தப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மனித உரிமைக் குழுவில் இலங்கை உள்ளிட்ட 168 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த நாடுகள் மனித உரிமை நிலைமைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கவேண் டியது அவசியமாகின்றது.

இந்த அறிக்கையை 18 சுயாதீன நிபுணர்கள் ஆய்வு செய்வார்கள். தன்னார்வ தொண்டு நிறு வனங்கள் தேசிய மனித உரிமை ஆணைக்குழுக்கள் போன்றவற்றின் கருத்துகளையும் குழு கவனத்திற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கட்டுப்பாடிழந்த

மூளாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் போட்டி ஒன்றுக்காக பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலைக்கு சென்றுள்ளனர். அங்கு போட்டி முடிவடைந்த பின்னர் குறித்த மாணவர்கள் ஓட்டோ ஒன்றில் திரும்பி வந்துள்ளனர். இதன்போது அவர்கள் பயணித்த ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியது. இதனால் ஓட்டோவில் பயணித்த தரம் 4 மாணவனான எஸ். கிருசாந்கால் முறிந்து படுகாயமடைந்தார். மேலும் இரு மாணவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். குறித்த ஓட்டோவில் எட்டுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஏற்றிச்செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

விபத்துக்குள்ளான ஓட்டோவின் சாரதியை கைது செய்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் கூறினர். (த)

## உள்ளூர்

திட்டம் இந்த ஆண் டின் ஆரம்பப்பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கமைவாக யாழ். மாவட்டத்தில் அல்லாரை, வதிரி, மாகியப்பிட்டி, நீர்வேலி, சர சாலை ஆகிய பிரதேசங்களி லும், கிளிநொச்சி மாவட்டத்தில் கிராஞ்சிப் பிரதேசத்திலும் இவ்வாறான உற்பத்தி கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அல்லாரையில் தும்பு உற் பத்திப் பொருள்களும், வதிரியில் காலணி உற்பத்திப் பொருள்களும், மாகியப்பிட்டியில் பனை ஓலையில் சுளகு உற்பத்தியும், நீர்வேலியில் மென்பொருள் உற்பத்திப் பொருள்கள் மற்றும் வாழைநார் உற்பத்திப் பொருள்களும், சரசாலையில் பனை சார் கைப்பணி உற்பத்திப் பொருள்களும், கிராஞ்சியில் பனை சார் அலங்காரப் பொருள்களும் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கென குறித்த கிராமங்களில் இருந்து உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் மற்றும் உற்பத்திக்குத் தேவையான உபகரணங்கள் என்பன அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட இவர்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளுக்கும், வேறு மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்து சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

குறிப்பாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்த வேலைத்திட்டம் நடைபெற்று வருகிறது. தெரிவு செய்யப்பட்ட உற்பத்திக் கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் 30 இற்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு தற்போது அவர்கள் தொழில் வாய்ப்பைப் பெற் றுள்ளனர்.

இதனடிப்படையில் வடக்கில் மேலும் கைத்தொழில் உற்பத்திக் கிராமங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்றார். (த-14)

## கருத்து

டியுள்ளனர். குறிப்பாக் சம்பூர் அனல் மின்நிலையம் குறித்து ஆராய்ந்துள்ளனர். இலங்கை அரசுடனான கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தையே சிறந்த வழி எனத் தன்னைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தாம் தெரிவித்தார் என இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் கூறினார். மீனவர்கள் விவகாரம் தொடர்பாகவும் நீண்ட பேச்சுக்களை இரு தலைவர்களும் மேற்கொண்டனர். இலங்கைச் சிறைகளில் 76 மீனவர்கள் உள்ளமையை இந்திய பிரதமர் சுட்டிக்காட்டினர். இது மனிதாபிமான விவகாரம் எனவும், இதனை உணர்வுபூர்வமாக அணுக வேண்டும் எனவும் மோடி குறிப்பிட்டுள்ளார். இதனை ஏற்றுக்கொண்ட இலங்கை ஜனாதிபதி மீனவர் விவகாரத் துக்கு நிரந்தர தீர்வைக் காண வேண்டும் எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட சகல கட்சிகளுடனும் பேச்சுக்களை மேற்கொள்ளத் தயார் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்காகவே நாடாளுமன்ற தெரிவுக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ள தாகவும் குறிப்பிட்டுள்ளார். வடமாகாணத்துக்கு அரசு உதவும் வழிமுறைகள் குறித்தும் சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வருட வரவு - செலவு திட்டத்திலிருந்து 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இந்தியா அளித்த ஆதரவுக்காக பிரதமர் மோடிக்கு மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார். நாங்கள் ஒன்றாகவே வாழவேண்டும், அதனால் பரஸ்பரம் உதவவேண்டும் என் மோடி தெரிவித்தார். (த)

## இராணுவத்தின

குழு அமர்வு கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றுவருகின்றது. முழங்காவில் மகாவித்தியாலயத்தில் கடந்த இருதினங்களாக இடம்பெற்ற அமர்வு நேற்றையதினம் பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த அமர்வுக்கு 57 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 47 பேர் வந்து சாட்சி யமளித்தனர். சாட்சியமளித்தவர்களில் 43 பேர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே தமது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பிள்ளைகளை கட்டாயப்படுத்தி இணைத்தனர் என்றும், அதன் பின்னர் அவர்களைச் சந்திப்பதற்கு தமக்கு அனுமதிக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் தமது பிள்ளைகள் தப்பி ஓடி வந்த சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகள் மீளவும் கட்டாயப்படுத்தி கொண்டு சென்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் செல்ல முயற்சிக்கும் போது யாராவது உங்களைத் தடுத்தார்களா? என்று ஆணைக் குழுவினர் எழுப்பிய கேள்விக்கு, சாட்சிமளித்தவர்களில் 32 பேர் வரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்தனர் என்று தெரிவித்தனர். அத்துடன் பல தடவைகள் இராணுவத்தினரிடம் தப்பிச் செல்ல முயன்ற போதும் விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை என்றும், விடுதலைப் புலிகள் அவ்வாறு தப்பிச் செல்பவர்களைச் சுட்டனர் என்றும் சாட்சியமளித்தனர்.

இவை ஒருபுறமிருக்க, ஆணைக் குழுவின் நேற்றைய அமர்வுக்கு இராணுவத்தினரின் வாகனத்தில் சாட்சியமளிப்பதற்கு பொதுமக்கள் ஏற்றி வந்து இறக்கப்பட்டனர். அத்துடன் சிவில் உடையில் தம்மை புலனாய்வாளர்கள் என்று தெரிவித்து ஆணைக்குழு அமர்வு நடைபெறும் இடத்தில் பலர் நடமாடினர். அவர்கள், ஆணைக்குழு அமர்வில் சாட்சியமளித்தவர்கள் மற்றும் பங்கெடுக்க வந்திருந்தவர்களை ஒளிப்படங்களும் எடுத்தனர். அத்துடன் பிரதேச செயலகத்துக்கு வெளியே, இராணுவச் சீருடையில் இராணுவத்தினர் அளவுக்கதிமாக பிரசன்னமாகியிருந்தனர். சாட்சிகளை அச்சுறுத்தும் வகையிலேயே அனைத்துச் செயற்பாடுகளும் அமைந்திருந்தன. இந்த விடயம் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட பின்னர்,

ஆணைக்குழுவினர் புலனாய்வாளர்கள் என்று தெரிவித்தவர்களையும், இராணுவத்தினரையும் நீண்ட போராட்டத்தின் பின்னர் வெளியேற்றினர். இதனால் நேற்றுச் சாட்சியம் வழங்கியவர்கள் பதற்றமான சூழ்நிலையிலேயே தமது சாட்சியங்களைப் பதிவு செய்தனர். (ந-5)

## வெற்றிலைக்கேணி

களதும், மக்கள் பிரதிநிதிகளதும் எடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளன.

மண்டலாய், தட்டங்கோடு, புல்லாவெளி ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 700 ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் தமது தேவைகளுக்காகக் கையகப்படுத்தும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்தக் காணிகளை நிலஅளவீடு செய்வதற்காக கடந்த ஜூலை மாதம் 21 ஆம் திகதி நில அளவையாளர்கள் முயன்றபோது பொதுமக்கள் காட்டிய கடும் எதிர்ப்பால் அது கைகூடவில்லை.

இந்த நிலையில், அந்தக் காணிகள் நேற்று அளவீடு செய்யப்படவுள்ளன என்று காணி உரிமையாளர்களுக்கு, நில அளவைத் திணைக்கள அதிகாரிகளால் கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதையடுத்து காணி உரிமையாளர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் நேற்று அந்தப் பகுதியில் திரண்டனர்.

கடந்தமுறை நில அளவீட்டை மேற்கொள்ள முயற்சித்தபோது, பொதுமக்களின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிட்டதால், இம்முறை தமக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு பொலிஸாரை அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்துமாறு நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் கோரியிருந்தனர். ஆயினும் பொலிஸார் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை.

இந்தநிலையில் காணிகளை அளவிடுவதவதற்கு வந்த அதிகாரிகளிடம், காணி உரிமையாளர்கள் தமது காணிகளுக்கு உரிய ஆவணங்கள் உள்ளன என்று தெரிவித்ததுடன், முன்னர் தாம் அந்தப் பகுதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர் என்றும் தெரிவித்தனர். அத்துடன் காணிகளை அளவிடும் நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பையும் வெளியிட்டனர். வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வை நகர சபை உபதலைவர் சதீஸ் ஆகியோரும் மக்களுடன் இணைந்து எதிர்ப்பை வெளியிட்டனர். இறுதியில் தமது காணிகளை அளவீடு செய்யவேண்டாம் என்றுகாணி உரிமையாளர்கள் கையெழுத்திட்டு கடிதம் ஒன்றை, மக்கள் பிரதிநிதிகள் ஊடாக நில அளவை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அதன்பின்னர் தமது பணிகளை முன்னெடுக்க முடியாத நிலையில் நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் திரும்பிச் சென்றனர். (ந-4.5)

## யாருக்கு

நேற்று ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளிக்க வந்திருந்த பொதுமக்கள் இராணுவத்தினர் தம் மைக் கட்டாயப்படுத்தி அனுப்பினர் என்று குற்றஞ்சாட்டினர். அத்துடன் அமர்வு நடைபெற்ற இடத்தில் இருந்த சிவிலுடை தரித்த சிலர், சாட்சியமளித்த போது கண்காணித்தனர் என்றும், தம்மை தனியாக விசாரித்தனர் என்றும் அந்த மக்கள் மேலும் கூறினர்.

"நாங்கள் பிள்ளைய காணேல்ல எண்டு அலைஞ்சு போட்டு எப்பன் களைப்பாறினா இவங்கள் தங்களுக்காகவாவது போங்கோ எண்டு கலைக்கிறாங்கள். இஞ்ச வந்தா நேற்று பதிஞ்சாக்களுக்கு பதிவில்லையாம் ஏன் வந்தநீங்கள் எண்டு கினம். என்ன செய்யிறது எண்டு தெரியேல்ல. எத்தின தரம்தான் பஸ்சுக்கு காசு குடுக்கிறது?. பஸ்சும் எப்பவாவது தான் வரும் நாங்கள் படுகிற கஷ்ரங்கள் ஆருக்கு தெரியும்?. பிள்ளைய காணேல்ல எண்ட கவலைய விட இவங்களின்ர தொல்லை படுமோசமா கிடக்கு." - என்று வேதனையோடு அவர்கள் தெரிவித்தனர்.

காணாமற்போனோர் ஆணைக் குழுவின் நேற்றைய அமர்வில், பிரதேச செயலகத்துக்கு வெளியே இராணுவத்தின் பிரசன்னம் மிக அதிகமாக இருந்தது. சிவிலுடையிலும் இனந்தெரியாதோர் பிரதேச செயலகத்துக்குள் நடமாடித் திரிந்தனர் என்றும் மக்கள் தெரிவித்தனர். அதனால் சாட்சியமளிக்க வந்திருந்த மக்கள் அச்சத்துடனேயே காணப்பட்டனர். (ந-21)

## இந்திய

மாதம் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கச்சதீவுப்பகுதிக்கு அண்மித்த பகுதியில் நேற்றுமுன்தினம் மீன்பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 4 பேர் படகு பாறையுடன் சிக்குண்டதால் நடுக்கடலில் தத்தளித்தனர். அந்தச் சமயம் அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை மீட்டு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின்குமார் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அதேவேளை, பாறையுடன் சிக்குண்ட படகு நெடுந்தீவில் இருந்து 4மைல் தூரத்தில் கரைக்கு கொண்டுவரப்படாத நிலையில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-14,4)

## இரண்டு

பேர் பாதிப்படைந்தனர். 5 வீடுகள் முழுமையாகவும் 60 வீடுகள் பகுதியளவிலும் சேதடைந்தன.

கடந்த 25 ஆம் திகதி பெய்த மழையால் வவுனியா பிரதேச செயலர் பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் பாதிப்படைந்தனர். ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்தது. வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர் பாதிப்படைந்தனர். ஒரு வீடு முழுமையாகச் சேதடைந்தது.

வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிப்படைந்தனர். 19 வீடுகள் முழுமையாகவும் சேதடைந்தன.

கடந்த இரு தினங்கள் வவுனியாவில் மழை பெய்துள்ள நிலையில், அதனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்த தகவல்கள் இன்னமும் முழுமையாகப் பெறப்படவில்லை என்று ரி.என்.சூரியராஜா தெரிவித்தார். (ந-14,402)

## ருசி

சிக்கிக் கொண்டார். இந்தச் சம்பவம் தாவடியில் உள்ள முருகன் ஆலயம் ஒன்றில் நடந்துள்ளது. திருட வந்தவரும் அவரைத் திருட அனுப்பியவரும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் குறித்த கோயிலில் பகல் பூசைகள் நிறைவடைந்ததும் அங்கு சென்ற குறித்த நபர் வள்ளியின் வெள்ளி முடியை லாவகமாகத் திருடிச் சென்றுள்ளார். 40 ஆயிரம் ரூபா பெறுமதியான அந்த முடியை, 5 ஆயிரம் ரூபாவுக்கு இரும்பு வியாபாரி ஒருவருக்கு விற்றுள்ளார். நேற்று தெய்வானையின் முடியையும் திருடும் நோக்கில் குறித்த நபர் கோயிலுக்குச் சென்றுள்ளார். ஆயினும் நேற்று அவர் பொதுமக்களிடம் சிக்கிக் கொண்டார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரும் புத்தூர் கலைமதியை வசிப்பிடமாகவும் கொண்ட பூ.நிரோசன் என்ற சந்தேக நபரே முதலில் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அவரைத் திருட அனுப்பிய, ஐந்து சந்திப் பகுதியில் இரும்பு வியாபாரம் செய்யும் புத்தளத்தைச் சேர்ந்த பியானுள் அப்பீன் முகமட் ரஸீஸ் என்பவரும் கைது செய்யப்பட்டார். வள்ளியின் வெள்ளி முடியும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது.

இவர்கள் இருவரையும் சுன்னாகம் பொலிஸார் மல்லாகம் நீதிவான் எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ந-4)

## குற்றங்களும் கைதுகளும்

வலி.தென்மேற்கு

### இருவருக்கு அபராதம்

சுகாதார விதிமுறைக்கு முரணாக விற்பனைக்காக ஐஸ்கிறீம் தயாரித்த ஒருவருக்கும், அனுமதியின்றி யூஸ் பைக்கற் தயாரித்த மற்றொருவருக்கும் தலா 2,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சண்டிலிப்பாய் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது அனுமதியின்றி யூஸ் பைக்கற் தயாரித்த ஒருவரும் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக ஐஸ்கிறீம் தயாரித்த வரும் மாட்டிக் கொண்டனர்.

அவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிவான் இவர் களுக்கு தலா 2000 ரூபா அபராதம் விதித்துள்ளார். (வ–115)

கிளிநொச்சி

### சிறுவனைத் தாக்கிய சந்தேக நபர்கள் கைது

கிளாலிப் புகுதியில் பதின்மூன்று வயதுச்சிறுவன் ஒருவரைத்தாக்கிய இரு சந்தேக நபர்களை பளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சிறுவன் கிளிநொச்சி பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளாலிப்பகுதியில் நேற்று முன்தினம்மாலை பதின்மூன்று வயதுச்சிறுவன் ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் இரு சந்தேக நபர்களை பளைப் பொலிஸார் கைது செய்துள் ளதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (வ–55)

# திருகோணமலை அரச அதிபரை இடை நிறுத்துமாறு ஆர்ப்பாட்டம்

திருகோணமலை மாவட்ட, அரசாங்க அதிபரை சேவையிலிருந்து இடைநிறுத்துமாறு கோரி; திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நேற்று திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

2006ஆம் ஆண்டு அரச அதிபராக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் டி.டி. ஆர்.டி சில்வாவுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைபிரதேச செயலர்களின் அரச கடமைகளை மேற்கொள்வதற்கு, அரச அதிபர் தடையாக இருப்பதாகவும் அவரை உடனடியாக இடம் மாற்றக் கோரியும் பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'அரச அதிபரை இடமாற்றம் செய்வதற்கான கடிதம் கடந்த 15ஆம் திகதி கிடைக்கப் பெற்றதுடன் அவருடைய பதவிக்கு வேறொருவரும் நியமிக்கப்பட்டார்.

எனினும் தமக்கான இடம் மாற்ற கடிதத்தை நிராகரித்து விட்டு அரசாங்க அதிபர் சேவையில் ஈடுபட்டுள்ளார்' என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

'திருகோணமலைபட்டணமும் சூழலும் பிரதேச செயலர் அரச அதிபரினுடைய கைபொம்மையாக இருக் கின்றார்' என்றும் ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, அரச அதிபரை இடம்மாற்றம் செய்யக்கூடாது என்று கோரி திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு முன்பாக, அலுவலக ஊழியர் களும் பொதுமக்களும் மற்றுமொரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு கந்தளாய் கோமரங்கடவல பிரதேசத்திலுமிருந்து பொதுமக்கள் வந்து கலந்து கொண்டுள்ளனர். (வ)

# மாணவரின் ஆர்ப்பாட்டத்தின்போது மோதல் ஏற்பட்டு ஒருவர் காயம்

*வாழைச்சேனை அந்நூர் பாடசாலையில் சம்பவம்*



மட்டக்களப்பு, செப்.30

வாழைச்சேனை-அந்நூர் தேசிய பாடசாலை மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது இடம்பெற்ற மோதலில் மாணவர் ஒருவர் காயமடைந்து வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை மாணவர்கள் பாடசாலை பிரதான கதவை மூடி பாடசாலை முன்பாக பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்.

பாடசாலையில் கணித, விஞ்ஞான ஆய்வு கூடமும், கட்டடமும் கையேற்கப்பட்டு அருகாமையில் உள்ள ஆயிஷா பெண்கள் பாடசாலைக்கு கையளிக்கப்படவுள்ளமையால், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த போராட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

மேலும் ஓட்டமாவடி, மீராவோடையில் உள்ள பாடசாலைகளில் விஞ்ஞான, கணித துறைகளை வளர்ப்பதற்கான முயற்சிகளும், நடைமுறைகளும் மிகக் கூடுதலாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், ஆரம்பத்தில் ஒன்றாக இருந்த பாடசாலையானது ஆண்கள், பெண்கள் என திட்டமிட்டு பிரிக்கப்பட்ட பிற்பாடே பின்னடைவை சந்தித்து வருவதாகவும் சுட்டிக் காட்டிய மாணவர்கள் இது சம்பந்தமான துண்டுப் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டனர்.

மாணவர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக உடனடியாக பாடசாலைக்கு முன்பாக உள்ள வீதிக்கு விரைந்து வந்த வாழைச்சேனை பொலிஸ் அதிகாரிகள் பாட சாலை அதிபர் பிர்தௌஸுடனும், ஆசிரியர்களுடனும், பொதுமக்களுடனும் இது தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

எனினும் வலயக் கல்விப் பணிப்பாளர் உடனடியாக இதற்குரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் மாணவர்கள் பலர் காயமடைந்தனர். அவர்களில் உயர்தர மாணவன் ஒருவர் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ)

## நெல்லியடிச் சந்தையில் தரகர்களால் தொல்லை

### பொதுமக்கள் விசனம்

நெல்லியடி, செப்.30

நெல்லியடி சந்தையில் தரகர்களின் செயற்பாடுகளால் தமது விளை பொருள்களை விற்பனை செய்யச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

நெல்லியடி மத்திய சந்தையில் தமது விளை பொருள்களை விற்பனை செய்வதற்கு வடமராட்சி, அச்சுவேலி ஆகிய பகுதிகளில் இருந்து பெருமளவு விவசாயிகள் வருகின்றனர்.

அவர்களைச் சந்தை வாயிலிலேயே வழி மறிக்கும் தரகர்கள், அவர்களின் உற்பத்திப் பொருள்களை குறைந்த விலையில் சந்தை வியாபாரிகளுக்கு பெற்றுக்கொடுக்க முயற்சிப்பதோடு, அதற்கு மறுக்கும் விவசாயிகளுடன் முரண்பட்டும் கொள்கின்றனர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது.

தரகர்களின் இவ்வாறான செயற்பாடுகளால் தமது விளை பொருள்களை விற்பனை செய்ய வருவோர் மட்டுமன்றி, பொருள்களை வாங்க வரும் பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

பொதுமக்களின் நலன்கருதி, நெல்லியடிச் சந்தையில் இவ்வாறான தரகர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-108)

# சேவைகள் தொடர்பாக வழிகாட்டும் பதாகைகள்

ஆலையடிவேம்பில் நேற்று வெளியீடு



மட்டக்களப்பு, செப்.30

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் சேவைகள் தொடர்பாக, வழிகாட்டும் பதாகைகளை வெளியீடு செய்யும் நிகழ்வு ஆலையடி வேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எம். எம்.அமீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஆலையடிவேம்பு பிரதேச செயலர் வி.ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். கிராமமட்டப் பணிமனைகளில் காட்சிப்படுத்தும் நோக்கில் குறித்த பதாகைகள் பிரதேச அலுவலர்களுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆலையடி வேம்பு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு முன்னெடுத்த இந்த வேலைத் திட்டமானது பொதுமக்களுக்கு வழங்கப் பட்டுவரும் சேவைகள் தொடர்பான விரிவான தகவல்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. (வ)

# கிழக்கில் குறைவடையும் தமிழ் மக்கள் எண்ணிக்கை

## மட்டக்களப்பு மாவட்ட சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,செப்.30

வட்டுக்கோட்டை தீர்மானம் கடந்த, 1976ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டபோது கிழக்கு மாகாணத்தில் 50 வீதமாக வாழ்ந்த தமிழ் மக்களின் நிலை 1987ஆம் ஆண்டு 44 வீதமாகவும் தற்போது 34 வீதமாகவும் குறைவடைந்துள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட சுதந்திர கட்சியின் அமைப்பாளரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான அருண் தம்பிமுத்து தெரிவித்தார்.

இதற்கு பிரதான காரணம் கடந்தகால போரும் தமிழர்களின் புலம்பெயர்வும்தான் என்றும் அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற விவசாயப் பிரதிநிதிகளினுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

தேசிய அரசியலை பிறநாட்டு அரசியல்போன்று பார்க்கும் தமிழர்களின் அரசியல் பலவீனத்தாலேயே பல பிரதேசங்களை இன்று நாம் இழந்துள்ளோம். தமிழ் மக்களின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது. இந்தநிலையில், அரசியல் தீர்வுபற்றி எவ்வாறு சிந்திக்க முடியும்?

ஆலையடிவேம்பிலும் பல கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்அக்கரைப்பற்றுடன்இணைக்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன்.

இதற்கு காரணம் யார்? தமிழ் மக்களின் பலவீனமான அரசியல் என்பதே யதார்த்தமான உண்மை. இவ்வாறான நிலை மட்டக்களப்பிலும் இடம்பெறலாம்.

கடந்த காலங்களில் அம்பாறை மக்களால் தெரிவுசெய்யப்பட்டு நாடாளுமன்றம் அனுப்பி வைக்கப்பட்ட பிரதிநிதிகளாவது சிறந்த சேவையை இங்கு வழங்கி இருந்தால் ஏனைய அரசியல்வாதிகள் இங்கு வரவேண்டிய அவசியம் இருந்திருக்காது.

வட்டைமடு மேய்ச்சல் தரை பிரச்சினை, கல்முனை பிரதேச செயலக தரமுயர்த்தல் உள்ளிட்டவை தீர்க்கப்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் இன்று வரை இந்த விடயங்களில் மௌனிகளாகவே செயற்படுகின்றனர்.

இருந்தபோதும் இவ்விரு விடயங்கள் குறித்தும் ஜனாதிபதியிடம் நான் பேசியபோது அடுத்த மாதத்தினுள் இவற்றுக்கான தீர்வைப் பெற்றுத் தருவதாக அவர் உறுதியளித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு அரசு அதிக சலுகைகளை வழங்குவதாக சிலர் கூறுகின்றனர். அது உண்மை. ஏனெனில் அவர்கள் அரசுடன் உள்ளனர். யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் பக்கம் சாய்ந்து தங்களது சமூகத்துக்கு தேவையானவற்றை பெற்றுக் கொள்கின்றனர். நாம் அவ்வாறல்லாமல் யார் ஆட்சி செய்தாலும் எதிர்க் கட்சி என்ற கொள்கையில் மாறாதவர்களாக உள்ளோம்- என்றார். (வ)

**BIOLOGY**
Personal Classes
and Group Classes
Contact Number : 075 682 5345
(52899)(7.6.3)
யாழ் முன்னணி வழமையான ஆசிரியர்

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதிய மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 04.10.2014
பிரிவு 1. காலை 8.00-10.00 பிரிவு 2. காலை 10.00-12.00
திங்கள், புதன் பிரிவுகள் ஆரம்பம் - 06.10.2014
1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00
20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

## மாவைக்கு திருமலையில் வரவேற்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா, கட்சியின் புதிய பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் (கிழக்கு மாகாண சபை உறுப்பினர்) ஆகியோரை வரவேற்கும் நிகழ்வும், தமிழரசுக் கட்சியின் எட்டாவது தலைவராக இருந்து அரும் பணிகளாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பாராட்டு நிகழ்வும் நேற்று திருகோணமலையில் நடைபெற்றன.

தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் மாலை 4.30 மணிக்கு திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

கிழக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவரும் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையின் தலைவருமான சி.தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை திருகோணமலை நகர சபைத் தலைவர் க. செல்வராஜா (சுப்ரா) நிகழ்த்தினார்.

**DCM**
கணக்கீடு
AP.பகீரதன் B.B.A(Hons), M.Spl
மாலை நேர புதிய பிரிவுகள்
A/L 2016
கணக்கீட்டுச் சமன்பாடு
திங்கள், புதன் 4.30 - 5.30
ஆரம்பம் - 01.10.2014
புதன், மாலை 4.30
A/L 2015
Paper Class & Revesion
திங்கள், புதன் 5.30 - 6.30
ஆரம்பம் - 01.10.2014
புதன், மாலை 5.30

பாராட்டி வாழ்த்துகின்றோம்
அருமைநாயகம் டிலோஜன்

தரம் 5 புலமைப்பரீட்சையில் இளவாலை றோ.க.த ஆண்கள் பாடசாலையில் 165 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்தியுள்ளார் இவரைப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.
யோ.அருமைநாயகம்
வித்தகபுரம் (52717)(08)
பன்னாலை

**சாதனைப் பயணம் தொடர்கின்றது.....**
**உசன் பகுதியில் திசை காட்டியின் சட்ட ஆலோசனையில் ஆஸ்திரேலியா குடும்பவிசா வெற்றி**

தென்மராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட அறிஞர்கள் சமயப் பெரியோர்கள் வணிக விற்பன்னர்கள் தோன்றிய நஞ்சையும் புஞ்சையும் விளையும் சிறப்புமிக்க சைவமும் தமிழும் செழித்தோங்கும்

**உசன் கிராமத்தில்**

முதன்முதலாக திசைகாட்டியின் ஆழமான நேர்மையான வலுவான சட்ட நெறிப்படுத்தலில்

J/329 உசன் கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த
P. விஜயசங்கர்
ஆஸ்திரேலியா குடும்ப விசா வென்றுள்ளார்

எனவே நீங்களும் உங்கள் கனவு நனவாக நாடவேண்டிய தனித்துவமான நிறுவனம் "திசைகாட்டி" மட்டுமே

**திசைகாட்டி பிறைவேட் லிமிடட்**
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
பதிவு இலக்கம் : PV 82703
இல.175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9016


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.